வாரவெளியீடு

# ஆதவன்

ஒளி: 10
20.08.2000
விலை ரூபா 12.00
Registered as a Newspaper in Sri Lanka

ராவய வெளியீடு
ATHAVAN



## எங்கள் உரிமையை தீர்மானிக்க மகாசங்கத்தினர் யார்?




## விடியலுக்காய் ஏங்கியவாறு

நேற்றை இரவுகள்
எப்படியோ வழமைபோல
இருண்டவாறு
கழிந்து விட்டன.

நாளைய பகல்
துரத்தப்பட்ட தசாப்த பகல்.

இன்னும்
வந்தது போலவே
சமூக நிஷ்டூரத்தினில் சிக்கி
சூரியனும் அதன் சந்திரனும்
விளங்கும்.
ஓட்டைக் குடிசைகளில்
வரண்ட கற்பிதங்களோடு
என் மக்களுடன் வாழ்கிறேன்

பதினோராவது வருடத்திலேனும்
தொப்புள் கொடி புதைத்த
மண்ணில் மீண்டும்
வாப்பா உம்மா வாப்பும்மாவுடன்
நிலாக் கதை கேட்கலாமென்ற
நிர்மலமான ஏக்கத்துடன்

நாளைய விடியலுக்காய்
ஏங்கியவாறு!

*பர்ஸான் முஹம்மத்,*
*அட்டாளைச் சேனை 11.*

## தேடல்

அது தான் வேண்டுமென்று
பிடிவாதம் செய்கிறாய்
நான் யாரிடம் கேட்பது?
எங்கே போய்த் தேடுவது?
தொலைந்து விட்டதாகத்தான்
தோன்றுகிறது. ஆனாலும்
உனக்காகவே தேடுகிறேன்.
கார்த்திகை மாசத்து
காரிருள் பிறைக்குள் தேடினேன்.
கோயில் கோபுரத்தில் குடியிருக்கும்
புறாக் கூட்டத்திலும் தேடினேன்
தொங்கும் சிலுவைகளில்
போதி மரத்து நிழல்களில்
எங்குமே காணவில்லை!
நீயோ அதுதான்
வேண்டும் என்கிறாய்.
இந்தா தருகிறோம் என்கிறார்கள் சிலர்.
கைகளில் சுடுகுழல்களின் சூடு
தணியாமலேயே!
உனக்கு மறுபிறவி மீது
நம்பிக்கை இருக்கிறதா? இருந்தால்
காத்திரு! காண்பாய் அப்போதும்
சுடுகுழல்கள் ஜனனிக் காதிருந்தால்.

*சத்திரியன்,*
*சிறிநகர் பூந்தோட்டம்,*
*வவுனியா.*

## பலியாடு

சிந்தனைக் குளங்களை
சாக்கடையால் மூடியும்
நெற்றியின் வியர்வையை
பணத்தால் துடைத்தும்
சத்திய நெறிகளை
வாயால் கட்டியும்
வாழ்க்கையின் விடியலை
அதிகாரத்தால் சிறைவைத்தும்
இருக்கின்ற அநியாயமே
உன் வேட்கைக்கு
தமிழராகிய நாம் பலியாடா?

*மேகலா பர்னாந்து,*
*கொழும்பு.*

## மலை மாந்தர்

யாரவர்கள்?
அந்த பச்சை மலையுச்சியில்...!
மன்னிக்க வேண்டும்
பிரபு....
நம்மரசு பிடுங்கியெறிந்த
வாழக்கையைத் தேடும்
வரலாற்று மாந்தர்கள்.

*வே. தினகரன்,*
*கெலிவத்தை,*
*பத்தனை.*

## சுயநலம்

தேசத்தைத் துண்டாடக்
கசந்து நிற்கும் காலத்தில்
தேசத்தைஒன்றாக்கும் திட்டம்!
வேசத்தைக் காட்டாதமேல்சாதி
அசையாமல் மறைந்திருக்க
நாசத்தை இருபகுதி விளைவித்து
நஞ்சூட்டும் யுத்த முனை!

சாந்தி சமாதானம் ஒன்றேகுலம் தெயவம்
ஏந்தியும் மனிதன் இன்னும்
நெருங்கவில்லை!
நெருங்காத மனிதனுக்கு
வருங்காலம் இல்லை யவன்
தரும் செயற்பாடு தகுதியுடனாகு மெனின்
தலைபோகும் காரியமும் சரியாகும்!
வாசமுள்ள பூ மலர்ந்து தேன்சிந்தும் வேளை
வேசமிலாப் பூநக்கி மொய்த்துக்
கூசாமல் தன்தாயகமாயதை ஆக்கி
ஊசாடி உண்டு களித்துச் செல்வதெல்லாம்
பாசாங்கல்ல பசிதீர்க்கும் எத்தனமே!
ஏசுவது இப்போது யாரை யார்?
நாசம் விளைவிக்கும் பெருளாசையிது!

சொந்த நலத்தைச் சொருகி ஒரு கூட்டாக்கி
வந்து நிற்போர்மீது வருந்தும் சொல்லிறுக்கி
எந்தவொரு திட்டமுமில்லாதசெயற்பாடு
இந்தமனிதருக்கேன்?
சந்தி சிரிக்கும் சலிப்பான செய்திகளைச்
சிந்தனையில்லாத செயற்பாடு
முந்துவது நம் தகுதிக்கு ஈனம்தானே!

**கவிஞர் ஏ.இக்பால்.**

## ஒன்றுமில்லாத போதிலும்...........

வாங்க வக்கில்லாத போது
பஞ்சாமிர்தத்துக்குப் பதிலாகப்
பொறிகடலைப் பொட்டலம்
வியாபாரப் பிரசித்தி.

"டைட்டானிக்"
"பொற்காலம்"-என
வளையல் வண்டி முன்
கனவுகள் விரிய
கன்னிப் பெண்கள்.

அடம் பிடிக்கும்
பிள்ளைகளோடு
பலூனையும் சுமக்கும்
அப்பாக்கள் ஏராளம்

திருப்பதி தெரியாத
தெருவாசிகளுக்குத் தோதாய்
சவரக்கத்தியோடு
காத்திருக்கும்
மஞ்சள் துணிப்பைகள்.

ஏகப்பட்ட கிராக்கிகளோடு
ஏற்றுமதியாகும்
வீடுகளுக்கென,
விரித்த கடைகளில்
மொய்க்கும் கூட்டம்

மோர்ப் பந்தல்
அன்னதானம் உட்பட
அத்தனைக்காகவும்
திருவிழாவாகிறது.
திருத்தலமாகிறது.
உள்ளே
ஒன்றுமில்லையெனினும்.

*-மகேந்திரன்.*

## தேர்தல்

"வாக்குறுதி வரும்முன்னே,
தேர்தல் வரும் பின்னேஇது
நாம் வாழ்வில் கண்ட பாடமெல்லோ!
சொன்னசொல் காப்பாற்ற யாருமில்லை எம்
துன்பம் நீங்கி துயர்நீங்கும் காலமிங்கு
இன்று இல்லை!

பொதியென்ற பொறிவைக்கும் படலத்திற்கு
கைதூக்கி தீவினிலே தமிழழிக்க பலருண்டு
புரிந்திடுவாய் தமிழினமே!

*ஆர். வன்னிமகள்,*
*கொழும்பு 06.*

## (சு)தந்திரம்?

சுதந்திரப் புறாவைப்
பிடித்து கூட்டிலடைத்து
சிறைக் கைதியாக்கி.....
மீண்டும் பறக்கவிடும்
பரிதாப நிலை இழிந்ததுதான்
இங்கு
பேசப்படும் சுதந்திரமோ?


*முத்து சம்பந்தர்,*
*கலைமகள் மகாவித்தியாலயம்,*
*கண்டி.*

## நடப்பு

கண்விழி பிதுங்கி
முதுகை
வளைத்து
உன்னி
மூச்சைப் பிடித்து
பாரமோ ஆளோ
ஏற்றிப் போகும்
போது
பாவமாகத்தானிருக்கும்
பார்க்க
என்றாலும்
எப்போதாவது
எனக்கென்னும் போது
என்னாலும் முடிவதில்லை
பேரம் பேசாமலிருக்க

*-மா.கண்ணன்*

## வாசகர் குரல்



அன்புடையீர்,

வாரந்தோறும் தொடர்ந்து வெளிவரும்ஆதவன் ஒளிகளைப் படித்து வருகிறேன். ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில், சஞ்சிகை பத்திரிகைத் தளத்தில் உள்ள வெற்றிடம் ஒன்றை ஆதவன் நிறைவு செய்யும் என்பது எனது நம்பிக்கை. அந்த வகையில், தாங்கள் தரும் அரசியல், சமூக, பொருளாதார இலக்கிய பல்சுவை அம்சங்கள் மிகவும் சமகாலப் பொருத்தமும் தேவையும் உடையன. அப்பணி தொடர வாழ்த்துக்கள்.

மேலும் பத்திரிகையின் பக்க வடிவமைப்பில் சற்று கவனம் பெற வேண்டும் அதனால் இன்னும் கனதியான அமைப்பைப் பத்திரிகை பெற முடியும்.

அத்துடன் இரண்டாம் பக்கத்தில் இடம் பெறும் கவித்தடாகம் பகுதியில் விகடகவி என்பவர் தரும் விடயங்கள் கவிதையா அல்லது ஏதும் ஆசிரிய தலையங்கமா என்பது புரியவில்லை. அது இரண்டும் இல்லாமல் இடத்தை நிரப்புவது பத்திரிகையின் பார்வையைத் தடுமாறச் செய்கின்றது இவ்விடயத்தில் சற்றுக் கவனம் தேவை. (விகடம் இல்லா விடயம்).

*அன்புடன்*
*மாவை வரோதயன்.*

அன்பின் ஆசிரியருக்கு,

ஆதவன் வெளிவருவதையிட்டு மிக்க மகிழ்ச்சி. ஏனெனில் தமிழில் சரிநிகர் ஒன்றுதான் இவ்வளவு காலமும் மாற்றுப் பத்திரிகையாக வெளிவந்து கொண்டிருக்கிறது. அத்தோடு, ஆதவன் இன்னுமொரு மாற்றுப் பத்திரிகையாக எமக்கு கிடைத்திருக்கிறது. அரசியல் இலக்கிய கட்டுரை மற்றும் சிறுகதைகள் தரமாக உள்ளன. ஆனால் பின் (இறுதி) பக்கத்தில் உள்ள இரண்டு பி.கே. சாமிகள் பத்திரிகையின் நோக்கத்தையே கெடுத்து விடும்.

*ப.சிருந்தன்,சிறி சித்தார்த்த வீதி,*
*கிருலப்பனை.*

தங்கள் பத்திரிகையைப் பார்த்தேன், பார்ப்பதற்கு முன்பக்கம் கவர்ச்சியாக இருக்கின்றது. வாங்கவேண்டும்போல் ஒரு உணர்வை ஏற்படுத்துகிறது. உள்ளே பல நல்ல விஷயங்கள் சிறுகதை, கட்டுரை, நூல் விமர்சனம், நூல்அறிமுகம் இப்படிப் பல அம்சங்கள்.

இன்று பல பத்திரிகைகள் தமிழ்மக்களின் அவலங்களையும் அலங்கோலங்களையும் இழப்புகளையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. எந்த அளவிற்கு இவைகளில் உண்மைத் தன்மை இருக்கின்றதென்பதை உணர்ந்து கொள்ள முடியவில்லை. எது எப்படி இருப்பினும் இவன் பற்றிய தகவல்கள் அம்பலப்படுத்துகின்றன. அந்த வகையில் ஆதவனும் தன் பங்களிப்பை நியாயமாகவே செய்கின்றது. நன்றி. இது நிலைக்க வேண்டும், நீடிக்க வேண்டும்.

*கலாவிநோதன்*

ஆசிரியர்,

ஒரு சமுதாயத்தின் அழிவு நிலையானது அதைவிடப் பெரிய இனத்தால் அவ்வினம் ஒடுக்கப்படுகின்ற போது, அல்லது அச்சமூகத்திலிருந்து தோன்றும் சுயநலம் கர்வம் ஆதிக்கவர்க்க மனோபாவம் கொண்டவர்களால் ஆரம்பமாகும். ஹிட்லரைப்போல் மாறாக ஒரு சமூகத்தின் வெற்றிக்கும் ஒரு குழுமத்தின் உயர் பாண்பர்ட்டு வாழ்வியல் நிலைக்கும் அக்குழுமங்களிலிருந்து தோன்றும் நபர்கள் குழுக்கள் ஆகியன முக்கிய பாத்திரம் அவர்களால் ஏனைய சமூகம் குழுமங்களிலிருந்து விடுதலையையும் அந்த சமூகத்திற்கு வழங்க முடியும்.

இந்த வகையில் அப்பாத்திரத்தினை ஏற்போர் (நிர்வாகிகள்) அரசியல் வாதிகள் அல்லது அக்குழுமத்தில் தோன்றிய நல்ல படைப்பாளிகள் யாதார்த்தம் பேசுபவர்கள் நடைமுறையுடன் ஒன்றிசெல்பவர்கள் ஆவர். தீமையையும் அழிவையும் எதிர்ப்பவர்கள்.

அரசியல் வாதிகளை விட மனிதர்களுடன் நெருங்கி மானிட நேயமானவர்கள் பெரும்பாலும் படைப்பாளிகளாகத்தான் இருக்க முடியும். அதிலும் இளைஞர்களாய் அந்த இலக்கை நோக்கிச் செல்பவர்களுக்கு உரமிடுபவர்கள். அவர்களைப் போன்ற அதாவது உங்களைப் போன்ற ஊடகங்களின் தன்மையினை நன்கறிந்தோர். அந்த வகையில் அவ்விலக்கை எட்ட எத்தனிக்கும் எங்களுக்கு தாங்கள் அளித்த இடம் மகத்தானது. வரலாறு மெச்சுவது இதேவழியில் ஒரே சிந்தனைக் கோவையாக ஆதவனில் நாம் உதயமாகி என் சமூக அவலங்களையும் நிலைகளையும் படம் போட தொடராக உதவுவீர்கள் என்ற நம்பிக்கையுடன்!

*பர்ஸான் முஹம்மத்,*
*அட்டாளைச் சேனை-11.*

அன்புடையீர்,

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைப் பரப்பில் இருக்கும் ஒரு நல்ல பத்திரிகைக்கான வெற்றிடத்தை ஆதவன் நிரப்புகிறது. மாற்றுக் கண்ணோட்டம் என்பது அரசியல் ஊடகவியல் இலக்கியம், சமூகவியல் என்று சகல துறைக்கும் தேவையான ஒன்று. அத்தகைய தேவையை தனிநபர் சார்பு கருதி நிற்காமல் பொதுவான நிலை நோக்கிச் செயற்படும் ஆதவனின் குரல்கள் யாரும் வாசித்தறிய வேண்டியவையே.

*இ. சத்தியகுமாரன்,*
*தெஹிவளை.*

# அமைச்சு அலுவலகத்துக்குள் அந்தப்புரம்

## நிர்வாணமாக ஓடிய அமைச்சர்?

ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் மிகுந்த செல்வாக்குள்ள அமைச்சரொருவர் தனது அமைச்சிலுள்ள உத்தியோக பூர்வ அறைக்கு அருகில் இருக்கும் விசேட அதிதிகள் தங்கும் அறையில் இளம்பெண் ஒருவருடன் நிர்வாணமாக இருந்த போது திடீரென அங்கு வந்த அமைச்சரின் மனைவியினால் அந்த அறைக்குள்ளேயே துரத்தி துரத்தி தாக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த 12ம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணியளவில் கொழும்பு டிக்சன் வீதியிலுள்ள சுவசிறிபாயவிலுள்ள அமைச்சு அலுவலகமொன்றில் இடம் பெற்றுள்ளது.

அன்று அதே நேரம் ரூபவாஹினியில் நேர்காணலொன்றுக்கு செல்வதாக மனைவியிடம் கூறிய அமைச்சர் அந்தரங்க அறையில் இருந்தவேளை திடீரென அமைச்சு அலுவலகத்திற்கு தட்டச்சு செய்து கொள்வதற்காக அங்கு வந்த போது குறிப்பிட்ட அமைச்சரின் மனைவிக்கு அமைச்சரின் பிரத்தியேக பாதுகாப்பு அதிகாரிகள் அங்கு நிற்பதைக் கண்டதும் அமைச்சர் உள்ளேதான் இருக்கிறார் என நினைத்து அங்கு சென்றவுடன் அமைச்சரை காணவில்லை. அருகேயிருந்த பிரத்தியேக அறையை திறந்த போது அங்கே கண்ட சம்பவங்கள் அமைச்சரின் மனைவிக்கு அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் உண்டு பண்ணியவுடன் அங்கேயிருந்த கதிரையொன்றைத் தூக்கி நிர்வாணமாகவிருந்த அமைச்சரையும் அந்த இளம் பெண்ணையும் துரத்தித் துரத்தி தாக்கியுள்ளார்.

இதனையடுத்து திடீரென பாய்ந்து வந்த அமைச்சரின் பிரத்தியேக பாதுகாப்பு அதிகாரிகள் அமைச்சரின் மனைவியை இழுத்துச் சென்று அருகேயிருந்த அறையொன்றுக்குள் பூட்டி வைத்த பின்னர் அங்கிருந்து அமைச்சரும் குறிப்பிட்ட அந்தப் பெண்ணும் பாதுகாப்பு அதிகாரிகளால் வெளியே அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அதற்கு பின்னரே அமைச்சரின் மனைவி பூட்டிய அறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். தன்னை அறைக்குள் போட்டு பூட்டிய பாதுகாப்பு அதிகாரிகளை திட்டித்தீர்த்த அமைச்சரின் மனைவி இது அமைச்சு அலுவலகமா? அல்லது அந்தப்புரமா எனக் கேட்டு கூக்குரலெழுப்பிய பின்னரே அங்கிருந்து சென்றுள்ளார்.

இதேவேளை தன்னை அமைச்சின் அலுவலகத்தில் பாதுகாப்பு அதிகாரிகள் இழுத்துச் சென்று பூட்டிவைத்தமை தொடர்பாக அமைச்சரின் மனைவி பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கிற்கு முறைப்பாடு தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

அமைச்சரின் மனைவிக்கு அமைச்சு அலுவலகத்தில் நடக்கும் அந்தப்புர விடயம் தெரிந்தது இதுவே முதற்தடவையென்றும் இது வழமையாக நடைபெறும் சம்பவமென்றும் அங்கு பணிபுரியும் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

# அதிரடிப்படையை ஏவிய வவுனியா செயலக அதிகாரிகள்

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் வசிக்கும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தை திசை திருப்பவும், வவுனியா செயலக அரச அதிகாரிகள் அரசிடமிருந்து தமக்கு நற்பெயரை பெறவுமே விஷேட அதிரடிப்படையினரை ஏவி அந்த மக்களை கண் மூடித்தனமாக தாக்கிய சம்பவமாகுமென அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் வசிக்கும் மக்களுக்கு அரசினால் வழங்கப்பட்டு வந்த நிவாரண பணக்கொடுப்பனவுகள் கடந்த 2 மாதங்களாக நிறுத்தப்பட்டதை ஆட்சேபித்தே இங்கிருந்தவர்கள் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதே நேரம் இங்கு வசிக்கும் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களுக்கான குடிநீர், மலசலகூட வசதி, இடப்பிரச்சினை, சுகாதார சீர்கேடு, கல்வி போன்ற பல பிரச்சினைகளும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றையும் ஆட்சேபித்தே உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

நிலைமை இவ்வாறிருக்க அங்கு சென்ற வவுனியா செயலக அதிகாரிகள் உண்மை நிலவரத்தை அங்குள்ளோருக்கு விளக்காமல் தங்களைச் சுற்றி நின்று கேள்வி கேட்டவர்களை தாக்குவதற்கு விஷேட அதிரடிப்படையினரை அழைத்து அங்கிருந்தோரை கண்மூடித்தனமாக தாக்குவதற்கு நடவடிக்கையெடுத்துள்ளார்கள்.

இந்த தாக்குதலில் காயமடைந்த இருவர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதுடன், சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டமிருந்தவர்களின் அடிப்படைச் சுதந்திரமும் கொச்சைப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் பரிதாபத்துக்குரிய விடயம் என்னவென்றால் வவுனியா செய்தியாளர்களும் இந்தச் சம்பவத்தை செயலக அதிகாரிகளுக்கு சார்பானதாக வெளிக்காட்டியமையாகும்.




# குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த அஞ்சல் தலை கனடாவில் வெளியீடு!

தமிழன் வழிகாட்டி எனும் விளம்பரத் தொகுப்பினை ஆண்டுதோறும் வெளியிட்டு வரும் ஆதவன் வெளியீட்டாளர்கள் இவ் வருடம் கனடாவில் மாமனிதர் அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களுடைய உருவம் பொறித்த கனடிய அரசாங்கத் தபால் தலையை செப்டெம்பர் 15ம் திகதியன்று ரொறென்றோ மாநகரில் வெளியிட்டு வைக்க உள்ளனர்.

இத் தபால் முத்திரை கனடிய அஞ்சல் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இம் முத்திரையை அஞ்சல் உபயோகத்திற்குக் கனடாவில் பிரயோகிக்கலாம்.

பிரதம அதிதியாக கலந்து கொள்ளும் கனடிய பாராளுமன்ற உறுப்பினர் ஜிம் கரியியானிஸ் முத்திரையை வெளியிட்டு வைப்பார்.

இதனால் சேகரிக்கபடும் நிதியானது கனடிய பொது ஸ்தாபனங்கள் இரண்டிற்குப் பகிர்ந்து அளிக்க இருப்பதாகத் தமிழன் வழிகாட்டி அதிபர் செந்தில்நாதன் தெரிவித்துள்ளார்.

# தமிழ் கட்சிகள் தேர்தலை நோக்கிய கூட்டான முனைப்புகள்

மட்டக்களப்பு தேர்தல் களத்தில் இம்முறை சிறிசேனகுரேயின் புதிய கட்சியும் குதிக்கத் தீர்மானித்துள்ளது. பிரஜைகள் முன்னணி எனும் இக்கட்சியின் முக்கியஸ்தர்கள் அண்மையில் மட்டக்களப்பில் கூடி தேர்தல் வியூகம் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர். இதன்போது கட்சியின் தலைவர் சிறிசேன குரேயும் சமூகமளித்திருந்தார்.

இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆகக் குறைந்தது ஒன்பது அணிகளாவது போட்டியிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பொதுசன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, பிரஜைகள் முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், வடக்கு கிழக்கு முஸ்லிம் காங்கிரஸ் என்பன தனித்தும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (வரதர் அணி) என்பன கூட்டாகவும் போட்டியிடவுள்ளன. இந்த மூன்று கட்சிகளும் கூட்டமைத்துள்ள. ஏதாவது பிரச்சினைகள் ஏற்பாட்டால் சில வேளை ஏதாவது கட்சி தனித்தும் போட்டியிடலாம். இறுதி நேரத்தில் சுயேட்சைக் குழுக்கள் களமிறங்கினாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை.

– கதிர் –

# அமைச்சரின் அதிகார துஷ்பிரயோகம்

மாவத்தகம பகுதியில் உள்ள தமிழ்ப்பாடசாலை ஒன்றின் காணியை சுவீகரிக்க வடமேல் மாகாண அமைச்சர் ரஞ்சன் விக்கிரமசிங்க தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அறியக் கிடைத்துள்ளது.

அண்மையில் மாவத்தகம பிரதிச் செயலாளர் இங்கு விஜயம் செய்து காணியைப் பார்வையிட்டு தகவல்களைப் பெற்றுச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது விடயமாக பாடசாலை அதிபரிடமும், பிரதி அதிபரிடமும் பெற்றோர்கள் சென்று முறையிட்ட போதும் அவர்கள் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

தோட்ட மக்களின் பிள்ளைகளுக்கு சொந்தமாக உள்ள சில பாடசாலையை சீரழிக்கும் முயற்சியாகவே இந் நடவடிக்கை அமைந்துள்ளது. இது விடயமாக கல்விக் காரியாலயத்தைச் சேர்ந்தவர்களும் மௌனமாக உள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் இணைப்பதிகாரிக்கும், தமிழ் பாடசாலை பொறுப்பதிகாரிக்கும், அதிபருக்கும், பிரதி அதிபருக்கும் சில சலுகைகள் வழங்க அமைச்சர் முன்வந்தமையாலேயே இவர்கள் இது விடயமாக மௌனமாக உள்ளதாக பெற்றோர்கள் குறை தெரிவிக்கின்றனர்.

-விசாகன்-

## விக்டர் ஐவன் எழுதுகிறார்...

# ஜனாதிபதி சந்திரிகாவின் புதிய அரசியல் யாப்பு

புதிய அரசியல் யாப்பினை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி மேற்கொள்ளும் முயற்சியை இலங்கையில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள் இனப்பிரச் சினையைத் தீர்ப்பதற்காக அவர் மேற்கொள்ளும் நேர்மையான முயற்சியாகவே நோக்குகின்றனர். அம் முயற்சியில் ஏற்பட்ட தோல்வி தமிழ் முஸ்லிம் மக்களின் உள்ளத்தில் வேதனையை ஏற்படுத்தியது என்பது தவிர்க்க முடியாததொன்றாகின்றது. இருந்தாலும், இன்னொரு வகையில் நோக்கும்போது அவரது முயற்சி வெற்றி கண்டிருந்தாலும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு

ஜனாதிபதி, புதிய அரசியல் யாப்பின் மூலம் இனப்பிரச் சினைக்கான தீர்வொன்றைக் கூறுவதோடு, அது பிரபாகரனை தோற்கடிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதாகவும் கூறுகிறார். அது பிரபாகரனை தோற்கடிக்கும் நோக்கத்தில் தயார் செய்யப்பட்ட தொன்றெனில், தமிழ் மக்கள் பிரபாகரனுக்கு எதிராகச் செய்யும் யுத்தமொன்றிற்கு ஆதரவையும் நியாயத்தையும் வழங்குவதாகவே இதனைக் கருதுவார். பிரபாகரனை தோற்கடிக்கும் நோக்கத்தில் மேற்கொள்ளப்படும் இவ் யுத்தம் சிங்கள சமுதாயத்தில் ஒரு சிலரின் மனதில் மகிழ்ச்சியை

திட்டமென்றே கருதியது. இவ்வாறான தொரு நிலையில், தனது முழுச் சக்தியையும் பயன்படுத்தி அரசியல் யாப்பைத் தோற்கடிப்பதற்கான முயற்சியை நோக்கி ஐ.தே.கட்சியும் தள்ளப்பட்டது. இச்செயற்பாடு பற்றிய சந்தேகங்கள் எதிர்க்கட்ச்சிகளிடையே மட்டுமன்றி பொ.ஐ.முன்னணியின் சில அமைச்சர்கள் மத்தியிலும் நிலவியது. ஜனாதிபதியின் விருப்பத்திற்கு இணங்காத சில அமைச்சர்களை ஓரங்கட்டி அவரின் நம்பிக்கைக்கு பாத்திரமான ஒரு சிலரின் நிலையை பலப்படுத்தும் முயற்சியாகவே இதனை அவர்கள்

கிடைப்பதற்குப் பதிலாக நாட்டில் ஒரு இரத்தக் களரி ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

புதிய அரசியல் யாப்பு, "இனப்பிரச்சினைக்குத் தீர்வு எனும் பதாகையின் கீழ் மேலும் தமது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள மேற்கொள்ளப்பட்ட தந்திரோபாயமாகவே கருதப்படுகின்றது. ஜனாதிபதியின் தந்தையார் 1956ம் ஆண்டு இதற்குச் சமமான முறையில் அதிகாரத்தை வென்றெடுப்பதற்காக சிங்கள மக்களின் பிரச்சினைகளை ஆயுதமாகக் கொண்டார். அவரது மகளான சந்திரிகா குமாரதுங்கா தற்போது சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை ஆயுதமாகக் கொண்டு தன்னிடமிருந்து நழுவிக் கொண்டிருக்கும் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் முயற்சியாகவே இதனை மேற்கொண்டார்.



இலங்கையின் இனப்பிரச்சினை சத்திர சிகிச்சையின்றி குணப்படுத்த முடியாத ஒரு நோய்க்குச் சமமானதாகும். இருந்தாலும் இதற்கான அவசியமான சத்திர சிகிச்சை இலகுவானதல்ல. இதனை எல்லா சத்திர சிகிச்சை வைத்தியர்களாலும் செய்ய முடியாது. இது சம்பந்தமாக விசேட நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்களினால் மட்டுமே செய்யக் கூடியதொன்றாகும். அதனால் அதற்குப் பொருத்தமான வைத்தியர் ஒருவரை பெற்றுக் கொள்வதற்காகவுள்ள கஷ்டம் காரணமாகவும் குறுகிய புகழைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டியும் அதனைச் செய்ய முன்வரும் நிபுணத்துவம் பெறாத ஒரு டாக்டரிடம் அந்தக் காரியத்தை ஒப்படைப்போமெனில் சிலவேளை நோயாளி மரணிக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம். நோய் மிகவும் வேதனையானது. இருந்தாலும் வேதனையைத் தாங்கிக் கொள்ளாமல் நிபுணத்துவம் வாய்ந்த வைத்தியர் ஒருவர் கிடைக்கும் வரை தரம் குறைந்த வைத்தியர் ஒருவர் மூலம் இதனை செய்ய முற்படுவது பயங்கரமான விடயமாகும்.

இது முன்னுக்கு பின் முரண் பாடு கொண்ட பல்வேறு சக்திகளின் இணக்கங்களின் மூலம் முடிவுகான வேண்டியுள்ள மிகவும் சிக்கலானதொரு பிரச்சினையாகும். அதற்குப் பொருத்தமான அணுகுமுறையொன்று ஜனாதிபதியிடம் இருக்கவில்லை. அனைத்து சக்திகளும் பொது உடன்பாட்டிற்கு எதிராகப் போராடும் நிலைக்குத் தள்ளப்படும் விதத்திலான அணுகுமுறையொன்றே அவரிடம் இருந்தது.

ஏற்படுத்தலாம். ஆனால் இவ்வாறான யுத்தம் தமிழ் மக்களின் மனங்களில் திருப்தியை ஏற்படுத்தாது. மறுபுறத்தால் புதிய அரசியல் யாப்பின் நோக்கம் பிரபாகரனைத் தோற்கடிப்பதே எனில் அதற்கு பதிலாக தனது முழுச் சக்தியையும் பயன்படுத்தும் நிலைக்கு பிரபாகரன் தள்ளப்படுவதும் தவிர்க்க முடியாததொன்றாகி விடும்.

புதிய அரசியல் யாப்பை அமுல்படுத்தும் செயற்திட்டம், பாராளுமன்றப் பொதுத்தேர்த லொன்றுக்கான புதிய தேர்தல் முறையொன்றை உருவாக்கிக் கொள்ளும் முயற்சியுடன் இணைக்கப்பட்டிருக்கின்றது. இந்தச் செயற்பாடு தமக்கு பாராளுமன்றப் பிரதிநிதித்துவங்களைப் பெறுவதற்கான நியாயமான சந்தர்ப்பங்களுக்குத் தடையாக இருப்பதாகக் கருதி, மக்கள் விடுதலை முன்னணி, சிஹல உருமய போன்ற கட்சிகள் தமது முழுச் சக்தியையும் பயன்படுத்தி அதற்கு எதிராகச் செயற்படும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஐ.தே.கட்சியும் கூட இது இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நியாயமான முயற்சியொன்றாக கருதாமல், அதற்குமாறாக தனது கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்கள் சிலரை தந்திரமாக அரசாங்கத்தில் இணைத்துக் கொண்டு, எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் அரசின் கபடத்தனமான

கருதினர். நிறைவேற்று அதிகார மிக்க ஜனாதிபதிப் பதவிக்குப் பயந்து அவர்கள் அமைதியாக இருந்தாலும் மறைமுகமாக அதற்கு எதிராகவே செயற்படலாயினர்.

இருந்தாலும் ஜனாதிபதிக்கு மகா சங்கத்தினரோடு இருக்கும் உறவு வித்தியாசமானதொன்றாகும். தேவையான கௌரவத்தைக் கொடுத்து பொறுமையாக விளங்க

> சிக்கலான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முக்கிய பங்கினை வகிக்கும் தலைவர், எல்லோரினதும் நன்மதிப்பைப் பெற்ற தலைவர் ஒருவராக இருத்தல் வேண்டும். இல்லாவிடின் ஆரம்பத்திலேயே அப்பொறுப்பினை தான் ஏற்காமல் மாற்று முறையொன்றை ஜனாதிபதி கையாண்டிருத்தல் வேண்டும்.

ஜனாதிபதி மக்களோடு கொண்டிருந்தஉடன்பாடு சிறு பிள்ளைத்தனமானதாகும். மகா சங்கத்தினர் இலங்கையில் ஒரு பலம் வாய்ந்த சக்தியாகும். கிறிஸ்தவ மதத்தில் சிங்களவர்களும், தமிழர்களும் இருந்தாலும் பௌத்த விகாரை இதற்கு வேறுபட்ட தொன்றாகும். இலங்கையில் அது கணிசமான அளவில் சிங்களவர்களுக்கு மட்டும், உரித்தான ஒரு சமயமாகும்.

வைப்பதற்குப் பதிலாக கடுமையாக தொடுத்த தாக்குதல்கள் காரணமாக அவர்கள் திருப்பித் தாக்கும் நிலையொன்று ஏற்படலாயிற்று.

இனப் பிரச்சினைத் தீர்விற்காக ஒன்றுக்கு ஒன்று முரண்பாடான இனக்குழுக்களையும், அரசியல் கட்சிகளையும் பொதுவான உடன்பாடொன்றுக்குக் கொண்டு வரவேண்டும். இதுபோன்ற சிக்கலான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முக்கிய பங்கினை

வகிக்கும் தலைவர், எல்லோரினதும் நன்மதிப்பையும் பெற்ற தலைவர் ஒருவராக இருத்தல் வேண்டும். இல்லாவிடின் ஆரம்பத்திலேயே அப்பொறுப்பினை தான் ஏற்க்காமல் மாற்று முறை யொன்றைக் கையாண்டிருத்தல் வேண்டும்.

நெல்சன் மண்டேலா ஒரு கறுப்பு இனத்தவராயினும், அவர் கறுப்பு இன மக்களினது நன்மதிப்பை மட்டுமன்றி வெள்ளை இனத்தவர்களினதும் நன்மதிப்பைப் பெற்றவராக இருந்தார். எக்காரணம் கொண்டும் கறுப்பு இனத்தவர்களின் உரிமைகளை

விட்டுக் கொடுக்க மாட்டார் என்ற நம்பிக்கை கறுப்பு இனத்தவர்களிடையே நிலவும் போது, மண்டேலா ஒரு கறுப்பு இனத்தவராயினும் தமக்கு தீங்கு செய்யமாட்டார் என்ற நம்பிக்கை சிறுபான்மையினரிடையே நிலவியது. பொது உடன்பாடொன்றினை ஏற்படுத்தும் செயற்பாட்டினை பலதடங்கல்களுக்கு மத்தியில் தர்க்க ரீதியிலான முடிவொன்றை நோக்கி அவரால் கொண்டு செல்ல முடிந்தமை, பிரச்சினையோடு தொடர்புடைய எல்லாக் குழுவினரிடையேயும் அவர் பற்றியிருந்த நன்மதிப்பே இதற்கு காரணமாகும்.

இன்றைய நிலையில், சந்திரிகாவிடம் இந்தப் பலம் இல்லை. அவர் இந்த முயற்சியை 1994ம் ஆண்டு காலகட்டத்தில் தொடங்கியிருக்க வேண்டும். அவருக்கு அன்றைக்கிருந்த கௌரவம் இன்றில்லை. இன்று சிங்கள மக்கள் மட்டுமன்றி தமிழ் மக்களும் இவர் மீது நம்பிக்கை இழந்துள்ளனர். இவர் இதுபோன்ற செயல்பாட்டினை முன்னெடுக்க நினைத்திருந்தால் அனைத்து இன, சமயக் குழுக்களினதும் எல்லா அரசியல் கட்சிகளினதும் நம்பிக்கையைப் பெறும் வித்திலான அணுகுமுறையொன்றை அவர்

முன்னெடுத்துச் சென்றிருத்தல் வேண்டும். எதிர்கட்சிகளை வலுவிழக்கச் செய்யும் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளின் காரணமாக எந்தவொரு எதிர்க்கட்சியும் அவர் மேல் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. அவரது இன்றைய நிலை அவருக்கு மாத்திரமன்றி எதிர்காலத்தில் அதிகாரத்துக்கு வரக் காத்திருக்கும் எல்லாத் தலைவர்களுக்கும் பொருத்தமானதொன்றாகும்.

அதனால், மகா சங்கத்தினரிடம் சிங்களவர்களுக்கு மட்டும் சாதகமான கருத்துக்கள் இருப்பது இயல்பானதொன்றேயாகும்.

சிறுபான்மை மக்களின் பிரச் சினைக்குத் தீர்வு தேடும் ஒரு முயற்சிக்கு மகா சங்கத்தினரின் இணக்கத்தைப் பெற்றுக் கொள்வது கஷ்டமான காரியமொன்றாயினும் அவர்களுக்கான கௌரவத்தை வழங்கி, பொறுமையாக புரியவைக்கும் செயற்பாடொன்றின் மூலம் பலமான எதிர்ப்பைத் தெரிவிக்கும் நிலைக்குச் செல்ல விடாமல் அவர்களை தடுக்க முயற்சி செய்திருக்கலாம்.

இது போன்ற நெருக்கடிக்கு முன்வைக்கப்படும் தீர்வு யோசனைகளின் போது அதிகாரம் பற்றிய உள்நோக்கங்கள் இல்லாதிருத்தல் அவசியமாகும். அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, அல்லது அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொள்வதற்காக முன்னெடுக்கப்படும் செயற்திட்டமொன்றிற்காக அதிகாரத்தைப் பெற்றக் கொள்ளும் போட்டியில் மூழ்கியிருக்கும் எதிர்க்கட்சிகளை இணக்கத்திற்கு கொண்டுவருவது கஷ்டமான காரியமாகும். இன்னொரு புறத்தால் எந்த ஒரு நற் காரியம் செய்யும் போதும் சுயலாபத்திற்கான உள்ளார்த்தங்கள் இருக்கக் கூடாது. வறியவனான அயல் வீட்டானிற்கு உள்ளத் தூய்மையுடன் கைமாறு கருதாது உதவி செய்ய வேண்டும். அயல் வீட்டானின் காணியை அபகரிக்கும் நோக்கோடு உதவி செய்தால் அது நயவஞ்சகமாகும். இந்த அரசியல் யாப்பினை அமுல்படுத்திக் கொள்ளப் போகும் உள்நோக்கமும் இவ்விதமாகவே இருக்கின்றது. ஜனாதிபதி முறையை அவரது இரண்டாவது கால எல்லை முடியும் வரை கொண்டு செல்வதற்கான செயற்பாடுகளை இல்லாமல் செய்வதற்குப் பதிலாக உத்தியோக பூர்வ கால எல்லையின் பின்பும் தனது வாழ்நாள்

முழுவதிற்கும் சாதகமான முறை யொன்றாக அதனை மாற்றிக் கொள்ள எத்தனிக்கும் நிலை முழு அரசியலமைப்புச் சீர்திருத்த நடவடிக்கை செயற்பாட்டையும் கேலிக்குறியதொன்றாக மாற்றும் நடவடிக்கைக்கு ஒப்பானதாகும்.

கிளார்க் மண்டேலாவோடு உடன்பாடுகளுக்கு வருவதற்காக மேற்கொண்ட முயற்சிகள் தன்னிடமிருந்து அதிகாரத்தை மேலும் பலப்படுத்திக் கொள்ளும் நோக்கமாகவே இருந்திருப்பின் அதுவும் கேலிக்குறிய விடய மொன்றாகவே மாறியிருக்கும். இருந்தாலும் தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக தனது பதவியையும் கைவிடுவதற்கு அவர் காட்டிய விருப்பம் அந்த வெள்ளைத் தலைவர் மேல் கறுப்பு இனமக்களின் உள்ளங்களில் நன்மதிப்பு ஏற்படக் காரணமாகியது மட்டுமல்லாமல், வெள்ளையர்கள் மீதிருந்த வெறுப்பு உணர்வுகள் அதிக அளவில் குறையவும் ஏதுவாகியது. இங்கு மண்டேலாவாக முன்நிற்பது ஜனாதிபதி சந்திரிகாவின் உள்நோக்கமாக இருந்த போதிலும் இறுதியில் அவரால் ஒரு கிளார்க்காகவேனும் இருக்க முடியாமல் போயிற்று என்பது இங்கு ஒரு கசப்பான உண்மையாகும்.

ஆதவன்

இல-83, பிலியன்தல வீதி மஹரகம
தொலைபேசி எண் - 851672. 851814
விநியோகப் பிரிவு - 842064
தொலைமடல் - 851814

## வாசகர் உரிமை!

தம்மைப் பாதிக்கும் விதத்தில் ஆதவனில் ஏதாவது பிரசுரிக்கப்பட்டதாக நபரொருவர் அல்லது நிறுவனமொன்று கருதும் பட்சத்தில் உரிய கருத்துத் தெரிவிக்கும் உரிமை அந்த நபருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ உண்டு என்பதை "ஆதவன்" ஏற்றுக் கொள்கின்றது.

அது தொடர்பாக அந்த நபர் அல்லது நிறுவனம எழுதி அனுப்பி வைக்கும் கருத்துக்களை வெளியிட "ஆதவன்" கடப்பாடுடையது.

# நவீன ரக ஆயுதங்களும் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளும்

இதுவரை இலங்கையில் நிறைவேற்றப்பட்ட அரசியல் யாப்புகளில் சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கும் பாதுகாப்பிற்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தால், அரசியல் யாப்புகள் ஒரு இனத்துக்காக அல்லாமல் இலங்கையர் என்கின்ற நோக்குடன் வரையப்பட்டிருந்தால் நாட்டில் இன்று இந்த அவல நிலை ஏற்பட்டிருக்காது.

பிரபாகரனை கொலை செய்வது பௌத்த மத தர்மம் என புதிய பிரதமர் வாக்குகளைக் குவிக்க சூளுரைத்து இருக்கின்றார், இதற்காக புதியரக யுத்தவிமானங்களும் போர்த் தளபாடங்களும் வாங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இது வெறும் தேர்தல்கால உணர்ச்சிகளை தூண்டிவிடும் பேச்சாகும்.

இந்நாட்டில் உருவாக்கப்பட்டிருந்த அரசியல் யாப்பில் சிறுபான்மை மக்களின் நலன்கள்பாதுகாக்கப்பட்டிருந்தால் இன்று இந்த யுத்தம் தொடங்கி இருக்க மாட்டாது. இலங்கையில் அரசியல் யாப்பின் மாற்றங்கள் கொண்டு வரப்பட்ட போது சிறுபான்மை மக்களின் உரிமைகள், நலன்கள் பாதுகாக்கப்படவில்லை. இரண்டு பிரதான தேசியக் கட்சிகளுக்கும் இதில் பெரும் பங்குண்டு, பண்டா-செல்வா ஒப்பந்தம் நிறைவேற்றப் பட்டிருந்தால் இன்றைய இந்த நிலை தோன்றியிருக்காது சிறுபான்மை மக்களின் பிரச் சினைக்கு ஏதாவது தீர்வு முன்வைக்கப்படும் போது பௌத்தமகா சங்கத்தினர் இதனை எதிர்த்தே வந்திருக்கின்றனர். பண்டா செல்வா ஒப்பந்தத்தையும் மகாசங்கத்தினர் எதிர்த்தனர். இன்றைய அரசியல் சீர்திருத்த வரைபையும் எதிர்கின்றனர். அன்று அவர்கள் விட்ட தவறுகளில் இருந்து இவர்கள் இன்னும் பாடங்கள் கற்றுக் கொள்ளவில்லை.

இவர் பிரதமராக பதவியேற்றதில் இருந்து சிங்கள பேரினவாதிகளை நியாயப்படுத்தியும், அவர்களின் அகம்மகிழவுமே பேசி வருகின்றார். கடந்தகால தலைவர்கள் போலவே நடந்து கொள்கின்றார். இன்றைய அரசியல் நிலைமைகளில் இருந்து அவர் பாடம் கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. அல்லது தெரிந்தும் தெரியாதது போல் இனவாத சிங்களவர்களை மட்டும் திருப்தி படுத்த முனைகின்றாரோ தெரியவில்லை. அரசியல் சீர்திருத்த வரைபில் சில முன்னேற்றகரமான தன்மைகள் உண்டு என தமிழ் கட்சிகள் உத்தேச அரசியல் வரைபை நியாயப்படுத்துகின்றன. அவர்கள் கூட இன்று வாயடைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.


யுத்தம் எவ்வளவு கோரமாக நடந்தாலும் இறுதி முடிவு பேச்சு வார்த்தையிலேயே தங்கி இருக்கின்றது. இது ஒருவராலும் வெல்லப்பட முடியாத யுத்தம் அதனால் வெறும் கௌரவத்தை காக்க யுத்தம் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. எமது தேசிய வளம், தேசிய வருமானம் தேசிய சொத்துக்களான இளைஞர்கள் எல்லாம் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

எனவே, பௌத்த மகா சங்கத்தினர் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். இனப்பிரச்சினைக்கு யுத்தம் தான் ஒரே வழி என பௌத்த மகா சங்கத்தினர் அழுங்குப்பிடியாக நிற்கின்றனர். இதற்கு ஒரே வழி அரசியல் தீர்வேயாகும். தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய தீர்வினை முன்வைத்து அதனை விடுதலைப்புலிகள் ஏற்காவிட்டால் தமிழ் மக்களிடமிருந்து விடுதலைப்புலிகள் அன்னியப்படுத்தப்படுவார்கள். யுத்தத்தின் மூலம் அவர்களை ஓரங்கட்டிவிட முடியாது. அரசியல் தீர்வில்லாமல் நவீனரக ஆயுதங்களால் புலிகளை அழிக்கவும் முடியாது. இதற்கு அஞ்சி தமிழ் பேசும் தேசிய இனம் தனது போராட்டத்தை கைவிடப்போவதும் இல்லை, உண்மையை மறைக்காமல் சொன்னால், தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கவோ, மறுக்கவோ பௌத்த மகா சங்கத்தினருக்கு என்ன உரிமை இருக்கின்றது.

ஆசிரியர்.

# அரசியல் தீர்வல்ல, ஆயுதப்போராட்டமே நாட்டைப்பிரிக்கும்





**இனநெருக்கடிக்கான எந்தவொரு தீர்வுத்திட்டமும் மகாசங்கத்தினரின் ஆசியுடனேயே தான் இனிமேல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென கடும் போக்காளரான இரட்ணசிறி விக்ரமநாயக்கா தெரிவித்திருக்கும் கருத்தானது, ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்காவின் கருத்துக்கு நேர்முரணாக உள்ளது.**

செந்தணலோன்

பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் கூச்சல் குழப்பங்கள் எதிர்ப்பு ஊர்வலங்கள், சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் என்ற பெரும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஒத்திவைக்கப்பட்டுள்ள புதிய அரசியலமைப்பு சட்ட மூலத்தை எப்படியும் நிறை வேற்றியே தீருவேன் என ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க சூளுரைத்திருக்கும் அதேவேளை, புதிய பிரதமர் இரட்ணசிறி விக்ரமநாயக்காவின் ஆவேசமான பௌத்தசிங்கள கடும் போக்கான குரல் அதையும் மீறி வெளித் தெரிகிறது.

இனநெருக்கடிக்கான எந்தவொரு தீர்வுத்திட்டமும் மகாசங்கத்தினரின் ஆசியுடனேயே தான் இனிமேல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படுமென கடும் போக்காளரான இரட்ணசிறி விக்ரமநாயக்கா தெரிவித்திருக்கும் கருத்தானது ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்காவின் கருத்துக்கு நேர்முரணாக உள்ள போதும், ஜனாதிபதியின் கருத்து சர்வதேச சமூகத்தையும், தமிழ் மக்களையும் தமிழ் அரசியல் கட்சிகளையும் சாந்தப்படுத்தும் உள்நோக்கம் கொண்டதாகவும் பிரதமர் இரட்ணசிறி விக்ரமநாயக்காவின் கருத்தானது சிங்கள கடும் போக்காளர்களை எதிர்வரும் பொதுத்தேர்தலில் உள்ளிழுக்கும் நோக்குடையது எனவும் கணிப்பிடப்படுகிறது.

அதற்கெல்லாம் அப்பால் பிரதமர் இரட்ணசிறி விக்ரம நாயக்கா ஆளும் கட்சிக்குள் இனநெருக்கடிக்கு முன்வைக்கப்படும் எந்தவொரு புதிய தீர்வுத்திட்டத்திற்கும் தடையொன்றை கொண்டு வரக்கூடிய வல்லமையுள்ளவர் என்றும் பரவலாக பேசப் படுபவர்.

அதே வேளை, புதிய பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணயசபையாக (தக) மாற்றி புதிய அரசியலமைப்பு சட்ட மூலத்தை சாதாரண பெரும் பான்மை வாக்குகளுடன் கொண்டுவரப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க முன் வைத்திருக்கும் புதிய ஆலோசனை தொடர்பாக அரசியலாளர் களிடமிருந்து வேறுபட்ட அபிப்பிராய பேதங்கள் வெளிப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



உண்மையிலேயே அவ் வாறான ஒரு நிலைப்பாடு அரசுக்கு இருக்குமேயானால் தற்போதைய பாராளுமன்றத் தையே அரசியலமைப்பு நிர்ணய சபையாக மாற்றியிருக்க முடியுமென்றும் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எதிர்வரும் பாராளுமன்ற பொதுத்தேர்தல், சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களை தணிப்பது, நிதிவழங்கும் சர்வதேச அமைப்புகளை திருப் திப்படுத்துவது போன்ற பல்வேறு தேவைகளை யொட்டி யதாவே இந்தக்கருத்து வெளிக் காட்டப்பட்டுள்ளதாவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நாட்டின் கடந்த 50 வருடகால வரலாற்றில் சிறுபான்மையினங்களுக் கெதிரான கடும் போக்கிற்கும், இன நெருக்கடி விவகாரத் திற்கு தீர்வொன்றைக்காண முற்படும் போதும் எப்போதும் பெரும் தடையாக சிங்கள பௌத்த மகாசங்கத்திரன்ரே இருந்து வந்துள்ளமை வரலாற்று உண்மையாகும்.

முதலில் உருவாக்கப்பட்ட சோல்பரி ஆணைக்குழு தொடக்கம், பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தம், மாவட்ட அபிவிருத்தி சபை, இலங்கை இந்திய ஒப்பந்தம், பேராசிரியர் பீரிஸ் முன் வைத்த தீர்வுப்பொதி, இறுதியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு சிங்கள பௌத்த மகாசங்கத்தினரின் கடும் எதிர்ப்புக்கு அஞ்சி ஒத்திவைக்கப்பட்டுள்ள அரசியல் சட்ட மூலம் வரை கடும் போக்கையே பௌத்த சிங்கள இனவாதம் வெளிக்காட்டி நிற்கிறது.


இந்தநாட்டில் நீண்ட காலமாக அரசியல் போக்கு களில் ஆதிக்கம் செலுத்தி வரும் சிங்கள பௌத்த மகாசங்கத் தினருக்கு கருத்து சொல்லி அதை மக்கள் மத்தியில் வெளிப்படுத்த மட்டுமே முடியும். ஆனால், சட்டமியற்றவோ அல்லது அதைநடைமுறைப் படுத்தவோ உரிய அதிகாரம் ஆட்சியில் உள்ள அரசுகளுக்கே உள்ளபோதும் அடிப்படையில் இதுவரை காலம் இந்த நாட்டின் ஆட்சியதிகாரத்தில் இருந்த ஐக்கிய தேசிய கட்சியும் சரி ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் சரி இந்த நாடு பௌத்த சிங்கள நாடு என்ற அடிப்படைவாதத்திலிருந்து விடுபடாதவரை இவ்வாறான நிகழ்வுகள் தொடரவே செய்யும்.

அரசியல் கொந்தளிப் புக்குள்ளாகியிருக்கும் எந்தவொரு நாட்டிலும் கொண்டுவரப்படும் புதிய அரசியல் தீர்வுத்திட்டங்கள் ஐக்கியத்துக்கான அடித்தளமாக உள்ளதையே உலக நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. ஒரு போதும் அரசினால் முன்வைக் கப்பட்ட தீர்வுத்திட்டத்தினால் நாடு பிரியப்போவதில்லை ஏனெனில் தமிழ் மக்களே நிராகரித்துள்ள தீர்வுத்திட்டமே அது. நாடு பிரிய வழிவகுப்பது அரசியல் தீர்வுத்திட்டமல்ல தொடரும் உக்கிரமான ஆயுதப் பேராட்டமே என்பதை சிங்கள பௌத்த மகாசங்கத்தினர் முதலில் உணரவேண்டும்.

இந்நாட்டின் இன ஐக்கியத்தை குழிதோண்டிப் புதைப்பதற்காக அரசியல் வாதிகளின் ஒரு வெளிப்பாடாக கொண்டுவரப்படும் சிங்கள பௌத்த மகாசங்கத்தினரின் அரசியல் ஆதிக்கம் களைந் தெறியப்படாவிட்டால் எதிர்கால இலங்கை இன்னொரு ஆப்கா னிஸ்தானாகவோ அல்லது சரானாகவோ அடிப்படை மதவாதச் சேற்றுக்குள் மூழ்கிவிடக் கூடிய ஆபத்துக்கள் கூட தென்படலாம்.

# யுத்தமும் தமிழரின் அவல வாழ்வும்

**எமது இயக்க செயல் திறனும், இந்திய சார்பின்மைக் கொள்கையும், இந்திய உளவுத் துறையினருக்கு பெரும் எரிச்சலையூட்டியது. இதன் காரணமாக, இந்திய உளவுத் துறை அதிகாரிகள் எமது அரசியல் இராணுவ செயல்பாடுகளுக்கு தடைக்கல்லாக இருந்தனர்.**



**த. சித்தார்த்தன். பா. உ**

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் (புளொட்) தலைவருமான த. சித்தார்த்தனுடனான நேர்காணல்.

**தமிழ்தேசிய இன போராட்ட வளர்ச்சியில் புளொட் இயக்கம் ஆரம்பகாலத்தில் காத்திர மான பங்கை வகித்தது. ஆனால் நாளடைவில் இதில் பின்னடைவு ஏற்பட்டது. அதற்குரிய பின்புல காரணிகள் என்ன?**

83க்குப் பின்னான காலப்பகுதியை எமது இயக்கத்தின் எழுச்சி மிகு காலகட்டம் எனக் கூறலாம், 83இல் நடைபெற்ற கசப்பான சம்பவங்களும் இதற்கு காரணமாகும். தமிழ்பேசும் மக்களின் நலனை முன் நிலைப்படுத்தி தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை சிந்தாந்த கோட்பாடுகளுக்கேற்ப மக்கள் போராட்டமாக வழிநடத்த புளொட் இயக்கம் தலைமைத்துவம் கொடுத்து செயற்பட்டுக் கொண்டிருந்தது. இதற்குரிய சரியான தலைமைத்துவத்தை அமரர் உமாமகேஸ்வரன் அவர்கள் வழங்கினார்கள். புளொட் இயக்கம் வெறித்தனமான கொள்கையை பின்பற்றவில்லை. எமது இந்த நிலைப்பாடும், இயக்க செயல் திறனும் இந்திய சார்பின்மைக் கொள்கையும் இந்திய உளவுத் துறையினருக்கு பெரும் எரிச்சலையூட்டியது. இதன் காரணமாக இந்திய உளவுத் துறை அதிகாரிகள் எமது அரசியல் இராணுவ செயல்பாடுகளுக்கு தடைக்கல்லாக இருந்தனர்.

வடக்கு கிழக்கு போராட்டத்தை பொறுத்தமட்டில் பரந்த அளவில் நாம் அரசியல் ரீதியாக செயல்பட்டாலும் கண்மூடித் தனமான இராணுவ நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வில்லை. இதுவும் பின்னடை விற்கான முக்கிய காரணமாகும். அடுத்து விடுதலை புலிகளுக்கு இந்திய உளவுத்துறையும் தமிழ் நாடு அரசும் நேரடியாக ஆயுதங்கள் முதற்கொண்டு பல உதவிகளை வழங்கியது. இதனால் விடுதலைப் புலிகள் சக தமிழ் இயக்கங்களை பலவீனப்படுத்துவதற்கு முனைந்தனர். விடுதலைப் புலிகளின் வெறித் தனமாக பாசிசப் போக்கும் இந்திய உளவுத் துறை அதிகாரிகளின் நடவடிக்கைகளும் எமது இயக்கத்தின் வளர்ச்சிக்கு தடையாக இருந்தது. இத் தடைகளையெல்லாம் கடந்து இன்றைய அரசியல் நிலைமைக்கு தகுந்த வகையில் எமது அரசியல் காய்களை நாம் நகர்த்தி வருகின்றோம்.

**இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடே அமைக்கப்பட்ட மாகாணசபை முறை தமிழினத்தின் அபிலாசைகளை பூரணப்படுத்தக் கூடிய தீர்வு அல்ல என கருதியே புளொட் மாகாண சபையை நிராகரித்தது. அதற்குரிய அடிப்படை காரணிகள் என்ன?**

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபை அமைப்பு வட கிழக்கு பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வல்ல. 13வது திருத்தச் சட்டத்தில் ஒற்றை ஆட்சி அமைப்பு நீக்கப்படவில்லை. ஒற்றை ஆட்சி அமைப்பின் கீழ் அர்த்தபுஸ்டியான அதிகாரப் பரவலாக்கலை செய்யமுடியாது. சட்டவாக்கல் அதிகாரமும் கிடையாது. ஒருங்கியை நிரலில் மத்திய அரசு தலையிடக் கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றது. ஆகவே தான் மாகாணசபை நிரந்தர தீர்வாக அமையாது எனக் கூறினோம். இதனை இன்று நடை முறையில் பார்க்கின்றோம், மகாகாண சபைகளுக்கு கொடுத்த அதிகாரங்களை வலது கையால் கொடுத்து மத்திய அரசு இடது கையால் பறித்திருக்கின்றது. எனவே இதனை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்.

**ஒற்றை ஆட்சிக்கு எதிராக போராடிய தங்களின் அமைப்பு பின்நாளில் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து பாராளுமன்ற பாதையை நாடியதேன்?**

1987ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தின் போது இந்திய அரசு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வொன்றைக் காண வேண்டும் என எம்மை வலியுறுத்தியது. தனி நாட்டு கோரிக்கையை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் வற்புறுத்தியது. அந்நேரத்தில் இருந்த புறச்சூழல் காரணமாக எமக்கு இதைத் தவிர வேறுவழியெதுவும் இருக்கவில்லை. எனவே இந்தக் காரணங்களினால் நாம் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து ஜனநாயக பாரம் பரியத்தின் மேல் நிலையான பாராளு மன்றத்திற்கு சென்றோம்.

**பாராளுமன்றத்திற்கு சென்று தங்களால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக ஏதேனும் முன்னெடுக்க முடிந்ததா? அந்த முன்னெடுப்புகள் என்ன?**

பாராளுமன்றத்திற்கு சென்றதன் மூலம் அரசியல் தீர்விற்கான அழுத்தத்தை கொடுத்துள்ளோம். அது மட்டுமல்ல, சர்வதேசிய ரீதியான வாய்ப்புகள் கிடைக்கும் போதெல்லாம இது தொடர்பாக தெளிவு படுத்தியுள்ளோம். இப்பொழுது முன் வைக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வில் தமிழ் மக்களுடைய அபிலாசைகள் முற்று முழுதாக பூரணத்துவப் படுத்தப்பட்டுள்ளது என நான் கூற முன்வர வில்லை. ஆனால், முன்வைக்கப்பட்ட ஏனைய தீர்வுகளுடன் ஒப்பு நோக்கும் போது இதில் முன்னேற்றகரமான பல அம்சங்கள் இருக் கின்றன. இருந்தாலும் காணி, அரசின் தன்மை, வடக்கு கிழக்கு அலகு தொடர்பான அடிப்படை பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு காணப் படவில்லை. இது தொடர்பாக நாம் ஜனாதிபதியை சந்தித்து இவை சம்பந்தமாக திருத்தங்கள் கொண்டு வரவேண்டும் என வலியுறுத்தியதன் பேரில் குழு நிலை விவாதத்தின் போது இந்த விடயங்களில் முன்னேற்றகரமான திருத்தங்களை கொண்டு வருவதற்கு ஜனாதிபதி அவர்கள் இணங்கியுள்ளார். அது மாத்திரமல்ல போர்காலச் சூழலில் வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள் படும் அவலங்களுக்கு நிவாரணங்கள் பெற்றுக் கொடுப்பதில் முன் நின்றோம். வன்னி மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் வாழும் மக்கள் பட்டினிச்சாவை எதிர் நோக்காத வண்ணம் நிலைமைகளை சமாளித்துள்ளோம். வாழ்விடங்களை விட்டு வெளியேறி மக்களின் அனைத்து தேவைகளையும் முற்றுமுழுதாக பூர்த்தி செய்ய முடியாது. மீள் குடியேற்றங்களை ஏற்படுத்தியுள்ளோம். ஆனால் இவை போதாது என உணர்கின்றேன். இந்த நாசகார யுத்தம் தொடர்ந்து நீடந்து கொண்டிருக்கும் வரை இவ்வாறான நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும். எனவே எமது பிரச்சினை களுக்கு தமிழ் மக்களின் அபிலாசைகளுடன் கூடிய தீர்வு முன்வைக்கப்பட்டு போர்காலச் சூழல் ஒய்ந்து நிரந்தர சமாதானம் ஏற்பட்ட பின்பு தான் அனைத்து அன்றாட பிரச் சினைகளுக்கும் தீர்வு காண முடியும்.

**இந்தியப் படை வெளியேற்றத்தின் பின்பு 90களில் புளொட் இயக்கம் இராணுவத்துடன் இணைந்து வன்னிப் பிரதேசத்தில் செயல்பட ஆரம்பித்தது. அக்கால கட்டத்தில் வவுனியாவில் பல நலன்புரி, அபிவிருத்தி, மக்கள் நலன் சார்ந்த செயல் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தியது. இன்று அந்த நிலை இல்லை அதற்குரிய காரணம் என்ன?**

நாம் எமது இயக்க நிதியினை பாவித்து ஆரம்ப காலகட்டத்தில் மக்கள் நலன் சார்ந்த அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டோம். ஏன் இன்ற வவுனியா நகரம் ஒரு அபரிமிதமான வளர்ச்சியை கண்டுள்ளது என்றால் அதற்கு எமது அமைப்பின் ஆளுமையின் கீழ் இருந்த வவுனியா நகரசபையின் நிர்வாகம் தான் காரணமாகும். இவ்விடயத்தில் எமது இயக்க அங்கத்தவரான நகரபிதா லிங்க நாதனின் சேவையை மறக்க முடியாது. அடுத்து பாராளு மன்ற பிரதிநிதி என்ற வகையில் எமக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து சென்றுள்ளேன். வன்னி மாவட்டத்தில் அனைத்து பாடசாலைகளுக்கும் நிதி ஒதுக்கி கட்டிடங்கள் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. வவுனியா வைத்திய சாலைக்கு பெரும் குறைபாடாக விருந்த கட்டிடத் தொகுதி கட்டி முடிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து வசதிகளும் வவுனியா, மன்னார் போக்குவரத்து சாலைகளுக்கு பேருந்து வண்டிகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டது. இன்று இருக்கும் நிலையில் எமக்கு நேரடியாகச் சென்று அதில் ஈடுபட அவகாசம் இல்லை. இவற்றை நாம் பிரச்சாரப் படுத்தியதும் குறைவு, வன்னி மாவட்ட பாராளுமன்ற பிரதிநிதி சண்முகநாதனின் (வசந்தன்) பேரிழப்பும் இதற்கு காரணமாகும். பாதுகாப்பு பிரச்சினையும் நாம் நேரில் தலையிட முடியாமைக்கு ஒரு காரணமாக அமைந் திருக்கின்றது.

**இந்தியப் படை இலங்கையில் நிலை கொண்டிருந்த காலத்தில் விடுதலைப் புலிகளும், இந்திய இராணுவமும், இலங்கை இராணுவமும் சக தமிழ் இயக்கங்களும் தங்கள் இயக்கத்தின் மீது நெருக்கடிகளைக் கொடுத்து. அதன் காரணமாக தங்கள் இயக்கத்தில் தளர்வு நிலை ஏற்பட்டதே அது ஏன்?**

விடுதலைப் புலிகள் தமது மேலாதிக்கவாத நிலைப்பாட்டின் காரணமாக ஏனைய சக இயக்கங்கள் மீது தமது அதிகார வெறியை பிரயோகித்தனர். இந்திய நிலைப்பாட்டையும், இந்திய நலனில் இருந்து தமது பிரச்சினையை நோக்கியதை நாம் ஏற்றுக் கொள்ளாத காரணத்தினாலும் இந்தியப்படை எம்மீது நெருக்குதல்களை மேற்கொண்டது. இலங்கை இராணுவம் இன்னும் சில சந்தர்ப்பங்களில் அவ்வாறு நடந்து கொள்கின்றது. இதனால் நாம் தளர்ந்து போகவில்லை. இன்றைய காலத்துக் கேற்ற வகையில் வடக்கு கிழக்கு பிரச்சினையில் எவ்வாறு நாம் நடந்து கொள்ள வேண்டும் என்கின்ற அரசியல் ஞானத்திற்கேற்ப நாம் செயல்படுகின்றோம், கண்மூடித்தனமாக தமிழ் மக்களையும், இயக்க அங்கத்தவர்களையும் பலிகொடுக்க நான் தயாராக இல்லை. எந்த ஒரு அரசியல் கட்சியிலும் பின்னடைவுகள், தளர்வுகள் ஏற்படுவது சகஜம். அதற்கேற்றவாறு அரசியலை நடாத்தி தலைமைத்துவத்தை வழங்குவதே எமது கடமை.

**அனைத்து தமிழ் இயக்கங்களும் கெடுபிடி மிகுந்த ஓரளவு சர்வாதிகார போக்குடையவை யாகும். தங்களின் அமைப்பிலும் அவ்வகையான தன்மைகள் தென்படுகின்றன. ஜனநாயக தாராளவாத போக்குடைய தாங்கள் இதனை எவ்வாறு ஜீரணித்துக் கொள்கின்றீர்கள்?**

கஷ்டம் தான். இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தவிர ஏனைய இயக்கங்கள் தற்பாதுகாப்பிற்கு ஆயுதங்களை வைத்திருக் கின்றது. ஆயுதங்களை தற்பாதுகாப்பிற்காக வைத்திருந்தாலும் தேவையற்ற அர்த்தமற்ற பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. ஆகவே ஆயுதக் கலாச்சாரம் எம் மத்தியில் இருக்கும் வரை மன கஷ்டங்களுக்கு மத்தியில் இவைகளுக்கு முகங்கொடுத்தே ஆகவேண்டும்.

**உத்தேச அரசியல் யாப்பு சீர்திருத்தத்தை வரவேற்று தாங்கள் பாராளுமன்றத்தில் உரை யாற்றினீர்கள். ஆனால் 13வது திருத்தச் சட்டத்தை நிராகரித்து தாங்கள் இதனை ஆதரித்து பேச காரணம் என்ன?**

நிச்சயமாக முன்னேற்றகரமான தன்மைகள் தென்படுகின்றன. 13வது திருத்தச் சட்டத்தில் ஒற்றையாட்சி முறை வலியுறுத்தப்பட்டுள்ளது. புதிய அரசியல் யாப்பில் ஒருங்கியை நிரலும் நீக்கப்பட்டுள்ளது. மொழி விடயத்தில் தமிழ் மொழி தேசிய மொழியாக மட்டுமல்ல அரச கரும மொழியாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ் விடயங்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரையில் முன்னேற்றகரமான பல அம்சங்கள் இருக்கின்றன. பிரஜா உரிமை விடயத்தில் வம்சாவளி பிரஜை முறை நீக்கப்பட்டுள்ளதோடு இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் வரைவும் இதில் உள்ளடக்கப் பட்டுள்ளது எனவும் மலையகத்தில் வாழும் பிரஜா உரிமை அற்ற அனைவருக்கும் பிரஜா உரிமை வழங்கப்படும் எனவும் அவர்கள் கூறுகின்றார்கள்.

**எவ்வாறான தீர்வை எதிர்பார்க்கின்றீர்கள்?**

சுவிஸ்லாந்திலேயோ, கனடாவிலோ இருப்பதைப் போன்ற முழுமையான சமஷ்டி அடிப்படையிலான தீர்வுதான் தமிழ் பேசும் மக்களை திருப்திப்படுத்தும். எனவே சமஷ்டி அடிப்படையிலான நிரந்தர தீர்வையே நாம் அன்றில் இருந்து வலியுறுத்திவருகின்றோம்.

**முஸ்லிம் மக்கள் தொடர்பாக தங்களுடைய நிலைப்பாடு என்ன?**

முஸ்லிம் மக்களின் அச்சத்தை உணர் கின்றோம். தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டுமேயானால் முஸ்லிம் மக்களுடைய ஒத்துழைப்பும் பங்களிப்பும் நிச்சயம் தேவை என்பதை நாம் ஏற்றுக் கொள் கின்றோம். அவர்களை ஒதுக்கிவைத்து வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. அவர்களின் மதம், கலை, கலாச்சாரத்தை பேணிக்காக்கக் கூடியதும் முஸ்லிம்களுடைய பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கக் கூடியதுமான தீர்வொன்றை முன்வைப்பது அவசியம்.

**தங்களின் அமைப்பு தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆரம்பகால அமைப்புகளில் ஒன்றாகும். தமிழ் அமைப்புகளிடம் ஒற்றுமைய வலுவிழந்து இருக்கின்றது. இவர்களை ஒன்றுபடுத்தி ஏன் ஒரு மாற்று சக்தியாக வர முடியவில்லை?**

எங்களைப் பொறுத்தவரை நாம் ஐக்கியத்தையும் ஒற்றுமையையும், தமிழ் பிரதி நிதித்துவம் பலவீனப்படக் கூடாது என்ற நிலையிலிருந்தே சிந்திக்கின்றோம். நிச்சயம் எம்மிடம் ஐக்கியமும் ஒருமித்த குரல் பலமும் தேவை. நாம் பிரிந்து நின்று ஒவ்வொரு விதமாக கோரிக்கை விடுவதினால் எவ்வித பிரயோசன மும் இல்லை. அது அவர்களை தக்க வைத்துக் கொள்ளவும், சந்தர்ப்பவாத அரசியலுக்குமே வழிவகுக்கும். மீண்டும், மீண்டும் கூறுகின்றேன். நிச்சயமாக அனைத்து தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கிடையில் ஐக்கியம் தேவை. அதுவே நிரந்தர தீர்வை தடுத்து நிற்கும் இரும்புக்கதவை திறக்கக் கூடிய திறப்பாகும். இன்று விடுதலைப்புலிகள் மாத்திரமே தனித் தமிழ் ஈழம் என்ற கோஷத்துடன் போராடுகின்றார்கள். ஏனைய கட்சிகள் அனைத்தும் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள்ளான தீர்வை ஏற்றுக் கொள்கின்றனர். இதில் உள்ள பிரச்சினையை உண்மையாக மனம் திறந்து கூறப்போனால் ஒவ்வொருவரும் மற்றைய கட்சியை விட தாமே சிறந்ததமிழ் தேசியவாதி என வாயளவில் காட்டுவதற்கு முனைகின்றனர். இதுவே தமிழ் கட்சிகளுக்கிடையே ஒற்றுமையை கொண்டு வருவதற்கு தடையாக இருக்கின்றது. அது மாத்திரமல்ல தமது கட்சி கூடிய ஆசனங்களைப் பெற வேண்டும் என்கின்ற பேராசையும் ஒற்று மையை சீர் குலைக்கின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஆசன பேராசையால் 17வது திருத்தச் சட்டத்ததைத ஆதரிக்கின்றது. இதனால் தமிழ் சமூகம் பல இழப்புகளுக்கும் முகங் கொடுக்க நேரிடும்.

**இறுதியாக விடுதலை புலிகள் தொடர்பான தங்களது நிலைப்பாடு?**

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக பலம் பொருந்திய பல வெற்றிகளைக் கண்டுள்ளனர். ஆனால் இந்த பலத்தினையும் வெற்றியையும் ஒரு அரசியல் தீர்விற்கு பயன்படுத்தாமல் தொடர்ந்தும் போரையே முன்னெடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். இதனால் தமிழ் மக்கள் பெரும் அழிவையும் யுத்த அனர்த்தங்களையும், அவல வாழ்வையுமே எதிர் கொள்கின்றனர். விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தைக்கு வருவார்களேயானால் நிச்சயமாக சிங்கள மக்களைப் பொறுத்தமட்டில் சமஷ்டி கூட்டாட்சிக்கு அவர்கள் உடன்படுவதற்கு தயாராக இருக்கின்றார்கள் என்பதே எனது அபிப்பிராயமாகும்.

நேர்காணல் - ஏ.எஸ். ஞானம்.

# இலங்கைக்கான இந்தியாவின் ஆயுத விநியோகம்

களநிலவரம்



கௌதமன்

பல்வேறு நாடுகளிலுமிருந்து இலங்கை அரசு தொடர்ந்தும் இராணுவத் தளபாடங்களையும் ஆயுதங்களையும் பெற்று வருகிறது. நவீனரக அதிவேக தாக்குதல் விமானங்கள், தாக்குதல் ஹெலிகொப்டர்கள், போர்க் கப்பல்கள், ரோந்துக் கப்பல்கள், பீரங்கிப் படகுகள், தரையிலிருந்து தரைக்குச் செல்லும் ஏவுகணைகள் ரகத்தைச் சார்ந்த ஆட்லறிகள், பல குழல் ரொக்கட் லோஞ்சர்கள் மற்றம் பல்வேறு வகை ஆயுதங்களும் இராணுவத் தளபாடங்களும் தொடர்ந்தும் அவசர அவசரமாக கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றன. ஆயுத உற்பத்தி நாடுகள், ஆயுதவிநியோக நாடுகள் பலவற்றுக்கும் முப்படை அதிகாரிகள் குழுக்கள் அடிக்கடி சென்ற வருகிறன. மேலும் பல நாடுகளுக்கு அதிகாரிகள் குழுக்கள் செல்லவுள்ள நிலையில், இலங்கைக்கு போர்த் தளபாடங்களை வழங்க புதிய நாடொன்று முன்வந்துள்ளது.

பாகிஸ்தான், சீனா, இஸ்ரேல், செக் குடியரசு, ஸ்லோவாக்கியா, ஹங்கேரி, ஈரான் வரிசையில் தற்போது இந்தியாவும் இணைந்துள்ளது. ஆனையிறவுப் படைத்தளம் புலிகள் வசமாகி, புலிகள் குடா நாட்டினுள் நுழைந்ததையடுத்து நாடு முழுவதும் யுத்தகால சூழ்நிலைக்கு கொண்டு வரப் பட்டது. பொதுத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக் கையில், புலிகள் குடா நாட்டைக் கைப்பற்றி விடுவார்கள் என்ற பேரச்சம் தோன்றிவிடவே பல கோடி ரூபாக்களை செலவிட்டு மிக அவசரமானதும் அவசியமானதுமான ஆயுதங்களை தருவிக்க அரசு முடிவு செய்தது. யாழ். நகரை நோக்கி புலிகள் நகர்ந்து கொண்டிருக்கையில் அதனைத் தடுத்து நிறுத்த அவசர உதவியை இந்தியாவிடம் இலங்கை கோரியிருந்தது. எவ்வகை உதவி என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படாத போதும், இந்தியாவிடம் இலங்கை இராணுவ உதவிகளைக் கோரியிருந்தது. எனினும் இதனை நிராகரித்த இந்தியா, இலங்கையில் மீண்டும் இராணுவ ரீதியில் தலையிடாதெனவும் இராணுவ உதவிகளை வழங்காதெனவும், அறிவிக்கவே, இலங்கை பாகிஸ்தானிடம் இந்த உதவிகளைக் கோரியது. ஆயுதங்களையும் போர் தளபாடங்களையும வழங்க முன் வந்த பாகிஸ்தான் நேரடி இராணுவத் தலையீட்டை நிராகரித்தது.

இதுபோன்றே பல்வேறு நாடுகளும் இலங்கைக்கு ஆயுதங்களை விநியோகிக்கத் தயாராகவே இலங்கையின் முப்படை அதிகாரிகளும் உலகின் பல்வேறு பாகங்களுக்கும் விரைந்து சென்று பேரம் பேசத்தொடங்கினர். இதற்காக அரசு, இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கென ஒதுக்கிய 6000 கோடி ரூபாவை விட மேலதிகமாக கடந்த மே யில் 2600 கோடி ரூபாவை ஒதுக்கியது. அவசர ஆயுத உதவியை பாகிஸ்தான் வழங்கத் தொடங்கியதும் அது இந்தியாவுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தத் தொடங்கியது . இலங்கை விவகாரத்தில் வேறு நாடுகளை தலையிட விடுவதில்லை என்ற இந்தியாவின் உறுதிக்கு இது பெரும் ஊறுவிளைவிப்பதாகவே அமைந்தது. எனினும் இலங்கைக்கு ஆயுதங்களை விற்பதில்லை என்ற நிலைப்பாட்டை மாற்றவும் முடியாது, இலங்கைக்கு பாகிஸ்தான் விற்பனை செய்யும் ஆயுதங்களின் வருகையை தடுக்கவும் முடியாது இந்தியா இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையில் நின்று தவித்தன.

இந்தியாவின் இந்த நிலையை நன்கு உணர்ந்து இலங்கை அரசு மேலும் மேலும் பாகிஸ்தானின் உதவியை நாடவே அது இந்தியாவுக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியதுடன், பாகிஸ்தானின் இந்தத் தலையீடு இலங்கை விவகாரத்தில் அது மேலும் தலையீட்டை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சத்தையும் ஏற்படுத்தவே, எதுவித முன்னேற்பாடுமின்றி இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சிங் இலங்கைக்கு அவசர அவசரமாக வருகை தந்ததுடன், இலங்கையின் ஒருமைப்பாட்டை இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்துவதாகவும் ஒருமித்த இலங்கைக்குள்ளேயே இனப்பிரச் சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்றும் தமிழீழம் உருவாவதற்கு இந்தியா ஒரு போதும் ஆதரவு வழங்காதெனவும் கூறியதுடன், இலங்கை பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளதால் அதற்கு 450 கோடி ரூபாவை கடனுதவியாக இந்தியா வழங்குமெனவும் அவர் அறிவித்திருந்தார். இந்தியாவே உலக நாடுகளிடம் கடன் வாங்குகையில் இலங்கைக்கு இந்த உதவியை வழங்குவதற்கு இந்தியாவிற்குள்ளேயே பெரும் எதிர்ப்பு கிளம்பியது. எனினும் இந்தியா இதனை பொருட்படுத்தவில்லை.

அத்துடன் பாகிஸ்தானும் ஏனைய நாடுகளும் இலங்கைக்கு அனுப்பும் ஆயுதக் கப்பல்களை புலிகள் தாக்காதிருக்கும் வகையில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பாக்கு நீரிணை பகுதியில் தனது போர்க்கப்பல்கள் பலவற்றை நிறுத்தி வைத்ததுடன், இலங்கை கடல் எல்லையில் 24 மணிநேர ரோந்து நடவடிக்கைகளில் கடற்படை ரோந்துக் கப்பல்களையும் ஈடுபடுத்தி அவற்றை பாதுகாத்தது. இந்த விடயத்தில் பாகிஸ்தானிடம் மேலும் மேலும் உதவியை பெறுவதன் மூலம் இந்தியாவை தனது பொறிக்குள் விழவைக்கலா மென்பதை உணர்ந்த இலங்கை அரசு அதற்கேற்ப தனது செயற்பாடுகளை மேற்கொள்ளவே இந்தியா, இலங்கையின் போக்கிற்கு சார்பாக நடந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவானது. குடா நாட்டுக்கு புலிகளால் தொடர்ந்தும் அச்சுறுத்தல்கள் இருப்பதை உணர்ந்த இலங்கை அரசு, தொடர்ந்தும் பல்வேறு நாடுகளிடமிருந்தும் ஆயுத உதவிகளைப் பெற்றுக் கொண்டிருந்ததால் இலங்கைப் பிரச்சினையில், தான் அந்நியப்பட்டுச் செல்வதை இந்தியா நன்கு புரிந்து கொண்டது.

இலங்கைப் பிரச்சினையில் தலையிடாமை என்ற கொள்கை இந்தியாவில் புலிகளுக்கு சார்பான நிலையை ஏற்படுத்துவதையும் அது தமிழகத்தில் பிரிவினைக்கு ஆதரவான நிலைமையை ஏற்படுத்தி விடுமென்பதையும் புதுடில்லி உணரத் தொடங்கவே, இலங்கை தொடர்பான தனது கொள்கையை இந்தியா மீள் பரிசீலனை செய்யத் தொடங்கியது. அதன் விளைவே தற்போது இலங்கைக்கு போர்த் தளபாடங்களை விற்பனை செய்ய முடிவு செய்துள்ளமையாகும். இலங்கையில் நடைபெற்று வரும் போரினால் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் அகதிகளாக தமிழகம் வந்துள்ளதாலும் தொடர்ந்தும் நூற்றுக்கணக்கான அகதிகள் தமிழகம் வந்து கொண்டிருப்பதாலும், இந்த தமிழ் அகதிகளை பாதுகாத்து அங்கு போர் முடிவடையும் வரை அவர்களைத் தங்க வைக்கவும் இதன் மூலம் தமிழகத்திலுள்ள ஆறரைக் கோடி தமிழ் மக்களை திருப்திப்படுத்தவும் வேண்டியிருந்ததால் இதுவரை காலமும் இந்தியா இலங்கைக்கு ஆயுதங்களை விற்கவில்லை. ஆனால், இப்போதோ இலங்கைத் தமிழர்கள் தமிழகத் தமிழர்கள் மற்றும் உலகத் தமிழர்களின் நலனை விட, தனது நாட்டு நலனையும் இதன் மூலம் வெளிநாடுகள் எதுவும் இலங்கை விவகாரத்தில் தலையிடுவதை தடுக்கும் நோக்கிலுமாக இலங்கைக்கு ஆயுத விற்பனை செய்ய இந்தியா முன்வந்துள்ளது.

1983ம் ஆண்டிற்குப் பின்னர் இலங்கையில் உள் நாட்டுப் போர் தீவிரமடைந்த போது இந்தியா தமிழ் போராளிகளுக்கு ஆயுத உதவிகளையும் பயிற்சிகளையும் வழங்கி, அங்கு அவர்கள் முகாம்களை அமைத்து செயற்படவும் அனுமதித்ததுடன், இலங்கை பிரச்சினையை சர்வதேசப் பிரச் சினையாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டது. பின்னர் 1987ல் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை உருவாக்கி அதன் மூலம் தமிழர் நலனைப் பாதுகாப்பதாகக் கூறி தனது இராணுவத்தையும் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நிலைகொள்ள வைத்தது. எனினும் அப்போதைய இலங்கை அரசின் பொறியில் சிக்கிய இந்திய அரசு, விடுதலைப் புலிகளுடன் மோதல்களை ஆரம்பித்ததன் மூலம் தனது நிலைப்பாட்டை தலைகீழாக மாற்றிச் செயற்படத் தொடங்கியது. இதன் மூலம் பல கசப்பான அனுபவங்களைப் பெற்று இலங்கையிலிருந்து இந்தியப் படைகள் வெளியேறின. இந்த நிலையில் எதிர்காலத்தில் இலங்கைப் பிரச்சினையில் எவ்விதத்திலும் தலையிடுவதில்லை என இந்தியா முடிவு செய்த அதேநேரம் இலங்கைக்கு இந்தியப் படைகளை அனுப்பியதால் ஏற்பட்ட பலாபலன்கள் குறித்து பலரும் தொடர்ந்தும் கவலை தெரிவித்து வந்தனர். இலங்கை வந்த இந்திய அமைதிப் படைத் தளபதிகள் கூட தாங்கள் பெரும் தவறிழைத்து விட்டதாகக் கூறி வந்ததுடன், இனிமேல் இலங்கை பிரச்சினையில் இராணுவ ரீதியில் தலையிடவே கூடாதெனவும் வலியுறுத்தி வந்தனர்.

எனினும், தற்போது இலங்கைக்கு இராணுவத் தளபாடங்களை விற்பனை செய்ய முன்வந்ததன் மூலம் மீண்டும இலங்கை விவகாரத் தில் இராணுவத் தலையீடுகளை மேற்கொள்ள இந்தியா முற்பட்டுள்ளதாகவே இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



> இலங்கைக்கு கரையோர ரோந்துக் கப்பல்களை விற்பனை செய்வதற்கான பேச்சுக்கள் கடந்த மாதப் பிற்பகுதியில் புதுடில்லியில் நடைபெற்று "ஐ.என்.எஸ்.சர்தார்" என்ற, சுமார் 1800 தொன் நிறையுடைய தரையிலிருந்து தரைக்கு செல்லக் கூடிய ஏவுகணைகள் பொருத்தப்பட்ட, ஹெலிகொப்டர்களை தாங்கிச் செல்லக் கூடிய கப்பல் அடுத்த சில வாரங்களில் இலங்கை வந்து சேரவுள்ளது.

இலங்கைக்கு கரையோர ரோந்துக் கப்பல்களை விற்பனை செய்வதற்கான பேச்சுக்கள் கடந்த மாதப் பிற்பகுதியில் புதுடில்லியில் நடைபெற்று "ஐ.என்.எஸ்.சர்தார்" என்ற, சுமார் 1800 தொன் நிறை யுடைய தரையிலிருந்து தரைக்கு செல்லக் கூடிய ஏவுகணைகள் பொருத்தப்பட்ட, ஹெலி கொப்டர்களை தாங்கிச் செல்லக் கூடிய கப்பல் அடுத்த சில வாரங்களில் இலங்கை வந்து சேரவுள்ளன. இந்தியக் கடலோர எல்லை மிக நீண்டதாயும் இந்தியக் கடற்படையினரிடம் இந்த வகை கடலோர ரோந்துக் கப்பல்கள் ஒரு சிலவே உள்ள நிலையில் இந்தக் கப்பலை இலங்கைக்கு விற்பனை செய்யக் கூடாதென இந்திய கடற்படை அதிகாரிகள் பலரும் வலியுறுத்தி யுள்ளனர். எனினும் இந்திய பாதுகாப்பு அமைச்சு இக் கப்பல் விற்பனைக்கான ஒப்பந்தத்தை பூர்த்தி செய்துள்ளது. இந்தக் கப்பல் பேரத்துடன் தனது ஆயுத விற்பனையை ஆரம்பித்துள்ள இந்தியா இனிமேல் வேறுவகையான இராணுவத் தளபாடங்களையும் விற்பனை செய்யுமென்றே எதிர்பார்க்கப்படுவதாக கருதப்படுகிறது. இந்திய அரசின் இந்த நடவடிக்கை தமிழகத்தில் எவ்வித உணர்வலைகளை ஏற்படுத்துமென்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

ஏற்கனவே பல்வேறு நாடுகளிடமிருந்தும் ஆயுதங்களை கொள்வனவு செய்த இலங்கை அரசு தற்போது இந்தியாவிடமிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்ததன் மூலம் தனது ஆயுதக் கொள்வனவு நாடுகளின் பட்டியலில் இந்தியாவையும் சேர்த்துள்ளது. இதனால் விடுதலைப் புலிகள் இனிமேல் நாட்டுக்கு வெளியே மிக அருகிலிருந்து வரும் நெருக்குதல்களையும் சமாளிக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். யாழ். குடாநாடு புலிகள் வசம் வீழ்ச்சியுறும் தறுவாயிலிருந்த போது இலங்கை விடுத்த கோரிக்கையை நிராகரித்து இலஙகைக்கு ஆயுத உதவிகளை வழங்க மறுத்த இந்தியா, இலங்கையின் ஒருமைப்பாட்டுக்குள் நல்ல தீர்வொன்றை தமிழர்களுக்கு வழங்குவோமெனக் கூறி உலகம் முழுவதும் கடந்த 6 வருடங்களாக காவித் திரிந்த தீர்வுப் பெட்டகத்தை, அரசு பாராளு மன்றத்தில் வாக்கெடுப்பிற்கு விடாமலேயே கைவிட்டுள்ளது. இதன் மூலம் ஒன்றிணைந்த இலங்கைக்குள்ளே இனப்பிரச் சினைக்கு இனி என்னதான் தீர்வென்ற கேள்வியையும் பல தரப்பும் எழுப்பியுள்ளன. இந்தத் தீர்வுத் திட்டம் கைவிடப்பட்ட நிலையில் போரை மிகத் தீவிரப் படுத்துவதற்காக அரசு பாராளு மன்றத்தில் குறை நிரப்பு பிரேரணையை சமர்ப்பித்து மேலும் 2800 கோடி ரூபாவை பாதுகாப்புச் செலவிற்கு பெற்றுள்ள நிலையிலேயே இந்தியாவின் ஆயுத விற்பனை அறிவிப்பும் வெளிவந்துள்ளது.

கடந்த சில மாதங்களாக வடக்கே பாரிய மோதல்கள் தணிந்துள்ளன. தேர்தல்கள் நெருங்குகையில் மோதல்கள் தீவிர மடைவதற்கான நிலமைகளும், தென்படுகின்றன. படையினர் பல்வேறு நாடுகளில் இருந்து வாங்கிக் குவித்த ஆயுதங்களை அடுத்த தாக்குதலுக்காக தயார் நிலையில் வைத்துள்ளனர். இதைவிட பெருமளவு ஆயுதங்களும் வந்த வண்ணமுள்ளன. புலிகளும் தங்களை பல்வேறு வகையிலும் தயார்படுத்தி வருகின்றனர். குடாநாட்டில் எந்தநேரத்திலும் பாரிய மோதல்கள் வெடிக்கும் சாத்தியங்கள் உள்ளது. தீர்வுத் திட்டம் நிராகரிக்கப்பட்ட நிலையில் இனி போரைத் தவிர என்னதானிருக்கிறது.

# தொடரும் யுத்தத்தினால் நிர்க்கதியாகியுள்ள யாழ் அகதிகள் நிலவரம்!

வடபுல போர் முனையில் பல நாட்களாக இருதரப்பினரிடையேயும் மௌனம் நீடித்த வண்ணம் காணப்படுகின்றது. இரு தரப்பினரும் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளையே மேற்கொள்கின்றனர்.

தமது நிலைகளை தற்காத்து கொள்ளும் முகமாக மேற்கொள்ளும் இராணுவ வியுகம் என்று சொன்னால் கூட அது மிகையாகாது.

எனவே, புலிகளினால் ஆரம்பிக்கப்பட்டு தற்போது ஓய்வு நிலையில் இருக்கும் ஓயாத அலைகள் 3 இராணுவ நடவடிக்கை எந்த நேரமும், எந்த முனையில் வெடிக்கும் என, யாராலும் அறுதியிட்டு செல்ல முடியாது. ஆனால் யாழ். குடா நாட்டை மீள கைப்பற்றும் வரை இவ் ஓயாத அலைகள் 3 இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகளினால் நடத்தப்படும் போர்கால கருத்தரங்குகளில் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், மக்கள் தற்போது உறங்கு நிலையில் இருக்கும் இவ் யுத்தத்தை பார்த்து கொண்டே இருக்கின்றனர். எந்தப் பகுதியில் இருந்து மக்கள் வெளியேற வேண்டிவரும், இவர்கள் எங்கே போவது? இவர்களின் சொத்துக்கள் மற்றும் ஆவணங்கள் எவ்வாறு பாதுகாப்பாக வைப்பது? என்ற கேள்விகளுடன் இல்லாத மக்கள் யாழ். குடா நாட்டில் இல்லை என்றே கூறவேண்டும்.

ஓயாத அலைகள் 3 இராணுவ நடவடிக்கையின் போது பய பீதி காரணமாக அரியாலை நாயன்மார்கட்டு, கொய்யாத் தோட்டம், பாஷையூர், குருநகர், சுண்டுக்குளி பகுதியை சேர்ந்தோர் வெளியேறினர். தற்போது அவர்கள் மீளவும் தமது இடங்களில் குடியமர்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவர்களில் அனேகமானவர்கள் அவசியம் தமக்கு தேவைப்படும் பொருட்களுடன் மட்டுமே இங்கு வந்துள்ளனர். ஏனைய பொருட்களை வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென் மேற்கு பகுதியில் வைத்து விட்டே வந்துள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

யுத்தத்தின் அவலத்தை சுமந்த படி அலைந்து திரியும் மக்கள் கூட்டத்தையே இன்று யாழ். குடா நாட்டில் காணக் கூடியதாக இருக்கின்றது. ஒரு கட்டத்தில் ஜெயசிக்குரு இராணுவ நடவடிக்கையின் போது வன்னி பெரு நிலப் பரப்பு மக்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கு ஒத்த வாழ்க்கையையே இன்று யாழ். மக்கள் வாழ்கின்றனர். ஆனால் இன்று வன்னி பெரும் நிலப் பரப்பில் நிலமை வேறு என்பதே உண்மை. இடம் பெயர்ந்த மக்களுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட உணவு விநியாகம் சீராக இல்லை. உறங்க உறைவிடம் இல்லை. இடம் பெயர்ந்தவர்கள் மிக கணிசமான அளவில் இருக்கும் இடங்களில் குடிக்கநீர், இயற்கை கடன் கழிக்க மலசல கூடம் கூட இல்லாத நிலையே காணப்படுகின்றது. இந்த நிலையில் எத்தனை நாட்களுக்கு மக்கள் இவ்வாறு சீவிக்க போகின்றார்கள் என்ற கேள்விக்கான பதில் சிக்கலானதொன்றாகவே இருக்கும்.

இப்போது நல்லூர் கோவில் திருவிழா ஆரம்பித்து விட்டது. இதன் காரணமாக ஆலய கொண்டாட்டங்களில் மக்களின் வருகை தவிர்க்க முடியாத ஒன்றாகும். இதே சமயம் இடம் பெயர்ந்து நாலாபுறமும் சிதறி வாழும் மக்கள் சந்திக்கும் இடங்களில் ஒன்றாக ஆலயமும் இன்று காணப்படுகிறது.

ஆனால் ஆலயங்களுக்கு செல்லும வீதிகளில் இருக்கும் இராணுவ சோதனை சாவடிகளும், வீதித் தடையும் ஆறுதல் தேடி செல்லும் மக்களின் மனங்களில் உறங்கி கிடக்கும் யுத்தக் கோரத்தை தட்டி எழுப்புகின்ற நிகழ்வாகவே இருக்கின்றது.

அதாவது முன்னர் போடப் பட்டிருந்த சோதனை சாவடிகளும், வீதித்தடைகளுக்கு போடப்பட்ட மண்மூடைகளும் வெற்று பரல்களும் அப்புறப்படுத்தப்பட்டு அதற்குப் பதிலாக, இராணுவ தளபாடங்கள் எடுத்து வரும் இரும்பு பெட்டிகள் கொண்டு இவை அமைக்கப் பட்டுள்ளன. ஆயுதங்கள் எடுத்துவர உபயோகிக்கப்படும், சுமார் முப்பது நாற்பது இரும்பு பெட்டிகள் கண்காட்சிக்கு வைப்பதை போல அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இதனை பார்க்கும் மக்கள் படையினர் இவ்வளவு குண்டுகளையும் ரவைகளையும் யாழ். குடா



நாட்டிலா பயன்படுத்தியுள்ளனர்? என்ற அதிர்ச்சியுடனான வினாவை இன்று எல்லோர் முகத்திலும் காணக் கூடியதாக உள்ளது.

சிறுவர்கள் தம்முடன் வரும் பெரியவர்களிடம் இது என்ன பெட்டி? என்ற கேள்வியை எழுப்புகின்றனர். இதற்கான பதில் இந்த மண்ணில் நடைபெறும் இராணுவ செயற்பாட்டை மீள மீள குழந்தைகளின் மனதில் பதியவைக்கும் நடவடிக்கையாகவே அமைந்து விடுகின்றது.

நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு சென்று வரும் சிறுவர்கள் தமக்கான விளையாட்டு பொருட்களுக்கு காட்டும் ஆர்வத்தை விட இவ் இராணுவ வெற்றுப் பெட்டிகள் மீது காட்டும் அக்கறை அதிகம் என கூறினால் அது மிகையாகாது.

யுத்தத்தையும் புலிகளின் செயற்பாட்டையும் குறை கூறும் அல்லது விமர்சனம் செய்யும் மக்கள் கூட, எங்களுக்கு எதிராக பாவிக்கப்பட்ட குண்டுகளும், ரவைகளும் கொண்டு வந்த பெட்டிகளை எமக்கு காட்சிக்கு வைத்திருக்கிறார்கள். இது என்ன நூதன சாலையா? என்ற வினாவுடன், மனம் புழுங்கிக் கொண்டு செல்வதை காணக்கூடியதாக இருக்கின்றது. யாழ். மக்களை பொறுத்தமட்டில் உளரீதியான ஒரு பாதிப்பை அனுதினமும் அவர்கள் அனுபவித்து வருகின்றனர். தமிழ் மக்கள் யுத்தத்தை விட்டு ஒதுங்கி ஒரு நிமிடமாவது ஒதுங்கி இருக்க கூடாது என்ற எண்ணத்தினது வெளிப்பாடே இதுவாகும்.

இந் நிலையில் யுத்த நெருப்பு தொடர்ந்து மக்களில் எரிந்து கொண்டு இருக்கையில் இதில் குளிர்காயும் எண்ணத்திலும் சில அரசியல்வாதிகள் எண்ணெயை அதில் ஊற்றி விடுகின்றனர்.

ஆலயங்களுக்கு செல்லும் மக்கள் தொகையை எந்த கட்டத்திலும் இவ் அரசியல் வாதிகள் வாழ்க்கையில் காணமாட்டார்கள். எனவே ஆலயத்திற்கு செல்லும் மக்களுக்கும் ஆலயத்தில் இருந்து வரும் மக்களுக்கும் தமது தேர்தல் சின்னம் மற்றும், கட்சி தலைவரின் நிழல் பிரதி பொறிக்கப்பட்ட பிரசுரங்களையும் கட்சி தொண்டர்கள் மற்றும் கூலிக்கு பெற்று கொள்ளும் ஆட்களையும் வைத்து விநியோகித்து வருகின்றனர்.

இந் நடவடிக்கையானது, கோவில் கோபுரத்திற்கு எதிரே எரியும் கற்பூர சட்டியின் நெருப்பை விட பக்தர்களின் மனதில் எரியும் நெருப்பு அதிகமானது என கூறினால் அது மிகையாகாது.


எப்போதாவது யுத்தத்தை மறந்து சீவிப்பதற்காக மக்கள் எடுக்கும் முயற்சிகள் எப்போதும் தோல்வியிலேயே முடிவடைகின்றன. இது மக்களின் குற்றமா? காலத்தின் குற்றமா? சமூகத்தின் குற்றமா? என்ற கேள்விக்கு பதில் கூற முடியாதுள்ளது.

இன்று நிம்மதியாக இந்த இடத்தில் நித்திரை கொள்கின்றோம். நாளை இதே இடத்தில் நித்திரை கொள்ள முடியுமா? என்ற கேள்விக்கு விடை இல்லை. இவ்வாறு எத்தனை நாட்களுக்கு காலத்தை போக்குவது என்பது ஒரு தொடர்கதையாகவே செல்கின்றது.

யாழ். குடாநாடு தற்போது அசாதாரண சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. இத் திருப்பம் எத்தனை நாட்களுக்கு என்பதை விட இந் நிலை தொடர்ந்து ஏற்பட்டால் மீண்டும் மக்கள் தமது தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலை தோன்றும் என்பதே இங்கு கவனத்திற்குரிய விடயம். இதற்கு முன்னர் நடந்த விடயங்கள்

# மோசடிக்கான கூட்டிணைவில் யாழ் அரச நிறுவனங்கள்!

நி.நிவேதா



இதற்கு சான்று பகர்கின்றன..

கடந்த மார்ச் மாதம் 5ம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெற்ற விவசாய சம்மேளனங்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைய விவசாய சம்மேளனங்களை சேர்ந்த விவசாயிகளுக்கு வாராந்தம் ஐந்து லீற்றர் மண்ணெண்ணை வழங்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. ஆனால் ஜூலை மாதம் இறுதி வரை இத் திட்டம் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் நிறைவேற்றப் படவில்லை.

இதே போன்று இடம் பெயர்ந்த மக்களுக்காக வழங்கப்பட்ட உலர் உணவு விநியோகத்தை பொறுத்த மட்டில் கோப்பாய் பிரதேச செயலக பகுதியில் சுமார் நூற்றி ஐம்பது குடும்பங்களுக்கு இன்னும் மே மாத நிவாரணம் வழங்கப்படவில்லை என்பதை கோப்பாய் பிரதேச செயலர் நேரடியாக ஏற்றுக் கொண்டுள்ளார். இதற்கு காரணம் அரசியலா? கவனயீனமா? என்பதற்கு விடை அரசாங்க அதிகாரிகளை பொறுத்தமட்டில், மௌனமாகவே உள்ளது.

இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண பொருட்கள் தொடர்பாக பல இடங்களில் இருந்து முறைப்பாடுகள் வந்த போதும் அவை தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்காது, கைகட்டி, வாய்பொத்தி கண்களை மூடிக்கொண்டு பலநோக்கு கூட்டுறவு சங்கம் தெரிவிக்கும் கருத்தை தேவ வாக்காக ஏற்றுக் கொண்டு இவ் அரசாங்க அதிகாரிகள் இருந்து விடுகின்றனர். ஆனால் யாழ், செயலகத்தில் கடமையாற்றும் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்த நபர் ஒருவருக்கு நிவாரணம் வழங்கப்படாததால் அவர் கொடுத்த புகாருக்கு இணங்க யாழ். மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் சென்ற குழு பலநோக்கு கூட்டுறவு சங்கங்களில் திடீர் சோதனை ஒன்றை மேற்கொண்டது . இதில் சில உண்மைகள் வெளியாயின. தனக்கு தனக்கு என்றால் சுழகு படக்கு படக்கு என அடிக்கும் என்பார்கள். உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதே சமயம் இப் பொருட்கள் யாழ். செயலக பண்டகசாலையில் இருந்து விநியோகிக்க படுவதில்லை என்றும் மேற்படி பண்டகசாலையில் இருந்து பொருட்கள் எடுக்கும் போது பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினர் தரத்தை பார்த்து எடுக்க வேண்டும் என செயலக அதிகாரிகள் தெரிவித்த கருத்தை பலநோக்கு கூட்டுறவு சங்க ஊழியர்கள் ஏற்க முடியாது என நிராகரித்து விட்டதாகவும் தெரியவருகிறது.

தம்மிடம், மக்கள் பாவனைக்கு உதவாத பொருட்கள் இல்லை என்றும் பாவனைக்கு உதவாத பொருட்களை அரைத்து கோழிதீனுக்கு விற்பனை செய்யவதாகவும் யாழ். செயலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அப்படியானால் இப் பாவனைக்கு உதவாத பொருட்களை எப்படி கூட்டுறவு ஆணையாளர் திணைக்களத்தினால் இன்று வரை ஏன் கண்டு கொள்ள முடியாமல் போயிற்று என்பது புரியாத புதிராகவே உள்ளது.

இதே போன்று பட்டியலுக்கு அமைய நடைபெறும் பொருள் விநியோகம் இவ் இடங்களில் நடைபெறுவதில்லை. பிரதேச செயலர் பிரிவுகளுக்கு இடையேயும், ஏன் பல நோக்கு சங்கங்களுக்கு இடையேயும் பொருட்களின் அளவுகள் வேறுபட்டு காணப்படுகின்றது. சில சமயம் பற்று சீட்டில் பொருள் குறிக்கப்பட்டு பின்புறத்தில் அதில் அடங்கும் பொருட்கள்



வழங்கப்படவில்லை எனவும் எழுதி கொடுக்கப் படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் யுத்தம் உச்ச நிலை அடைந்த போது, கோதுமை மாவுக்கான பலத்த தட்டுப்பாடு நிலவிய நேரம், பத்து மெற்றிக் தொன், கோதுமை மாவை (இடம் பெயர்ந்த நிலையில்) கூட்டுறவு சங்கம் யாழ். செயலகத்தில் இருந்து பெறப்பட்டு கறுப்பு, சந்தை விலையில் இச் கோதுமை மாவை விற்பனை செய்யப்பட்டுள்ளது. இக் கோதுமை மா கூட்டுறவு உதவி ஆணையாளர் அனுமதியுடன் கள்ள சந்தையில் விற்பனை செய்யப்பட்டதாக தற்போது அப் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

எது எப்படியாக இருந்தாலும் கூட்டுறவின் எந்த சட்டத்தின் கீழ் கறுப்புச் சந்தைக்கு இப் பொருள் போவதற்கான அனுமதி வழங்கப்பட்டது? கூட்டுறவு மக்கள் சங்கமா? கறுப்பு சந்தை உற்பத்திக்கான இடமா? இதே போன்று கோதுமை மா தாராளமாக சந்தைக்கு வந்துள்ள நிலையில் மா தனியார் எவரிடமும் இல்லை. கூட்டுறவு சங்கம் ஊடாக தற்போது மா விநியோகிக்கப்படுகின்றது. இந்த நிலையில் 40 மூடை கோதுமை மா ஒரு தனியார் வர்த்தக நிலையத்தில் இருப்பது விலை கட்டுப்பாட்டு அதிகாரிகளினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு நாட்டுயர்வு என ஒரு காலகட்டத்தில் கூறப்பட்டாலும் யாழ்ப்பாணத்தை பொறுத்த மட்டில் இது பொய்யான ஒன்றாகவே இருக்கின்றது.

மக்கள் இடம் பெயர்வை சாட்டாக வைத்து கிராமசேவையாளர் பலர் கொழுத்த இலாபம் ஈட்ட முற்படுகின்றனர். இடம் பெயர்ந்த மக்களின் உலர் உணவு விநியோக விடயத்தில் கிராம சேவையாளர்கள் சிலர் பெரும் மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவை சேர்ந்த ஒரு கிராம சேவையாளர் 137 உலர் உணவு விநியோக அட்டை வைத்திருந்த போது கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டார். ஆனால் நடந்தது என்ன? இக் கிராம சேவையாளருக்கு இடமாற்றம் ஒன்று மட்டுமே நடைபெற்றது. இவர் அங்கும் இதனை தான் மீண்டும் செய்ய போகின்றார்.

ஐந்தாயிரத்துக்கு மேற்பட்ட அரச உடமையை ஒருவர் திருட எத்தனித்தால் அல்லது மறை முகமாக பெற எத்தனித்தால் சட்டமா அதிபர் உத்தரவு வரும் வரை அவருக்கு பிணை வழங்க முடியாது. ஆனால் 137 உலர் உணவு அட்டை மூலம் மேற்படி கிராம சேவையாளர் இருபது ஆயிரம் ரூபா அரசாங்க சொத்தை திருடி இருக்கின்றார். இவர் மீது ஏன் சட்ட நடவடிக்கை எடுக்க யாழ். செயலகம் பின்நிற்கின்றது.

இது மட்டும் அல்ல இன்னும் பல கிராம சேவையாளர்கள் இவ்வாறு உழைக்கின்றனர். இதனை அதிகாரி ஏன் தடுத்து நிறுத்த முடியாது? தற்போது பதியப்படும் இரண்டாயிரம் ரூபா நிவாரணத்திற்கு இதே போன்று தான் நடக்கப்போகின்றது. இந்த கூட்டுறவும் கிராம சேவையாளரும் தான் மக்கள் யுத்த தாக்கத்தினால் சிக்குண்டு இருக்கும் போது உதவ போகின்றார்கள் போலும்!

இவர்களை நம்பி மக்களுக்கான சேவைகளை மேற் கொண்டால் கஷ்டப்படப்போவது மக்கள் தான். யுத்தம் இன்று நாளையுடன் முடிவடையப் போவதில்லை. எனவே மக்களை சுரண்டும் இப் பல நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கும் கிராம சேவையாளருக்கும் நடவடிக்கை எடுக்க அரசாங்க அதிகாரிகள் தொடர்ந்து தயக்கம் காட்டுவதற்கு என்ன காரணம் என புரியாமல் இருக்கின்றது.

மக்கள் நலனை பாதிப்பவர்களையும், அரச சொத்துக்களை சுரண்டுபவர்களையும் நீதி மன்றத்தில் நிறுத்தி நடவடிக்கை எடுக்காமல் எச்சரிக்கை கடிதம் இடமாற்றக் கடிதம் வழங்குவதன் மூலம் இதனை தீர்த்து விட முடியாது. எனவே இனியாவது அரசாங்க அதிகாரிகள் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து மக்களை காப்பாற்ற முன்வரவேண்டும்.

## உரத்த சிந்தனை

# தேசியம் தொடர்பான தத்துவ விளக்கத்தை ஆராய்வோம்

பாட்டாளி வர்க்கம் தனது சொந்த வர்க்கப்போராட்டத்தை நடாத்த, முன்னெடுக்க, சமூகத்தில் உள்ள எல்லாப்பிரச்சினையயையும் கவனத்தில் எடுக்கின்றது. ஒரு பிரச்சனையில் பாட்டாளி வர்க்கம் தலையிடுகிறது என்றால், அது வர்க்கப் புரட்சிக்காக மட்டுமே தான் என்பதை ஒரு நிமிடம் கூட மறந்துவிடக் கூடாது. இதைநாம் மறந்து போகும் ஒவ்வொரு நிமிடமும் தன்னெழுச்சியின் பின், சுரண்டும் வர்க்க கனவுகளின் பின் இழுபட்டு, பாட்டாளி வர்க்கத்துக்கு துரோகம் செய்பவர்களாக இருப்போம்.

இந்த வகையில் தேசிய இனப்பிரச்சினையை பாட்டாளி வர்க்கம் கவனத்தில் எடுக்கின்றது எனின், அது பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காகவே ஒழிய, வேறு எந்தக் காரணத்துக்காகவும் அல்ல.

இது தொடர்பாக லெனின்,

***"எந்தஒரு தேசியக் கோரிக்கையையும் ஒரு தேசியப்பிரிவினையையும் தொழிலாளர் வர்க்கப் பேராட்டம் என்ற கோணத்திலிருந்து மதிப்பிடுகின்றது."***

**லெனின்**

**தே.இ.சு.க (பக்-33-)**

உலகளவில் எழுப்பப்படும் தேசிய இனக் கோரிக்கைககள், போராட்டங்கள், பிரெஞ்சு முதலாளித்துவ புரட்சிக்கு முன்னிருந்து இன்று வரை தொடரும் ஒரு பிரச்சனையாக உள்ளது. இது உலகளவில் கம்யூனிச சமூகம் உருவாகும் வரை நீடிக்கப் போகும் பிரச்சனையாகவும் உள்ளது.

நாம் பாட்டாளி வர்க்க போராட்ட சகாப்தத்தில் வாழும் ஒரு புரட்சிகர சமூகத்தில் உள்ளவர்கள் என்ற வகையில், இப் பிரச்சினை மீது தலையிடவும். போராடவும் கற்றுக்கொள்வது அவசியமானதாக உள்ளது.

தேசியக் கோரிக்கை என்பது, திட்டவட்டமாக பாட்டாளிவர்க்க நலனுக்கு எதிரானது என்பதை ஆழமாக கவனத்தில் கொண்டு, தேசியக் கோரிக்கையின் பின் எழும்பும், ஜனநாயகக் கோரிக்கைகளை ஆதரித்தும், அதற்காக போராடியும், தேசியக் கோரிக்கையை தகர்த்து எறிய வேண்டும். இதை லெனின் வார்த்தையில் பார்ப்போம்.

***"பூர்ஷ்வா தேசியவாதமும் பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதமும் இணக்கம் காண முடியாதபகைமை கொண்ட இருவேறு கோஷங்களாகும். இவை முதலாளித்துவ உலக முழுமையிலும் நிலவும் மாபெரும் இருவேறு வர்க்க முகாம்களுக்கு ஏற்ப அமைந்து தேசிய இனப்பிரச்சனையில் இரு வேறு கொள்கைகளின் (மேலும் இருவேறு உலகக் கண்ணோட்டங்களின்) வெளிப்பாடுகளாக விளங்குகிறவை".***

**-லெனின்-**

**-21, தேசிய இனப்பிரச்சினை பற்றி விமர்சனக் குறிப்புகள்**

தேசிய இனப்பிரச்சினையில் எழும் எல்லா ஜனநாயக கோரிக்கையை ஆதரிப்பதும், போராடுவதும் பாட்டாளிகளின் கடமையாகும். அதே நேரம் அனைத்து தனிச்சலுகைக் கோரிக்கையையும் எதிர்த்துப் பேராடவும் வேண்டும்.

தேசிய இனப்பிரச்சினை தோடர்பாக வெளிவரும் எல்லா கோரிக்கையையும் மிக நுணுக்கமாக அணுகுவதும், அதன் பின் மறைந்துள்ள சுரண்டும் வர்க்க நலன்களை இனம் கண்டு கொள்வதும் அசியமாகும்.

இன்று மார்க்சியம் பேசியபடியும், பல்வேறுகோட்பாட்டுத்தளத்திலும் முன்வைக்கப்படும் தேசியக் கோரிக்கையை பாட்டாளி வர்க்கம் அணுகும் போது பாட்டாளி வர்க்க நலனுக்கு எதிரான ஜனநாயகக் கோரிக்கை அல்லாத எல்லாக் கோரிக்கையையும் நிராகரிக்க வேண்டும். எதிர்த்துப் போராடவும் வேண்டும்.

மாக்சியம் இதை நுணுக்கமாக ஆராய்ந்து வழங்கிய ஒரு கோட்பாடுதான் சுயநிர்ணயக் கோட்பாடாகும். யார் சுயநிர்ணயக் கோட்பாட்டை தேசிய இனப்பிரச்சனையில் கையாளத் தவறுகின்றனரோ, அவர்கள் உண்மையில் முதலாளித்தவ தேசியத்தைத்தான் பிரதிபலிக்கின்றனர் என்பதை வேறு எந்த விளக்கமும் இன்றிப் புரிந்து கொள்ள முடியும்.

சுயநிர்ணயக் கோட்பாடு மீது இன்று பல்வேறு விளக்கங்களை வழங்குவதில், முதலாளித்தவ தேசியவாதிகள், திரிபுவாதிகள், ஏகாதிபத்திய கோட்பாட்டாளர்கள் வேறுபாடு இன்றி முனைப்பாய் உள்ளனர்.

தேசிய இனப்பிரச்சினை மீதான சுயநிர்ணயக் கோரிக்கை என்பது, ஒடுக்கும் இனத்தின் உரிமை தொடர்பான, அவர்களுக்கே உரித்தான பிரச்சினைக்கான தீர்வாகும்.

சுயநிர்ணயம் என்பது, ஒடுக்கப்பட்ட மக்களின் பிரிந்து வாழ்வதா? சேர்ந்து வாழ்வதா? என்ற தேர்வை செய்து கொள்ளும் உரிமையை வழங்கும், அதி கூடிய ஜனநாயக உரிமையாகும். இதைத் தாண்டிய ஒரு தீர்வை யாரும் வழங்க முடியாது.

சுயநிர்ணயத்தை பயன்படுத்தும் உரிமை ஒடுக்கப்படும் தேசிய இனத்துக்கு மட்டும் உரித்தானது. இதன் மீது விளக்கம் சொல்ல, கட்டுப்படுத்த ஒடுக்கும் தேசிய இனத்துக்கு எந்த உரிமையும் கிடையாது.

சுயநிர்ணயக் கோட்பாடு மீதான திரிபு பின்வரும் வகையில் பொதுவாக உள்ளது.

1. பிரிந்து போவதை மறுத்தல்.
2. ஐக்கியமாக மட்டும் இருத்தல்.
3. சுயநிர்ணயம் என்பது பிரிந்து போவது மட்டும் தான்.
4. ஐக்கியமாகப் போவதை மறுத்தல்.
5. சுயநிர்ணயம் என்பது எதுவுமற்றது.

பொதுவாக இந்த ஐந்து வகைக்குள் கருத்துக் கூறியபடி தான், தேசிய போராட்டமும் தேசிய ஒடுக்கு முறையும் கட்டியமைக்கப்படுகின்றன.

சுயநிர்ணயம் என்றால் என்ன? ஒரு தேசிய இனம் தனியரசாகப் பிரிந்து போவதற்கான ஜனநாயகக் கோரிக்கையை கொண்டது தான். இன்னுமோர் இனத்துடன் ஒன்றாக வாழ்வது, வாழ முடியாத தெரிவை வழங்கும் ஒரு ஜனநாயகக் கோரிக்கைதான். இதைத் தாண்டியது அல்ல சுயநிர்ணயக் கோட்பாடு. இதை லெனினை விட வேறுயாரும் விளக்கமாக விளக்கி விடவில்லை. லெனின் என்ன சொல்கிறார் எனச் சுருக்கமாகப் பார்ப்போம்.

இது தொடர்பாக லெனின்,

***"எந்த தேசிய இனத்துக்கும் எந்த மொழிக்கும் எல்லாவிதமான தனியுரிமைகளும் இல்லவே இல்லை. தேசிய இனங்களது அரசியல் சுயநிர்ணயப் பிரச்சினை. அதாவது அவை அரசுகளாகப் பிரிந்து செல்லும் பிரச்சினை. முழு அளவுக்குச் சுதந்திரமான ஜனநாயக வழியில் தீர்க்கப்படுதலாகும். எந்த ஒரு தேசிய இனத்துக்கும் எந்தவிதமான சிறப்புரிமையும் அளிப்பதாகவோ, தேசிய இனங்களது சமத்துவத்துக்கு அல்லது தேசிய இனச் சிறுபான்மையினரது உரிமைக்கு ஊறு செய்வதாகவோ.............................." இருக்க முடியாது என்கின்றார்.***

**லெனின்,**

**தே.வி.ப.கு.(ப-14)**

***"எல்லாத்தேசிய இனங்களுக்கும் பிரிந்து போகிற உரிமையை ஒப்புக்கொள்வது, பிரிந்து போகின்ற பிரச்சினை எழுகின்ற போது எல்லா ஏற்றத்தாழ்வுகளையும், எல்லா விஷேச உரிமைகளையும் எல்லாத் தனித்துவப்போக்கையும் நீக்கும்நோக்கத்துடன் அதைஅணுகிச் சீர்தூக்கிப்பார்ப்பது" மட்டும் தான் பாட்டாளிகளின் சர்வதேசக் கண்ணோட்டமாகும்.***

**லெனின்.**

**தே.இ.சு.உ. (ப-35)**

***"நமது அரசியல் கிளர்ச்சியில் பிரிந்து போகும் உரிமை பற்றிய கோஷத்தை முன்வைத்து ஆதரித்து பேசத் தவறினால் நாம் பூர்சுவாக்களின் நோக்கத்துக்கே உதவுவோம் என்பது மட்டுமல்ல, ஒடுக்கின்ற தேசிய இனத்தின் நிலப் பிரபுக்களின், அதன் வரம்பிலா ஆட்சியின் நோக்கத்துக்கே கூட உதவுவோம்" என லெனின் ஒடுக்கும் இனப்பாட்டாளின் கடமையை தெளிவாக்குகின்றார்.***

**-லெனின்-**

**தே.இ.சு.உ.(ப-34)**

***லெனின் மேலும் "ஒடுக்கும் நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களைச் சர்வதேசியவாத உணர்வில் பயிற்றுவிக்கும் பொழுது ஒடுக்கப்படும் நாடுகளுக்குப் பிரிந்து போகும் சுதந்திரமளிக்க வேண்டும் என்பதைஅவர்கள் ஆதரித்து, அதற்காகப் போராடவேண்டும் என்பதை வலியுறுத்தவேண்டும். இது இல்லாமல் சர்வதேசியவாதம் என்பது இருக்க முடியாது. ஒடுக்கும் தேசிய இனத்தைச் சேர்ந்த சமூக-ஜனநாயகவாதி அத்தகைய பிரச்சாரத்தைச் செய்யத் தவறினால் அவ்வாறு தவறியவர் ஒவ்வொருவரையும் ஏகாதிபத்தியவாதி என்றும் கயவர் என்றும் கருதுவது நமது உரிமையும் கடமையுமாகும்." என்கின்றார். (அடிக்கோடு லெனின்)***

**லெனின்.**


**தே.வி.பா.ச (ப.245)**


***மேலும், லெனின் "சிறிய தேசிய இனத்தைச் சேர்ந்தஒரு சமூக ஜனநாயகவாதி. தமது கிளர்ச்சி முறையில் நமது பொதுச்சூத்திரத்தின் இரண்டாவது சொல்லை- "தேசிய இனங்களின் மனப்பூவமான ஐக்கியம் என்பதை வலியுறுத்த வேண்டும். அவர்கள் எல்லாச் சமயங்களிலும் குறுகிய தேசிய இன மனப்பான்மை, தனித்திருத்தல், ஒதுங்கி வாழுதல், ஆகியவற்றுக்கு எதிராக போராட வேண்டும். முழுமையையும் பொதுமையையும் ஏற்றுக் கொள்வதற்காகப் போராட வேண்டும். பொது அம்சத்தின் நலன்களுக்குத் தனி அம்சத்தின் நலன்கள் கீழ்ப்பட்டவை என்பதற்காகப் போராட வேண்டும். என்றார் லெனின்.***

**லெனின்.**

**தே.வி.பா.ச (ப 246)**

## தேசியம் எப்பொழுதும் பாட்டாளிவர்க்க கோரிக்கையல்ல





சுயநிர்ணயக் கோட்பாடு என்ன நிலையில் என் தளத்தில், எந்தவர்க்க கண்ணோட்டத்தில். இயங்குகிறது என்பதை லெனினின் மேற்கோள்கள் தெளிவாக்குகின்றன.

தமிழ் ஈழ தேசிய விடுதலைப் போராட்டத்தில், இன்று ஏற்பட்டுள்ள மார்க்சிய கலைப்பு வாதத்தில் சுயநிர்ணய உரிமை என்பது பந்தாடப்படுகின்றது. ஒரு புறம் ஐக்கிய இலங்கை என்றும், மறுபுறம் தமிழ் ஈழம் என்ற ஒரு நிலைக்குள் அணிகள் அணிவகுக்கின்றன. இன்னுமொரு புறம் பெரும்பான்மையினப் பிரிவு பிரிவினைக் கோரிக்கையை மறுக்கின்றது. இன்னுமொரு மார்க்சிய திரிபுக்கு உட்பட்ட பல்வேறு கோட்பாட்டைப் பெற்று தேசியத்தைக் கற்பிதமாகப் பார்த்து ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்கின்றது.

சுயநிர்ணயக் கோட்பாடு மார்க்சிய கலைப்புவாதத்துடன் பாட்டாளி வர்க்த்துக்கு எதிராக செயல் தளம் இடப்படுகின்றது.

இந்தியாவில் இன்று தமிழ் நாட்டு தனிநாட்டுக் கோரிக்கை முன்வைத்து பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக செயல்தளம் இடப்படுகின்றது. இதற்கு லெனினைத் திரித்தும் மறுபுறம் மார்க்சிய திரிபுவாதம் ஊடாகவும் அடிக்கல் இடப்படுகின்றது.

ஒடுக்கப்பட்ட பாட்டாளி ஏன் ஐக்கியப்பட முடியாது என்ற கேள்விக்கு பதிலளிக்காது, நகரும் இந்தப் புதிய பிரிவுகள் இயல்பில் ஏகாதிபத்தியத்துக்கு மறைமுகமாக சேவகம் செய்யத் தொடங்கியுள்ளனர்.

உலகளவில், மக்கள் தமக்கு இடையில் உள்ள இடை வெளிகளைக் கடந்து செல்லும் முயற்சிக்கு போராடுவது, பாட்டாளிகளின் இன்றைய சர்வதேசிய கடமையாகும்.

இன்று உலக மயமாதல் இரண்டு போக்குகளில் நடக்கின்றது.

1. ஒடுக்கப்படும் மக்கள் கீழிருந்து தமக்குள் வன்முறையின்றி ஐக்கியப்படும் போக்கு மிக வேகம் பெறுகிறது.

2. சுரண்டும் பிரிவுகள் தமக்குள் மேலிருந்து ஐக்கியப்படும் போக்கின் ஊடாக சுரண்ட மிக வேகமாக முனைப்புப் பெற்றுள்ளனர்.

இந்த இரு போக்கும் உலக இடைவெளியை கடக்கும் வழியில் தொழிற்படுகின்றது. ஆனால் இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று ஒட்ட முடியாத நேர் எதிர் பண்பை அனைத்துத் துறையிலும் கொண்டுள்ளது.

சர்வ தேசியக் கண்ணோட்டத்துடன் உலகில் ஒடுக்கப்பட்ட மக்களின் ஐக்கியத்துக்காக எந்தவிதமான விட்டுக் கொடுப்பும் இன்றி போராட வேண்டும். அதேநேரம் மக்களை சூறையாட ஒன்றிணைந்த உலக மயமாதல் சுரண்டலை எதிர்த்து ஈவு இரக்கமின்றிப் போராட வேண்டும்.

உலகு இன்று இரண்டு பாதைகளுக்குள் மட்டும் நகர்கின்றது. இதற்கு வெளியில் ஒரு பாதை உண்டெனக் கூறுவது, உண்மையில் சுரண்டல் பிரிவை மறைக்கத்தான். இதன் மூலம் சுரண்டலைத் தீவிரமாக்கத்தான். இந்த வகையில் தான் தேசியக் கோரிக்கையும் உள்ளது.

ஓர் ஒடுக்கும் இனத்தின் ஜனநாயகக் கோரிக்கையை முன்னெடுப்பதற்கு பதில், முன்வைக்கும் தேசியக் கோரிக்கை அடிப்படையில் தனிச்சலுகையைக் கோருவதுடன், சுரண்டலை நீடிக்க வைப்பதுமாகும். ஜனநாயகக் கோரிக்கையை சரியாக முன்னெடுக்கும் எந்தப் பிரிவும் அதை சுயநிர்ணய அடிப்படையில் சர்வதேசிய கண்ணோட்டத்துக்குள் தான் எடுக்க முடியும் என்ற ஆழமான உண்மையை புரிந்து கொள்வது எம்முன் உள்ள கடமையாகும்.


பி. றயாகரன்

# தெளிவான இனத்துவ வரையறையை




**இலங்கை முஸ்லிம்கள் மட்டுமன்றி, உலகத்தில் எந்த இடத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்தாலும் தங்களை அடையாளப்படுத்துவதற்கு மதத்தையே பிரயோகிப்பது அவர்களுக்கான ஓர் அம்சமாக இருக்கின்றது. இதனால் இரத்த உறவு, பாரம்பரியங்கள், கலாசாரம் போன்றவற்றுக்கு அப்பால் மதத்தினைக் கொண்டு தங்களை அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். இதற்கு இலங்கை முஸ்லிகளும் விதிவிலக்கல்ல.**

இலங்கை முஸ்லிம்களை தனியானதொரு இனமெனக் கொள்ள முடியாது. ஏனெனில், முஸ்லிம் சமூகத்தை ஒரு தேசிய இனமாகக் கொள்வதற்கு இனம் பற்றி



ஆய்வாளர்களினால் முன்வைக்கப்படுகின்ற கோட்பாடுகளுக்குள் அவர்களை முழுமையாக உள்ளடக்கிக் கொள்ள முடியாதவர்களாக இருப்பதினாலாகுமென்ற காரணம் மேலோட்டமாகக் கூறப்பட்டு வருகின்றமையேயாகும்.

இலங்கை முஸ்லிம்களை ஒரு தேசிய இனமாகக் கொள்ள முடியாது என்கின்ற சிந்தனை ஏறத்தாழ நூற்றி ஐம்பது ஆண்டுகளாக இங்கு இருந்து வருகின்றது. இக் கருத்தினை எமது அண்டைய நாடான இந்தியாவின் தமிழ் நாடு வரை பரப்பியும் வைத்துள்ளனர். இக்கருத்தினை இலங்கைத் தமிழ் அரசியல் வாதிகளில் பெரும்பாலாரும், சில சிங்கள அரசியல்வாதிகளும், விரல் விட்டெண்ணக் கூடிய முஸ்லிம் அரசியல் வாதிகளும் கொண்டுள்ளனர்.

இலங்கை முஸ்லிம்களை தனியானதொரு தேசிய இனமல்லவென்ற கருத்தை முன்வைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும், முன்வைப்போர்களின் பின்னணியையும் நாம் கூர்ந்து நோக்கின் அந்தச் சூழலும், அவர்களும் அரசியல் ஆதாயம் தேடும் நோக்கமன்றி வேறெதுவும் இருக்காமையைப் புரிந்து கொள்வதில் சிரமமிருக்காது.

சேர். ராஸீக் பரீத் "எனது உடலில் சிங்கள இரத்தம் ஓடுகிறது என்பதில் நான் பெருமிதப்படுகின்றேன்." என்ற கருத்துத் தொனிக்க தெரிவித்தமை, முன்னால் யாழ் உதவி மேயர் "எனது உடலில் தமிழ் இரத்தம் ஓடுகிறது என்பதில் நான் பெருமைப்படுகிறேன்." என்ற கருத்துப்பட உரைத்தமை.

1985இல் சேர், பொன் இராமநாதன் "இலங்கை முஸ்லிம்கள் இனத்தால் தமிழர்கள்" என்ற கருத்துப்பட கூறியமை, டாக்டர் இலியாஸ் 1977 பொதுத்தேர்தல் பிரசாரகாலத்தில் "தமிழர்களும் முஸ்லிம்களும் இரத்தக் கலப்புள்ளவர்கள்" என்று பிரசாரம் செய்தமை. "இலங்கையில் வாழும் அத்தனை முஸ்லிம்களும் தமிழர்களே. அவர்களின் தாய் மொழியும் தமிழே. அவர்களின் சமயம் மட்டும் இஸ்லாம்" என ராணி இதழ் 1987இல் வெளிப்படுத்தியமை.

"இலங்கை முஸ்லிம்கள் மரக்கலத்தில் வந்து குடியேறிய வந்தேறிகள்" என எஸ். கே.வடிவேலு வரைந்தமை. "இலங்கையில் இரண்டு பிரதான தேசிய இனங்கள் வாழ்கின்றன." என தினகரனில் இடம் பெற்றமை. "இலங்கையில் இரு தேசிய இனங்களே உள்ளன. அவை சிங்களவர், தமிழர் ஆகியோரே அந்த இரு இனத்தினராவர்" என தினமுரசு வெளிப்படுத்தியமை.

"இலங்கை முஸ்லிம்களை ஒரு தேசிய இனமென்று கூறமுடியாது. இலங்கையில் சிங்கள தேசிய இனம், தமிழ் தேசிய இனம் ஆகிய இரண்டு தேசிய இனங்களே உள்ளன. இந்த வகையில் முஸ்லிம்களுக்கு அரசியல் சுய நிர்ணய உரிமை இலங்கையில் இல்லை. ஒரு தேசிய இனத்திற்கே சுய நிர்ணய உரிமை இருக்கிறதேயன்றி ஒரு சமூகத்திறகு அந்தஉரிமை கிடையாது" என நவமணி பத்திரிகைக்களித்த பேட்டியில் தமிழ் அரசியற் கட்சிப் பிரமுகர் தெரிவித்தமை.

இப்படியான கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுவதன் பிரதான இலக்கு அரசியல் நன்மை கருதி என்பதை நாம் தெளிவாக அவதானிக்கலாம். ஆதலால் இதுவொரு குறுகிய மனோ பாவத்தினதும், பரந்த சிந்தனைகளுக்குப் புறம்பானதும் என்பதை ஆழமாகச் சிந்திக்கும் எவரும் இலகுவில் விளங்கிக் கொள்ளலாம்.

ஒரு தேசிய இனத்தை அளவிடுவதற்கு பின்வரும் பண்புகளை அளவு கோல்களாக பெரும்பாலானவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

தேசம் அல்லது அரசியல் அடையாளம்.

**மொழியியல்.**

**கலாசாரம்.**

**பொருளாதாரம்.**

**பௌதீகவியல் (நிறம், தோற்றம் – அமைப்பு, தோல், குருதி, பாரம்பரியம்)**

**மதம்.**

இனம் பற்றிய சிந்தனைகளில் மானிடவியல், சமூக விஞ்ஞான அறிஞர்கள் தமக்கிடையே அளவீடு சம்பந்தமான பண்புகளை ஒன்றுக்கொன்று வேறுபாடாக" வெளிப்படுத்தி உள்ளனர். இதனால் பிரதேசத்திற்கு பிரதேசம், சமூகத்திற்கு சமூகம் மாறுபாடான அளவீடுகளை பிரயோகித்திருப்பதையும் காணலாம்.

"இனம்" என்ற சொல் 6ம் நூற்றாண்டுகளுக்குப் பின்னரே தோற்றம் பெற்றதாக நம்பப்படுகின்றது. ஐரோப்பிய மொழிகளில் இச் சொல் 6ம் நூற்றாண்டிலிருந்தே கையாளப்பட்டிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. "உடலியல் கூறுகளினால்-பண்புகளினால் ஒரு குழுவினரிடமிருந்து வேறுபடும் இன்னொரு குழுவினரைக் குறிக்கும் "பொருளில் இனம்" எனும் சொல் பயன்பட்டது. மிக அண்மையில் என்பதும் ஆய்வுகள் முன்வைக்கின்ற ஒன்றாகும்.

தேசிய இனம் பற்றிய பலவரையறைகள் இருந்த போதிலும் ஸ்டாலினின் கருத்தான "பொதுவான மொழி, வாழ்புலம், பொருளாதார வாழ்வு, பொதுவான கலாசாரமுடைய வரலாற்றுப் பாராம்பரியம் உடையவர்களுமான மக்கள் குழுவே" ஒரு தேசிய இனமாகும் என்ற கூற்றினை பலர் ஏற்றிருப்பதனைக் காணலாம்.

தேசிய இனத்துவம் பற்றிய இச்சிந்தனைகள் - கோட்பாடுகள் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் செயலிழந்ததாக அல்லது பொருளற்றதாக மாற்றப்பட்டிருப்பதை வரலாறு நமக்கு விவரிக்கின்றது. இனத்துவ அளவீடுகளில் மதமும் ஒரு சமூகத்தை தனியான இனமாக அடையாளப்படுத்த பயன்பட்டிருப்பதை மானிடவியலாளர்களும், சமூக ஆய்வாளர்களும் இக்காலத்தில் ஏற்றுள்ளனர்.

"இனக்குழு என்பதனால் கருதப்படுவது யாதெனில், வரலாற்று ரீதியாக வரையறுக்கப்பட்ட சுய உணர்வுள்ள ஒரு சமூகமாகும். அதற்கு பெரும்பாலும் மொழியும் சமயமும் முக்கிய அம்சங்களாக அமைந்த சிறப்பான வரலாறும், பண்பாடும் உண்டு" என சேனக்க பண்டார நாயக்க சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியாவின் பஞ்சாப்பில் மொழியை அடிப்படையாகக் கொள்ளாது சமயத்தை அடிப்படையாகக் கொண்டு மாகாண அரசு வழங்கப்பட்டமையும், பொது மொழி மட்டும் ஒரு தேசிய இனத்தை உருவாக்கி விடாது. அதே நேரம் தொடர்ச்சியான பிரதேசம் அவசியமான பண்பாயினும் இதுவும் ஒரு தேசிய இனத்தை நிர்ணயிக்க நிலையான சான்றல்ல வென்பதும் வரலாற்று உண்மைகளாகும்.

சமய அடிப்படையில் ஒரு தனித்துவமான சமுதாயம் நீண்ட நாட்களாக வாழ்ந்து வருவார்களாயின் அவர்களை மத அடிப்படையிலான சுய அடையாளம் தேசிய இனச் சுய நிர்ணய உரிமை பெற தகுதியுடையவர்களாகக் கொள்ளலாம். இதற்கு முன்னாள் "யூகோஸ்லாவியாவில் முஸ்லிம், கத்தோலிக்க, மரபுசார்ந்த கிறிஸ்தவர் தனித் தேசிய இனங்களாக அடையாளப்படுத்தப்பட்டதை" உதாரணமாகக் கொள்ளலாம்.

"இலங்கையில் வாழும் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் யாவரும் ஒரேவகையான உடலியற் பண்புகளை கொண்டிருந்த போதிலும் வெவ்வேறான இனக்குழுக்களாகவே உள்ளனர். தனித்தனி இனக் குழுக்களாக [illegible] சமயம், மொழி ஆகியவையும் ஏனைய பண்பாட்டுத்தனித் தன்மைகளுமாகும்." என சித்திரலேகா மௌனகுரு குறிப்பிடுவதும் குறிப்பிடத்தக் கதாகும்.

"இலங்கையில் இனம் கட்டமைக்கப்பட்டுள்ளமை, சிங்களவர், தமிழர், முஸ்லிம், மற்றும் வேறுமக்கள் தொகுதி என்ற அடிப்படையிலேயாகும்." என எம். ஓ.ஏ.டி. சொய்சா எம். ஏ. சுட்டிக் காட்டியுள்ளார். ஆயின், இலங்கை முஸ்லிம்களும் ஒரு தேசிய இனமாகவே கொள்ளப்படுகின்றனர். அதே நேரம் இனத்துவ கோட்பாடுகளும் ஏற்றுக் கொள்கின்ற ஒன்றில் முஸ்லிம்கள் ஒரு தேசிய இனமல்லவென குறிப்பிடுவது இயல்பாகவே ஏற்கப்பட்டவொன்றில் புதிய அபிப்பிராயத்தை தோற்றுவிப்பதாகவே அமையும்.

இலங்கை முஸ்லிம்கள் மட்டுமன்றி, உலகத்தில் எந்த இடத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்தாலும் தங்களை அடையாளப்படுத்துவதற்கு மதத்தையே பிரயோகிப்பது அவர்களுக்கான ஓர் அம்சமாக இருக்கின்றது. இதனால் இரத்த உறவு, பாரம்பரியங்கள், கலாசாரம் போன்றவற்றுக்கு அப்பால் மதத்தினைக் கொண்டு தங்களை அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். இதற்கு இலங்கை முஸ்லிகளும் விதிவிலக்கல்ல.

இப்பண்பு நேற்று இன்று தோன்றிய ஒன்றல்ல. இருபதாம் நூற்றாண்டுகளுக்கு முன்னரே அதாவது, மனித உற்பத்தியான தபி ஆதம் (அலை) அவர்கள் காலம் தொட்டே முஸ்லிம்கள் மதத்தின் மூலமே தங்களை அடையாளப்படுத்தி வந்துள்ளனர் என்பதே குர் ஆனின் கூற்றாகும்.

ஸ்டாலின் போன்றவர்களும், மானிட, சமூக ஆய்வாளர்களும் முன்னரேயே முஸ்லிம்களின் அடையாளம் நிறம், கோத்திரம், மொழி, இரத்தம், பிரதேசம், தோல் போன்ற தன்மைகளினால் அடையாளப்படுத்த முடியாதவை என்றும் அவர்களின் தனித்துவமான சுய அடையாளம் மதம் சார்ந்தது என்பதும் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். எனின், இலங்கை முஸ்லிம்களின் சுய அடையாளம் மதத்தின் வழி நின்று பெறத்தக்கதாகும்.

மாறாக, "இஸ்லாமியத் தமிழர், சிங்கள முஸ்லிம்கள்" போன்ற அடைமொழிகளினால் முஸ்லிம்களை அழைப்பதோ, கணிப்பதோ அடையாளப்படுத்துவதோ அறிவுபூர்வமான நடவடிக்கையல்ல. உண்மையில் இலங்கை முஸ்லிம்கள் ஒரு தனியான தேசிய சமூகமாக அடையாளங் காணப்பட்டு, அரசியல் சுயநிர்ணய உரிமையுடையவர்களாக இனங் காணப்பட்டுள்ளனர் என்பதே யதார்த்தமாகும்.

**இலங்கை முஸ்லிம்களை தனியானதொரு தேசிய இனமாக-சமூகமாக ஏற்றுக் [illegible] செல்வதற்கு ஏதுவான எந்தக் காரணங்களுமில்லை. எனவே, அவர்களைத் தேசிய சமூகமாக எல்லாத் தரப்பினர்களும் ஒப்புக் கொள்வது இன்றியமையாத ஒன்றாகும்.**

# தமிழ்த் தேசத்தில் ஓரம் கட்டப்படும் இந்திய வம்சாவழியினர்

**தமிழ் தேசிய அரசியல் அன்றிலிருந்து இன்று வரை**

**அரசியல் தொடர் -10**

-ஆதிசங்கரர்-

"தம்பி நீர் அகதி முகாம்களுடன் தொடர்புடையவர் தானே. அங்கை இருக்கிற இந்தியக்கார பெட்டைகளில் ஒன்றை வீட்டு வேலைக்கு பிடித்துத் தர முடியுமே"

1977ம் ஆண்டு, இனஅழிப்பு நடவடிக்கையைத் தொடர்ந்து வடபகுதிக்கு அகதியாகவந்த இந்தியவம்சாவழி மக்களின் அகதிமுகாம்களில் நான் பணியாற்றிய போது என் உறவுக்காரப் பெண்ணொருத்தி என்னிடம் கேட்ட உதவியே இது.

எனக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. "நீங்களும் மனிதர்களா" என ஆத்திரத்துடன் கூறிவிட்டு நான் வந்துவிட்டேன்.

இந்தச் சம்பவத்தை எனது அரசியல் நண்பன் ஒருவனிடம் கூறிய போது அவன் சிரித்து விட்டு "இதற்கேன் நீ ஆத்திரப் படுகிறாய். மலையக மக்கள் பற்றிய பனங் கொட்டைகளின் பார்வையே இது தான். உன் உறவுக்காரப் பெண் வெறும் குறியீடு மட்டுமே" என்றான்.

இந்திய வம்சாவழியினர்- வடக்கு கிழக்கு தமிழர்கள் உறவு தொடர்பாக எனக்கு ஏற்பட்ட முதல் அனுபவம் இது.

இரண்டாவது அனுபவம் வன்னியில் ஏற்பட்டது. வன்னியில் இன அழிப்பினால் அகதிகளான இந்திய வம்சாவழி மக்களை குடியமர்த்தும் பணிகளில் ஈடுபட்ட போது அங்கு பரம்பரையாக வாழும் மக்களையும் இந்திய வம்சாவழி மக்களையும் இணைத்து ஒரு சமூக நிறுவனம் ஒன்றை அமைக்க முற்பட்டோம். அது விடயமாக பரம்பரையாக வாழும் மக்களில் முக்கியமான ஒருவரைச் சந்தித்து பேசிய போது, "உந்த வடக்கத்தையான்களோட சேர்ந்தெல்லாம் எங்களால் பணியாற்ற முடியாது. உவங்களை யெல்லாம் நீங்கள் நம்புகின்றீர்கள். உவங்கள் உண்ட வீட்டுக்குள்ளை கக்கூசு இருக்கிறவங்கள்" என்றார்.

மூன்றாவது அனுபவம் அதுவும் வன்னியிலேயே ஏற்பட்டது.

நெடுங்கேணியிலுள்ள காந்தியத்தின் குடியேற்றத் திட்டமான நாவலர் பண்ணையில் நான் பணியாற்றிக் கொண்டிருந்த போது திடீரென்று ஒரு நாள் 50 பேரை வாகனத்தில் ஏற்றிக் கொண்டு காந்தீயத்தின் செயலாளர் டாக்டர் இராஜசுந்தரம் வந்தார்.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் குழந்தைகள், வயோதிபர்கள் என அந்தக் கூட்டம் நிறைந்து இருந்தது. "இவர்கள் எல்லாம் 1977 இன அழிப்பினால் இடம் பெயர்ந்தவர்கள். இவ்வளவு காலமும் செட்டி குளத்தில் ஒரு தமிழ் முதலாளி இவர்களை சொத்தடிமைகளாக வைத்திருந்தான். நாங்கள் இவர்களை மீட்டுக் கொண்டு வந்தோம்" என்றார் டாக்டர் இராஜசுந்தரம்.

வந்தவர்களுடன் ஆறுதலாக பேசிய போது தமிழ்முதலாளியிடம் தாங்கள் பட்ட துன்பங்களை கதைகதையாக கூறினர். ஓய்வில்லாத தொடர்ச்சியான வேலை, போதிய ஊதியத்தை தர மறுத்தல், வெளிச் சமூகத்துடன் தொடர்பு கொள்ள விடாமை, எதிர்த்தால் அடி, சித்திரவதைகள், என அவர்களின் சோகக்கதைகள் மனதைப் பிழிவனவாக இருந்தன.

அவர்களின் கதைகள் எல்லாம் அடிமைச் சமுதாயம் பற்றி மனிதகுல வரலாற்றில் கார்ல்மாக்ஸ் வர்ணித்தவை போல இருந்தன. நாங்கள் அடிமைச் சமுதாயத்தில் இருக்கிறோமா? என்ற சந்தேகம் கூட எனக்கு அக்கணத்தில் ஏற்பட்டது.

உண்மையில் இவையெல்லாம் வெறும் சம்பவங்களல்ல. இந்திய வம்சாவழியினர் தொடர்பாக வடக்கு- கிழக்கில் நிலவும் யதார்த்த நிலைமைகளே இவைகள். இவைகளின் ஊற்று வடக்கு- கிழக்கு மக்கள் மத்தியில் வலுவாக படிந்து போயிருக்கும் கருத்து நிலைகளில் உள்ளது.



இக் கருத்து நிலைகளின் வழி ஏற்பட்ட யதார்த்தங்களினால் மிகவும் ஓரம் கட்டப் பட்ட சமூகத் தொகுதியாக வாழும் நிலை இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இவர்களில் மிகவும் ஓர நிலையில் இருப்பவர்கள். நகரசுத்தித் தொழிலாளர்களும், இன அழிப்பினால் பிற்காலங்களில் குடியேறியவர்களுமே! மறுபக்கத்தில் அடர்த்தியான சமூகத்தொகுதியாக வாழ்வதால் இந்திய வம்சாவழியினரின் பலமான சக்திகளாகவும் இவ் இரு பிரிவினருமே உள்ளனர்.

வடக்கு- கிழக்கில் இந்திய வம்சாவழியினரின் குடிப்பெயர்வு என்பது வெவ்வேறு காலகட்டங்களில் நடைபெற்றது. குடியேறியவர்களும் கூட ஒரு பிரிவினர் அல்ல வெவ்வேறு பிரிவினர் குடியேறினர். சிலர் தாமாக குடியேறினர், சிலர் குடியேற்றப்பட்டனர். தாமாக குடியேறியவர்கள் உதிரியாக குடியேறியதால் ஒரே தொகுதியாக அடர்த்தியாக வாழும் நிலை இருக்கவில்லை. குடியேற்றப்பட்டவர் களுக்கே ஒரே தொகுதியாக அடர்த்தியாக வாழும் நிலை இருந்தது. நகரசுத்தித் தொழி லாளர்களும், இன அழிப்பினால் குடியேறியவர்களும் குடியேற்றப் பட்டவர்களாக இருப்பதனால் ஒரே தொகுதியாகவும், அடர்த்தியாகவும் வாழும் நிலை ஏற்பட்டது. இந்நிலையே ஒருபலமான சமூக சக்தியாக வாழும் நிலையையும் அவர்களுக்கு கொடுத்தது. இவர்களில் நகரசுத்தித் தொழி லாளர்கள் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் வடக்கு- கிழக்கின் நகரங்களில் குடியேற்றப்பட்டனர். அங்குள்ள சேரிகள் இவர்களின் குடியிருப்புக்களாக மாறின. மற்றைய தொகுதியினர் சுதந்திரத்தின் பின்னர் குடியேறினர்.

**ஒரு சமூக சக்தி என்ற வகையில் பங்கு பற்றல் ஜனநாயகம் மலையக மக்களுக்கு போதியளவு வழங்கப்பட்வில்லை. அவர்களின் விடுதலையும் தமிழ்த் தேசிய அரசியலின் ஓர் அங்கமாக இணைக்கப்படவில்லை.**

தாமாக குடியேறியவர்களில் வர்த்தகர்களும் உதிரித் தொழி லாளர்களும் அடங்குவர். பிரித் தானியர் ஆட்சிக் காலத்திலேயே இது ஆரம்பமாகி விட்டது. காரைக்குடி, புதுக்கோட்டை போன்ற தமிழக மாவட்டங்களில் இருந்து செட்டிமார்கள் வர்த்தகத்திற்காக குடியேறினர். வடக்கு- கிழக்கின் நகரப் பகுதிகளில் நகை வியாபாரம், அடகு வியாபாரம் என்பவற்றில் இவர்கள் ஈடுபட்டனர். கேரளத்தில் இருந்து வந்தவர்கள் தேனீர் கடைவியாபாரத்தில் ஈடுபட்டனர். நாகர் கோவில், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்து வந்தவர்கள் ஏற்றி இறக்கும் தொழிலிலும் ஈடுபட்டனர். இவர்களுக்கு புறம்பாக அரசாங்க உத்தியோகம், ஆசிரியர் தொழில் என்பவற்றுக்காக கேரளத்தில் இருந்து மலையாள சமூகத்தினர் பலரும் குடியேறி இருந்தனர். ஆனால் சுதந்திரத் தினைத் தொடர்ந்து அவர்களின் தொழில்கள் பறிக்கப்பட்டதால் தமது நாட்டிற்கு திரும்பினர்.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இரு நாடுகளிலும் பிரித்தானியர்களே ஆட்சியில் இருந்ததால் இரு நாடுகளுக்கும் சென்று வருவது மிக இலகுவாக இருந்தது. விசா கெடுபிடிகள் எதுவும் இல்லை. அதுவும் வடக்கில் இருப்பவர்கள் கப்பலிலோ, தோணிகளிலோ மிக இலகுவாக பயணம் செய்யும் நிலை இருந்ததால் அடிக்கடி போவதும், வருவதுமாக இருந்தனர். வடக்கு நகரங்களில் மன்னார், வல் வெட்டித்துறை போன்ற நகரங் களுக்கு தமிழகத்துடன் தொழில் ரீதியான தொடர்புகளும் இருந்தன.

மலையகத்திலிருந்து வடக்கு- கிழக்கிற்கு குடிபெயருதல் என்பது சுதந்திரத்தின் பின்னரே ஏற்பட்டது. கிளிநொச்சிக்கும், வன்னிக்கும் அறுடைக்காலங்களில் கூலித் தொழிலாளர்களாக மலையகத்தில் இருந்து பலர் வந்தனர். அவர்களில் சிலர் நிரந்தரமாகவும், தங்கினர்.

அறுவடைக்காக வந்தவர்கள், அகதிகளாக குடியேற்றப்பட்டவர்கள், என்போரின் பெருக்கத்தினால் வன்னியில் குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் இவர்கள் ஒரு சக்தியாக எழுச்சி பெற்றனர். வவுனியாவில் ஏற்கனவே பாரம்பரியமாக இருந்தவர்களின் தொகை குறைவாக இருந்த மையினால் அந்நிலையும் இவர்கள் சக்தியாக வளர்வதற்கு வாய்ப்பினைக் கொடுத்தது. இதன் வளர்ச்சிகளில் 1994 தேர்தலின் மூலம் தங்களின் பிரதிநிதியாக ஒரு பாராளுமன்ற உறுப்பினரையும் அவர்கள் பெற்றுக் கொண்டனர். இந்திய வம்சாவழி சமூகத்தைச் சேர்ந்த பாலச்சந்திரன் வன்னி மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பிரனராக தெரிவு செய்யப் பட்டார்.

உண்மையில் வடக்கு- கிழக்கில் குடியேறிய இந்திய வம்சா வழியினரின் உயர் பிரிவினருக்கு வடக்கு- கிழக்கு சமூகத்துடன் கலப்பதற்கு பெரிய தடைகள் இருக்கவில்லை. பலர் அவ்வாறு கலந்தும் விட்டனர். உதிரியாக சுதந்திரத்திற்கு முன்னர் குடியேறிய அடிமட்ட அணியினர் வடக்கு- கிழக்கிலுள்ள அடிமட்ட அணியினருடன் ஓரளவுக்கு கலந்து விட்டனர். இன்னமும் கலக்காமல் இருக்கின்ற பிரிவினர் என்றால் அது நகர சுத்தித் தொழிலாளர்களும், அகதிகளாக குடியேற்றப்பட்டவர்களுமே. வடக்கு- கிழக்கில் உள்ள இந்திய வம்சாவழியினர் எனச் சரியாக அடையாளம் காணக் கூடியவர் களாகவும் இவர்களே யுள்ளனர்.

தெளிவாக அடையாளம் காணக் கூடியவர்களாக இருப்பதனால் ஓரம் கட்டக் கூடிய நிலையும் இலகுவாகி விடுகின்றது. இவர்களை ஒரு சமூகசக்தியாக அங்கீகரித்து ஓரங் கட்டலிலிருந்து இவர்களைத் தடுத்து வடக்கு- கிழக்கின் மைய நீரோட்டத்துடன் இவர்களை இணைத்தல் என்பதுதான் நடந்திருக்க வேண்டிய மிகப் பெரியபணி.

இதன் ஆரம்பங்கள் அரசியல் அரங்குகளில் இருந்துதான் தொடங்கி இருக்க வேண்டும். ஆனால் தமிழ்த்தேச வரலாற்றில் இந்த ஆரம்பவேலைகள் முறையாக நடைபெறவில்லை என்பது தான் கவலைக்குரிய விடயம்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைத் தவிர்த்து விடுவோம். இந்திய வம்சர்வழியினரின் பிரஜாவுரிமைக்கு எதிராக வாக்களித்த கட்சியிடம் அந்த மக்களின் நலன்பேணும் நடவடிக்கைகளை எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்.

ஆனால், தமிழரசுக்கட்சியின் தோற்றமே இந்திய வம்சாவழி களுக்கான குரலிருந்து தான் தொடங்கியது. பிரஜாவுரிமைச் சட்டத்திற்கு காங்கிரஸ் கட்சி வாக்களித்தமையை எதிர்த்தே தந்தை செல்வா தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார். தொடக்கம் மெச்சத் தக்கதாக இருந்தாலும் இந்திய வம்சாவழியினர் தொடர்பாக அவர்களது பணி போற்றத் தக்கதாக இல்லை என்பதே வரலாறு.

விடுதலை இயக்கங்களில் புளொட் இயக்கம் இவர்களது விடயத்தில் அதிகளவு கரிசனை காட்டியது. அது தனது தளப்பிரதேசமாக வன்னியைத் தேர்ந் தெடுத்தமையினால் அக்கறை காட்ட வேண்டிய கட்டாயமும் அதற்கு இருந்தது. வன்னியில் அவர்களை குடியேற்றுவதில் அதிக கரிசனையுடன் செயல்பட்ட இயக்கம் புளொட் இயக்கம் என்பது யாவரும் அறிந்ததே. சந்ததியார், டாக்டர் ராஜசுந்தரம் என்பவர்களின் பங்கு இதில் மிகவும் பாராட்டக் கூடியது. இறுதியில் தமது அமைப்பினூடாக ஒருவரை பாராளுமன்ற உறுப்பினராக்கியதன் மூலம் அவர்களுக்கு ஒரு அரசியல் அந்தஸ்தினையும் உருவாக்கிக் கொடுத்தது.

ஈ.பி.ஆர்.எல்.எப் நகரசுத்தி தொழிலாளர்கள் விடயத்தில் அதிக அக்கறை காட்டியது. சாதியால் ஒடுக்கப்பட்டவர்களே இயக்கத்தின் தளமாகவும் இருந்தபடியால் அவர்களுக்கு அது கட்டாய மானதாகவும் இருந்தது. குடா நாட்டின் நகரங்களிலுள்ள பலநகர சுத்தித் தொழிலாளர்கள் ஈ.பி.ஆர்.எல்.எப் உடன் உணர்வு பூர்வமாக இணைந்தனர். ஈ.பி.ஆர்.எல்.எப். இன் கலாச்சாரக் குழுவினரால் மேடையேற்றப்பட்ட "மலரும் புதுயுகம்" நாடகத்தில் எழுத வாசிக்கத் தெரியாத சாவகச்சேரி நகரசுத்தித் தொழிலாளர்களே பிரதான பாத்திரத்தை ஏற்று நடித்திருந்தனர். குடா நாட்டுக்கு வெளியிலும் ஈ.பி.ஆர்.எல்.எப்.உடன் அதிக அளவில் நகரசுத்தித் தொழிலாளர்கள் அணிதிரண்டிருந்தனர். ஈ.பி.ஆர்.எல்.எப். இலிருந்து உருவான ஈ.பி.டி.பி. யின் சார்பில் நகரசுத்தித் தொழிலாளர் ஒருவர் திருகோணமலை நகர சபை உறுப்பினராகவும் கடைசியாக நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டார்.

இந்திய வம்சாவழியினரில் நூற்றுக் கணக்கானவர்கள் இயக்கங்களில் சேர்ந்து ஆயுதப் போராளிகளாகவும் மாறினர், பலர் இறந்தும் உள்ளனர். புலிகள் இயக்கத்திலும் பலர் போராளி களாக உள்ளனர்.

இவ்வாறு சில செயற்பாடுகளில் முன்னேற்றங்கள் இருந்தாலும், ஒரு சமூக சக்தி என்ற வகையில் பங்கு பற்றல் ஜனநாயகம் அவர்களுக்கு போதியளவு வழங்கப்படவில்லை. அவர்களின் விடுதலையும் தமிழ்த் தேசிய அரசியலின் ஓர் அங்கமாக இணைக்கப்படவில்லை. தமிழ்த்தேச வரலாற்றில் இவர்களின் வரலாறும் ஓர் பகுதியாக பார்க்கப்படும் தன்மை வளர்த்தெடுக்கப்படவில்லை.

தமிழ்த்தேசிய அரசியலில் ஏற்கனவே ஓரத்தில் வைக்கப் பட்டுள்ளவர்கள் வரிசையிலேயே இவர்களும் உள்ளனர்.




ஓர நிலையில் இருத்தலைக் களைதல் என்பது அரசியல் அரங் குகளில் முதலில் நிறைவு பெறவேண்டும். பின்னர் தான் ஏனைய பொருளாதாரம், கலாச்சாரம், கருத்து நிலைகள் நோக்கி அச் செயற்பாட்டை நகர்த்த முடியும்.

தமிழ்தேசம் இதில் கவனத்தைக் குவிக்குமா?

தொடரும்...

# சிறுகதை

ஒரு போராடும் தேசத்தில் சந்தர்ப்பவசத்தால் போராளிகளுக்கு உணவளித்து உதவியமைக்காக பொலிஸாரினால் கைதியாக்கப்பட்டு விசாரக்குட்படுத்தப்படும் அன்றாடம் காய்ச்சியான ஏழை வண்டிக் காரனின் நிலையை இச்சிறுகதை விவரிக்கின்றது. இன்று வடக்கு கிழக்கில் போர்ச் சூழலில் அப்பாவி மக்கள் படையினரிடம் எவ்வாறு தவிர்க்க முடியாது சிக்குண்டு அல்லற்பட வேண்டியிருக்கிறது என்பதை இலகுவில் புரிந்து கொள்வதற்கு இச்சிறுகதை மிகவும் உதவும் என்ற நோக்கில் சிங்கள சிறுகதைத் தொகுப்பிலிருந்து மீளவும் பிரசுரிக்கப்படுகின்றது.



*குளியாப்பிட்டியில் 13-01-1943ம் ஆண்டு பிறந்த சோமரத்ன பாலசூரிய தனது ஆரம்பக் கல்வியை குளியாப்பிட்டி மத்திய மகா வித்தியாலயத்தில் முடித்து விட்டு களனி பல்கலைக்கழகத்தில் சிங்களத்தில் சிறப்புப் பட்டதாரியாகி, அதே பல்கலைக்கழகத்தில் சிங்களத்தில் விரிவுரையாளராக கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டார்.*

*1968ம் ஆண்டு பிரான்ஸ் கான் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து, பிரான்ஸ் மொழி வாயிலாக பிரான்ஸிய பண்பாட்டியல் பற்றிய பாடத்திட்டமொன்றை மேற்கொண்டார். அதன் பின்னர் சோர்போன் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த சோமரத்ன பாலசூரிய கலாநிதி பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.*

*பொது நலவாய நாடுகள் புலமைப்பரிசில் பெற்ற இவர் லண்டன் பல்கலைக்கழகத்தில் பண்பாட்டியல் சம்பந்தமாக ஆய்வு நடத்தினார்.*

*சிறுகதை, நாவல், கவிதைத்துறையில் மட்டுமல்ல விமர்சனத்துறையிலும் மிகவும் காத்திரமான பங்களிப்புச் செய்து வருகிறார். இவரால் எழுதப்படும் கட்டுரைகள் சிங்கள இலக்கிய வளர்ச்சிக்கு உரமூட்டுகின்றன.*

*1986ம் ஆண்டு இவரால் எழுதப்பட்ட "வப்மகுள" (உழவர் விழா) என்ற நாவல் சிங்கள நாவல் இலக்கியத்துறையில் புதிய சகாப்தத்தை உருவாக்கியது. "கரத்தய" (வண்டில்) என்ற சிறுகதைத் தொகுதிக்கு 1991ம் ஆண்டுக்கான சாகித்திய பரிசு கிடைத்தது. இதே ஆண்டு, மக்கள் இலக்கிய விழாவிலும் பரிசு வழங்கப்பட்டது.*

*இப்பொழுது களனி பல்கலைக்கழகத்தில் சிங்களப்பிரிவில் இவர் பேராசிரியராக கடமையாற்றுகிறார்.*

# வண்டில்

## சோமரத்ன பாலசூரிய

சுற்றிவர முள்ளுக் கம்பிகளாலும், மணல் மூடைகளாலும் பாதுகாப்பு செய்யப்பட்ட பொலிஸ் நிலையத்திற்கு வண்டியை ஓட்டிக் கொண்டு வந்தவர் ஒரு பொலிஸ் சாரதியாகும். பொலிஸ் உடையை அணிந்து கொண்டு வண்டியை ஓட்டிக் கொண்டு வரும் அவரைக் கண்டவர்கள் எல்லோரும் சிரிப்பை அடக்கிக் கொண்டு பயத்தினால் வேறுபுறம் திரும்பிக் கொண்டனர். துப்பாக்கியைத் தாங்கிக் கொண்டு காவலுக்கு நின்ற பொலிஸ் உத்தியோகஸ்தருக்கு "குபீர்" என்று சிரிப்பு வந்து விட்டது. பொலிஸ் சீருடை அணிந்திருந்தபடியாலேயே அவர் மௌனமாக தலையைக் குனிந்த வண்ணம் வண்டியை ஓட்டிக் கொண்டு சென்றார். அவர் மாட்டை அவிழ்த்து வண்டிச் சில்லில் கட்டிவிட்டு பொலிஸ் நிலையத்தை நோக்கி வரும்பொழுது வண்டிக்காரனிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவன் வண்டிக்காரன் தானா என்று உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அந்த சாரதி சற்று நேரம் வண்டிக்காரனையும் இன்னும் சொற்பநேரம் வண்டியையும் மாட்டையும் ஏறெடுத்துப் பார்த்து "இவர் தானா" என்று நிச்சயப்படுத்திக் கொள்ள முடியாமலிருந்தார்.

"பெயர்"

"ரணசிங்க"

"வயது"

"நாற்பத்தினாலு"

"தொழில்"

"வண்டித் தொழில்"

"கல்யாணம் முடித்தவரா"

"இல்லை"

"வசிப்பிடம்"

"வண்டியில்"

"பிறந்தது எங்கே என்றுதான் நான் கேட்கிறேன்."

"பிறந்தது திவுல்லேவ. வசிப்பது வண்டியில்."

"நீர் படித்திருக்கிறீரா?"

"எத்தனையாம் வகுப்பு"

"சிரேஷ்ட தராதரம் பாஸ்."

பொலிஸ் உத்தியோகஸ்தன் சற்று ஓய்வெடுத்தான். சந்தேகப் பேர்வழிக்குத் தெரியாமலேயே உச்சிமுதல் உள்ளங்கால்வரை அடர்த்தியாகவும், கருப்பாகவும் வளர்ந்து சுருண்டிருந்த தலைமுடியையும், தாடியையும், இடைக்கிடை நரைத்திருந்த மயிரையும் வெற்றிலை சாப்பிட்டதனால் காவிபிடித்து தேய்ந்து போயிருந்த பற்களையும் பார்த்துக் கொண்டிருந்தான். உள்வாங்கியிருந்த கூர்மையான சிறிய கண்கள் தன்னுடைய பொலிஸ் உத்தியோக குறிப்பை நோக்கி படிந்திருந்ததை அவன் கண்டான்.

"நீர் அந்தக் காலத்தில் அவ்வளவுக்குப் படித்திருந்தும் ஏன் வேலைக்குப் போகவில்லை."

"ஏன் நான் தான் வேலை செய்கிறேனே?"

"படிப்புக்கு ஏற்ற உத்தியோகத்தைப் பற்றிதான் நான் கேட்கிறேன்?"

"அப்படியொன்று இருக்கிறதா?"

இப்படியான ஒரு பதிலை அவனிடமிருந்து எதிர்பார்த்த பொலிஸ் உத்தியோகஸ்தன் இரு விரல்களுக்டையே இருந்த பேனாகையோடேயே அவனுடைய கன்னத்தில் இரண்டு அறைகள் விட்டான். பொலிஸ் உத்தியோகஸ்தனின் அடிகளை பொறுமையுடன் வாங்கிக் கொண்ட வண்டிக்காரன் அதுபற்றி எதுவுமே அலட்டிக்கொள்ளவில்லை. எந்தவிதமான உணர்ச்சிகளும் அவனிடமிருந்து வெளிப்படவில்லை. அவனின் உள்வாங்கிய விழிக்கோலங்கள் உணர்ச்சியில்லாமல் பொலிஸ் உத்தியோகஸ்தனுடைய குறிப்பை நோக்கியே நிலைத்திருந்தது. தன்னுடைய கையிலிருந்து தவறிவிழுந்த போல்பொயின்ட் பேனாவை அவன் பொறுக்கித்தருவான் என்று பொலிஸ் உத்தியோகஸ்தன் நினைத்தான். கொஞ்ச நேரம் பார்த்துவிட்டு ஆவேசம் வந்தவனைப்போல் எழுந்து நின்ற பொலிஸ் உத்தியோகஸ்தன் இரண்டு கைகளாலும் வண்டிக்காரன் தலை மயிரைப் பிடித்து பல தடவை ஆட்டி நிறுத்தி வைத்தான்.

"நல்லா புரிந்துக் கொள். கேட்பதற்கு மட்டும் பதில் சொல். சும்மா பண்டிதனாகக் கதைத்துவிட்டு படிப்பைக் காட்டி சாகாதே. நீ எங்கே இருக்கிறாய் என்று நல்லா நினைத்துக் கொள்".

வண்டிக்காரன் அதொன்றும் கேளாதவன் போல் இருந்தான். அதேவேளை பொலிஸ் உத்தியோகஸ்தன் ஏதோ ஒரு காரணத்திற்காகப் போவது போல் நடந்து வீசப்பட்டிருந்த பேனாவை பொறுக்கிக் கொண்டு திரும்பவும் தன்னுடைய ஆசனத்தில் வந்து சரியாக அமர்ந்து கொண்டான்.

அடுத்த கேள்வி என்னவென்று அவன் சொற்ப நேரம் யோசித்தான். இத்தகைய கேள்விகள் கேட்டு பழக்கமில்லாதபடியாலும் பல்வேறு சந்தேகப் பேர்வழிகளிடம் அடுக்கடுக்காக கேட்கும் கேள்விகளுக்கும், அவர்கள் கொடுக்கும் மறுமொழிக்கும் எதிர்மாறாக இந்த வண்டிக்காரனிடம் தான் கேட்கும் கேள்விக்கும் அதற்கு அவன் கூறும் பதில்களும் வித்தியாசமாக இருப்பது அவனுக்கு சிறிது அதிர்ச்சியையும், அதே சமயம், கோப உணர்ச்சிவையும் ஏற்படுத்தியிருந்தது. அவன் அடுத்த கேள்வியைக் கேட்பதற்கு வண்டிக்காரன் முகத்தைப் பார்த்தான். தலைமயிரை பிடித்திழுத்ததால் கலைந்துபோன கருண்ட நீண்ட மயிர் பொம்மிப்போய் ஆறடி உயரமான அவனை இன்னும் உயரமானவனாக எடுத்துக் காட்டி நின்றது. அவனுடைய பரந்ததோள்களும், அங்கொன்றும், இங்கொன்றுமாக நரைத்து வளர்ந்திருந்த தாடியும் தன்னையே பார்த்திருந்த கூர்மையான கண்ணும் முழங்கால்வரை நீண்டிருந்த மெலிந்த நீண்ட கரங்களும் பொலிஸ் உத்தியோகஸ்தனீன் மனிதில் பீதியை உருவாக்கியது.

தன்னிடமிருந்த "போல்பொயிண்ட்" பேனாவை புத்தகத்தின் நடுவில் வைத்து புத்தகத்தைமூடிய பொலிஸ் உத்தியோகஸ்தன் அவனைப் பார்க்காமலே அப்பால் போனான். வண்டிக்காரன் அப்படியே நின்று கொண்டிருந்தான். பொலிஸ் கட்டிடத்தின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்ட ஒரு ஜீப் வண்டியும், அதற்கும் கொஞ்சம் தள்ளியிருந்தவண்டியும் சில்லில் கட்டப்பட்டிருந்த மாடும் அந்தமாட்டின் வாயிலிருந்து தள்ளிக் கொண்டிருந்த நுரையும் அவன் கண்களுக்குப்பட்டன. கண நேரத்தில் அந்த உருவங்கள் கரைந்து போவதைபோல் அவனுக்குத் தெரிந்தது. முண்டாசு கட்டிக் கொண்ட மனிதர்கள் வெகு வேகமாக நடையில் பொலிஸ் நிலையத்தைப் பார்த்தும் பாராமலும் குனிந்தபடி முன்நோக்கி நடந்து கொண்டிருந்தனர்.

என்னுடைய உத்தியோகம் எனக்குப் பொருத்தமானது. மற்றவர்களுக்கு பொருத்தமில்லாதது போல் படுகிறது. படிப்புக்கு ஏற்ற உத்தியோகம் யாராவது செய்கிறார்களா? ஆங்கில மொழியும் இலக்கியமும் உட்பட, நான் சிரேஷ்ட தராதரப் பத்திரத்தில் நன்றாக சித்தியடைந்துள்ளேன். தமிழ் முதலாளிகளிடம் நான் தமிழில்தான் பேசுவேன். என்னுடன் படித்த குணரத்ன அன்று பிலிம் பெயர் சஞ்சிகையில் வெளிவந்த நர்கிஸ் போன்ற அழகான நடிகைகளின் படங்களை வெட்டி ஒட்டிக் கொண்டிருந்தவன், இன்று அமெரிக்க பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறான். டிமை பேப்பரில் நாள் முழுதும் தூய கணிதம் பயிற்சி செய்த நான் இன்று வண்டி ஓட்டுகிறேன். அவர்கள் அந்தந்த இடத்திற்கு எப்படி போனார்கள் என்று தான் கேள்வி கேட்க வேண்டுமே தவிர என்னுடைய தொழில் பொருத்தமானதல்ல என்பதல்ல.

"ஆ... இப்போது இரும். இருந்து நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லும்."

பொலிஸ் உத்தியோகஸ்தனின் முரட்டுக் குரலும் அவனுடைய தோற்றமும் இப்போது தளர்ந்து விட்டது போல் அவனுக்குத் தெரிந்தது. மேசை மீதிருந்த தொப்பியை அவன் அணிந்தது ஏனென்று வண்டிக்காரனுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. அது அவனுடைய கடமை என்று அவன் நினைத்தான். வண்டிக்காரன் ஆசுவாசமாக மனசில் எந்தவித பயமுமில்லாமல் தன்னுடைய இடம் போல் கருதி வாங்கின்மேல் இருந்ததையும் தன்னுடைய இரு கைகளையும் அவன் மேசை மீது வைத்துக் கொண்டு முன்னால் தலை சாய்ந்த வண்ணம் இருந்ததையும் கண்ட பொலிஸ் உத்தியோகஸ்தனுக்கு அந்த வண்டிக்காரன் தன்னையே கேள்வி கேட்கப் போகிறானோ என்று மனதுக்குப் பட்டது. கைகளை மேசை மீதிருந்து எடுக்கும்படி கட்டளையிடும் மனோபாவம் அவனுக்கு ஏற்பட்டது. ஆனால் அவன் அப்படி செய்யவில்லை. கடைசியாகக் கேட்ட கேள்வி என்னவென்று அறிந்து கொள்வதற்கு மீண்டும் அவன் புத்தகத்தைப் புரட்டினான்.

"உன்னுடைய நெருங்கிய நண்பர்கள் யார்?"

"மாடும், நாயும்"

"அடப் போயா நீ என்ன சொல்கிறாய்?"

"வண்டி இழுக்கும் மாடும், படங்கில் இருக்கும் நாயும்."

பொலிஸ் உத்தியோகஸ்தன் எழுந்து நின்றான். ஆறு, ஏழு அடி நீளமான மேசையை வளைய எட்டி நடந்து பாதி சுவருக்குப் பின்னால் சுற்றிவரும் பொழுது வண்டிக்காரன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். வண்டிக்காரனின் புறங்கை இரண்டும் பெரிய குறடு இடுக்கில் அகப்பட்டதுபோல் அவனுக்குப் பட்டது. அத்துடன் அவன் பாதி சுவருக்கு மேல் இழுபட்டு மண்டபத்துக்குள் போனான். அவன் எவ்வளவு தூரம் இழுபட்டுப் போனான் என்றால் சுவர் காறை பெயர்ந்து சிதறிக் கிடந்தது. அத்தோடு வட்டத்தின் நாலில் மூன்று ஒரு சுழற்சி சுழன்று அவனது வலது கையால் ஒரு மனிதனால் தாங்கவே முடியாத பலத்த அறையொன்றை வண்டிக்காரன் கன்னத்தில் ஓங்கி விட்டான். வண்டிக்காரன் அதை எதிர்பார்த்தே இருந்தான். இடுப்பின் வலியைப் பொறுத்துக் கொண்ட அவன் பின்பக்கம் ஒருபாகை குனிந்தபடி அவன் அறைந்த அறையை தவிர்த்துக் கொண்டான். பொலிஸ் உத்தியோகஸ்தனுக்கு அவன் வேகத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் இரு கால்களும் பின்னிக் கொண்டு முழங்கால் குத்திட்டபடி கையை ஊன்றிக் கொண்ட அவன், கைகள் இடுக்கின் வழியாக வண்டிக்காரனைப் பார்த்தான். வண்டிக்காரன் தலையைத் திரும்பியபடி பின்னால் பார்த்த வண்ணமே தனது வலது கையால் இடுப்பைத் தடவிக் கொண்டிருந்தான்.

அத்துடன் வாயால் விசிலடித்துக் கொண்டு கைகளிரண்டையும் தடவியபடி, ஏதோ காரணத்தையொட்டி மண்டபத்தைப் பார்த்துவிட்டுப் போக வந்த இன்னொரு பொலிஸ்காரன் நடந்ததை மோப்பம் பிடித்தவனைப்போல் "வேலையைக் கொடுக்கவா" என்று சொல்லிக் கொண்டு அவன் வண்டிக்காரனுடைய கையை முறுக்கிச் சுழற்றி வெகுதூரத்திற்குத் தள்ளி விட்டான். அத்தோடு பழையநிலையில் மீண்டும் எழுந்து ஆயத்தமாக இருந்த பொலிஸ் உத்தியோகஸ்தன் அவனுடைய விலாப்புறத்தை நோக்கி காலால் எட்டி உதைத்தான். வண்டிக்காரன் பின்னால் உந்தப்பட்டுப் போக அடுத்த பொலிஸ் உத்தியோகஸ்தன் முன்குனிந்து கையைத் தட்டி குதித்து எழுந்து முகத்தில் அறை விட்டான். வெயிலில் காய்ந்தும் மழையில் நனைந்தும் கறுத்துப் போய், பதமான ஓரளவு வற்றிப்போன அவனது கன்னங்கள் வெடிக்குமளவுக்கு வீங்கின. வண்டிக்காரன் தனது வலது கை நடுவிரலால் கன்னத்தை மட்டும் பட்டும் படாமலும் தடவிப் பார்க்கும் பொழுதே அவன் அடிவயிற்றில் விழுந்த கால் உதையினால் ஒரு மரம் அடியற்று விழுவதுபோல் விழுந்தான்.

அவனுக்கு உணர்வு வந்து விழித்த போது அவன் சிறைக் கூண்டுக்குள் இருந்தான். பொறுக்க முடியாத அளவு சிறுநீர் கழிக்க வேண்டியும், விலா எலும்புகள் நொறுங்கிய போது ஏற்படும் வேதனையும் தண்ணீர் தாகமும் அவனுக்கு உண்டானது. ஏதோ ஒருகாரணத்தினால் கண்ணில் நீர் திரைகட்டிக் கொண்டது. அவன் மிக சிரமத்தோடு குனிந்து தன் இரு கண்களையும், நெற றியையும் துடைத்துக் கொண்டான். இடைக்கிடையே புறப்படும், வரும் ஜீப் இரைச்சல்களும் சப்பாத்து ஓசைகளும் பின்னர் யாரோ ஒருவர் விசில் ஊதும் சத்தமும், அதன் பின்னர் அமைதியான நிலையும் ஏற்பட்டது.

மாடும், நாயும், வண்டியும் அவன் நினைவுக்கு வந்தது. அவன் மெதுவாக காலை ஊன்றி, கூண்டிலிருக்கும் கம்பிகளைப் பிடித்தபடி அண்ணாந்து அரைச் சுவருக்கு மேலாக பொலிஸ் மேசைக்கு அப்பால் வீதியைப் பார்த்தான். மாடு காலை தூக்கிய வண்ணம், முன்னர் இருந்தபடியே எங்கோ பார்த்துக் கொண்டிருந்தது. வண்டியின் நுகத்தடி கீழே வைக்கப்பட்டிருந்ததனால் வண்டி மிகவும் ஏற்றத்தோடு இருந்தது என்பதை உணர்ந்து [illegible] என்று அவனுக்கு ஒரு யோசனை உண்டானது. போட்டிகோவிலிருந்த தூண் வண்டியை மறைத்தபடியால் வண்டி இரண்டாகி விட்டதுபோன் தோற்றம் தருவதை கடைசியாக தீர்மானித்தான். இப்படி தொடர்ந்து சில தினங்கள் கடந்து போனால் நுகத்தடியை கறையான் அரித்துவிடும். அந்த நேரத்திலாவது கேள்வி கேட்க கூப்பிட்டால் தன் மாட்டுக்கும், நாய்க்கும் சாப்பாடும், தண்ணீரும் கொடுக்கும்படி கூறவேண்டும். நாய் படங்கில் படுத்துக்கிடக்கும் என்று இறுதியாக யோசித்தான்.

பல்வேறு சந்தேகப் பேர்வழிகளிடம் அடுக்கடுக்காக கேட்கும் கேள்விகளுக்கும், அவர்கள் கொடுக்கும் மறுமொழிக்கும் எதிர்மாறாக, இந்த வண்டிக்காரனிடம் தான் கேட்கும் கேள்விக்கும் அதற்கு அவன் கூறும் பதில்களும் வித்தியாசமாக இருப்பது அவனுக்கு சிறிது அதிர்ச்சியையும், அதே சமயம், கோப உணர்ச்சிவையும் ஏற்படுத்தியிருந்தது. அவன் அடுத்த கேள்வியைக் கேட்பதற்கு முன் வண்டிக்காரன் முகத்தைப் பார்த்தான்.

14ம் பக்கம் பார்க்க___

# தமிழ் தீவிரவாதிகளின் பின்னணியில் வீரப்பன்

ஞானரதன்.

கடந்த இருபது ஆண்டுகளாக தமிழ்நாடு, கர்நாடக மாநில அரசுகளுக்குப் பெரும்சவாலாக இருந்து வந்துள்ள சந்தனக் கடத்தல் வீரப்பன் தற்போது முன்வைத்துள்ள அரசியல் கோரிக்கைகளின் மூலம் இந்திய அரசியல்வாதிகளுக்குப் பெரும் அதிர்ச்சி வைத்தியம் ஒன்றைக் கொடுத்துள்ளான். தமிழக அரசுக்குப் பெரும் நெருக்கடி ஒன்றும் இதன் மூலம் ஏற்பட்டுள்ளது. இவ்வளவு காலமும் வெறும் கடத்தல்காரனாக இருந்த வீரப்பன் தற்போது ஒரு தமிழ்த் தீவிரவாதியாக மாறி கோரிக்கைகளை முன்வைத்திருப்பதுதான் தமிழக- இந்திய அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியலையை ஏற்படுத்தியிருக்கின்றது. நிலைமைகளை எப்படிச் சமாளிப்பது எனத் தெரியாமல் தமிழக முதல்வர் கருணாநிதி திண்டாட, சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ள இந்த நிலையில் மாநில அரசைக் கலைக்க வேண்டும் என ஜெயலலிதா சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

இரண்டு வருடங்களாக அமைதியாக இருந்த வீரப்பன், தற்போது "புதிய பலத்துடன்" பிரபல கன்னட நடிகர் ராஜ்குமாரைக் கடத்திச் சென்று தனது இருப்பிடத்தையும் அறிவித்திருப்பது மத்திய, மாநில அரசுகளுக்கு பெருஞ்சவாலாக உள்ளது. "வீரப்பன் தனிமரமாக்கப்பட்டுவிட்டான் இனி அவனை வேட்டையாடுவது இலகுவானது" எனக் காத்திருந்த தமிழக, கர்நாடக அரசுகளும், அதிரடிப்படையினரும் பெரும் கும்பலுடன் வீரப்பன் மேற்கொண்டுள்ள இந்தக் கடத்தலால் திகைத்துப்போயுள்ளன. வழமையாக பணயமாகப் பணத்தைக் கேட்கும் வீரப்பன் இப்போது, அரசியல் ரீதியான கோரிக்கைகளை முன்வைத்திருப்பதும், தன்னை ஒரு தமிழ்த் தீவிரவாதி என அறிவித்திருப்பதும் தமிழக ஆட்சியாளர்களுக்குப் பெரும்சங்கடத்தைக் கொடுத்திருக்கின்றது. வீரப்பனின் பின்னணியில் தமிழ்த் தீவிரவாதக் குழு ஒன்று சம்பந்தப்பட்டுள்ளது என்ற சந்தேகம் இதன் மூலம் நிரூபணமாகியுள்ளதாக தமிழக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



நடிகர் ராஜ்குமார்

> வீரப்பனின் கோரிக்கைகள் தமிழ்த் தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்டவையாகவே உள்ளன. திராவிடக் கட்சிகளால் ஜனநாயக வழியில் செய்ய முடியாததை ஆயுத முனையில் செய்து காட்டுவதற்கு வீரப்பன் முற்பட்டுள்ளமை தெளிவாகத் தெரிகின்றது.

வீரப்பன் முன்வைத்துள்ள பத்துக் கோரிக்கைகளும் அரசியல் நோக்கத்தை உடையவை. அத்துடன் எந்த ஒரு மாநில அரசாலும் நிறைவேற்றக் கூடியவையும் அல்ல. இவை தமிழ்நாடு, கர்நாடக அரசுகளின் கைகளை மட்டுமன்றி, இந்திய மத்திய அரசின் கைகளையும் விட்டு சர்வதேச அரங்குக்குப் பிரச்சினைகளைக் கொண்டு செல்வதாகவே இருக்கின்றது. "அவன் முன்வைத்துள்ள கோரிக்கைகள் பார்ப்பதற்கு எளிமையானதாக இருந்தாலும், அவை குழப்பம் மற்றும் சிக்கல் நிறைந்தவை" எனக் கூறுகின்றார் தகவலறிந்த தமிழக அதிகாரி ஒருவர். வீரப்பன் புதிதாக முன்வைத்துள்ள கோரிக்கைகளில் காவிரி நீர்ப் பிரச்சினையும் ஒன்றாகும். இந்தக் கோரிக்கையால், இப்பிரச் சினை இப்போது இரண்டு மாநில அரசுகளின் கரங்களை மட்டுமன்றி மத்திய அரசின் கரங்களைவிட்டும் பிரச்சினை நழுவிச் சென்றுள்ளது. அதாவது காவிரி நீர்ப் பங்கீடு தொடர்பான பிரச்சினையை சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லவேண்டும் என்ற அவனது பிரதான கோரிக்கையை மாநில அரசுகளோ மத்திய அரசோ ஒரு போதுமே ஏற்கப் போவதில்லை.

அதாவது ஹேய்க்கில் உள்ள சர்வதேச நீதிமன்றம் இறைமையுடைய இரு நாடுகள் தொடர்பான வழக்குகளைத்தான் விசாரணைக்கு எடுத்துக் கொள்கின்றது. இது கோரிக்கைவிடுத்த வீரப்பனுக்குத் தெரியாமலிருந்திருக்காது என்றே கருதும் தமிழக அரசியல் ஆய்வாளர்கள், இதன் பின்னணியில் பாரிய திட்டம் ஒன்று இருக்க வேண்டும் எனவும் சந்தேகிக்கின்றார்கள். "அதாவது, வீரப்பனோ அல்லது அவனது கூட்டாளிகளான தமிழ்த் தீவிரவாதிகளோ இரு மாநிலங்களையும் அல்லது ஒரு மாநிலத்தையேனும், சர்வதேச நீதிமன்றத்துக்குச் செல்வதற்கு நிர்ப்பந்திப்பதன் மூலம், சுதந்திரத் தமிழ் நாடு ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகின்றது" என இந்திய மத்திய அரசுக்கு ஆதரவான பிரசித்தி பெற்ற இணையத் தளமான "ரெடீஃப்" தனது விமர்சனம் ஒன்றில் - குறிப்பிட்டிருக்கின்றது. எனவே, ராஜ்குமார் கடத்தல் பாரிய சதித் திட்டத்தின் ஒரு அம்சமாக இருக்கலாம் என்ற கருத்தையும் அத் தளம் முன்வைத்திருக்கின்றது.

இந்தப் பின்னணியில் இவ்விவகாரத்தில் மத்திய அரசு உடனடியாகத் தலையிட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. அதாவது, ராஜ்குமாரின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆர்வத்திலும், கர்நாடகாவிலுள்ள தமிழர்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்காகவும் இரு மாநில அரசுகளுமே அளவுக்கு அதிகமாக இறங்கிவந்து வளைந்து கொடுத்துள்ளன என்ற குற்றச்சாட்டும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்விதம் இரு மாநில அரசுகளும் வீரப்பனின் கோரிக்கைகளுக்குப் பணிந்து போவதென்பது சரணாகதியாக மட்டுமன்றி, இவ்வாறான நடவடிக்கைகளில் அவன் மேலும் ஈடுபடுவதற்கு உற்சாகமளிப்பதாகவும் இருக்கும் என பல முன்னணிப் பத்திரிகைகள் எச்சரித்துள்ளன.

வீரப்பன் விடுத்துள்ள மற்றுமொரு கோரிக்கை தமிழகத்தில் பத்தாம் வகுப்பு வரையில் தமிழைக் கட்டாயப் பயிற்று மொழியாக்க வேண்டும் என்பது தொடர்பானதாகும். உண்மையில் தமிழக அரசியலில் ஒரு சர்ச்சையைக் கிளப்பியிருந்த இப் பிரச்சினை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் பின்னரே முடிவுக்கு வந்தது. தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் ஐந்தாம் வகுப்பு வரை தமிழைக் கட்டாய பயிற்று மொழியாக்க வேண்டும் என முதலமைச்சர் கருணாநிதி பிறப்பித்த உத்தரவை உயர் நீதி மன்றம் ஏற்கனவே ரத்துச் செய்துவிட்டது. பயிற்று மொழியைத் தெரிவு செய்யும் உரிமை உண்மையில் ஒரு அடிப்படை உரிமை எனவும் இதில் நிர்வாக ஆணை தலையிட முடியாது என்பதும் தான் நீதி மன்றத்தின் ஆணை! இதற்கு எதிராக தமிழக அரசு மேன்முறையீடு செய்துள்ளது என்பது உண்மைதான். ஆனால் அதன் மீதான தீர்ப்பு வரும் வரையில் இது தொடர்பாக ஏதாவது செய்ய முயன்றால் அது நீதி மன்றத்தை அவமதித்ததாகிவிடும். இந்த நிலையில் இவ்விடயத்தில் தமிழக அரசால் இனி என்ன செய்ய முடியும் எனக் கேள்வி எழுப்புகின்றார் கருணாநிதி.

வீரப்பனின் கோரிக்கைகளில் மற்றொன்று, தமிழகத்திலும் கர்னாடகத்திலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள "தடா" கைதிகளை விடுவிக்க வேண்டும் என்பதாகும். தமிழகத்திலுள்ள ஐந்து தடா கைதிகளை விடுவிக்க தமிழக அரச ஏற்கனவே உடன்பட்டுள்ளது. இதற்கான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் கர்நாடகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 51 தடா கைதிகளை விடுவிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இக்கைதிகளை விடுவிப்பதற்கு அரசு முன்வந்துள்ள போதிலும், இதற்கு எதிராக தற்போது தாக்கலாகியுள்ள மனு ஒன்று சிக்கலைத் தோற்றுவித்துள்ளது. இதனால் அவர்களின் விடுதலை மட்டுமன்றி ராஜ்குமாரின் விடுதலை கூட தாமதமாகலாம் எனத் தெரிகின்றது. இதனைவிட, கர்நாடகாவில் தமிழையும பயிற்று மொழியாக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் அம்மாநில அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது.



நக்கீரன் ஆசிரியர் கோபாலுடன் வீரப்பனும், அவரது சகபாடியும்

இவையனைத்தும் ராஜ்குமாரின் விடுதலையைப் பாதிக்கலாம் எனத் தெரிகின்றது.

இந்த நிலையில், தமிழக கர்நாடக அரசுகளின் விரிவான பதிலுடன் தூதுவராகச் சென்ற நக்கீரன் ஆசிரியர் கோபாலை, மீண்டும் வீரப்பனுடன் பேச்சுவார்த்தைகளுக்காக அனுப்பிவைப்பதுதான் மாநில அரசுகளின் திட்டமாக இருந்தது. இதற்கான பதில் என்னவாக இருக்கும். தனது கோரிக்கைகளுக்கு குறைந்த பட்சத்தையே மாநில அரசுகள் நிறைவேற்றும் நிலையில், வீரப்பனின் பிரதிபலிப்பு எப்படியிருக்கும் என்பது தெரியவில்லை. இதனையிட்டுத்தான் தமிழக, கர்நாடக அரசுகள் இப்போது கவலை கொண்டுள்ளன.

ராஜ்குமாரும், மற்றைய பணயக் கைதிகளும் வீரப்பனால் விடுவிக்கப்பட்டாலும் கூட, இந்திய தேசியத்துக்கு ஆபத்தான பல அம்சங்கள் தற்போது அம்பலமாகியுள்ளன என பிரபல அரசியல் ஆய்வாளர் ஒருவர் சுட்டிக்காட்டுகின்றார். அதாவது அடர்ந்த காடுகளில் வீரப்பன் ஊடுருவியுள்ளது இப்போது அம்பலமாகியுள்ளது. ஒருபுறம் கடந்த பத்து வருடங்களாக முன்னேற முயன்ற போதிலும், இரு மாநிலங்களின் காவல் துறையும் அதேபோன்று எல்லைப் பாதுகாப்புப் படையும் வீரப்பனை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடிக்க முடியாதது அவனுக்கு எந்தளவு பாதுகாப்பு இருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது. வெளியாட்கள் உள்ளே இலகுவாக ஊடுருவ முடியாத, வாழ முடியாத 6,000 சதுர கிலோ மீட்டர் பரப்பைக் கொண்ட இந்தக் காட்டுப் பகுதியை பாதுகாப்பான ஒரு பகுதியாக, அரசாங்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு பின்தளமாக தீவிரவாதிகள் கருதக் கூடிய நிலை இப்போது தோன்றியுள்ளது என்பது தான் பாதுகாப்புத் தரப்பினரைக் கலக்கும் விடயம்.



இது ஆபத்தான ஒரு நிலைமை என்றே இந்திய தேசியத்துக்கு ஆதரவான தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவர் கருதுகின்றார். தமிழகத்தைப் பொறுத்த வரையில் இதுவரையில் யாரும் கூறாத கருத்தை யார் சொல்கின்றார்களோ அவர்கள் பால் மக்களின் கவனம் ஈர்க்கப்படுவது வழமைதான். தமிழக மக்களுக்கு குறிப்பாக இளம் தலைமுறையினருக்கு தமிழகத்திலுள்ள திராவிடக் கட்சிகள் மீதோ ஏனைய கட்சிகள் மீதோ பற்றோ விசுவாசமோ இருப்பதாக குறிப்பிட்டு சொல்லக் கூடியளவுக்கு இல்லை. கடந்த தேர்தல்களில் பாரதிய ஜனதாவுக்கு கிடைத்த ஆதரவு இதனைக் காட்டுகின்றது. கடந்த பத்து வருடகால தேர்தல் முடிவுகளை ஆராய்ந்தர் தமிழக வாக்காளர்கள் கட்சிப் பிடிப்பு அற்றவர்களாவும், சூழ்நிலைக்கு ஏற்ப தமது ஆதரவை மாற்றிக் கொள்பவர்களாகவும் இருந்துள்ளார்கள் என்பதைக் கண்டு கொள்ளலாம். அதாவது கடைசி நேரச் சம்பவங்கள் வாக்களிக்கும் போது இவர்களின் தீர்மானத்தையே மாற்றிவிடலாம். ஆனால், இவை யாவும் இளைய தலைமுறையினர் தமக்கான ஒரு தலைமையைத் தேர்ந்தெடுக்கும் வரையில் தான் நீடிக்கும் எனக் குறிப்பிடுகின்றார் தமிழக ஆய்வாளர் ஒருவர்.

இதேவேளையில் இளந்தலைமுறையினரிடையே அமைதியின்மை நிலவுவதும் கவனிக்கத்தக்க ஒரு அம்சம். அவர்கள் பொது விடயங்கள் ஆர்ப்பாட்டங்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்குவது எல்லாம் இப்போது கிராமங்களில் கூட சகஜம். இந்த இளைஞர்களின் எழுச்சி உணர்வைப் பயன்படுத்திக் கொள்ள ஒரு தலைவர் இல்லாத குறை தமிழகத்தில் காணப்படுகின்றது. தற்போது வீரப்பனின் பின்னணியில் இயங்குவதாகக் கருதப்படும் தமிழ்த் தீவிரவாத அமைப்புக்களான "தமிழ்த் தேசிய மீட்புப் படை" மற்றும் தமிழர் விடுதலைப் படை என்பன இந்த அரசியல் தலைமையைப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கான சூழ்நிலைகள் உள்ளதாகக் கூறுகின்றார் ஒரு ஆய்வாளர். இரண்டு திராவிடக் கட்சிகளினதும் செல்வாக்கு மங்கிவரும் நிலையில் இது சாத்தியமாகலாம் என்பது தான் அவரது கருத்து.

ராஜீவ் காந்தி கொலை, கோவை குண்டு வெடிப்புச் சம்பவம் போன்றவற்றுடன் தமிழகத்தில் இந்தியத் தேசிய எழுச்சி மேலோங்கியது. திராவிடக் கட்சிகளும் தவிர்க்க முடியாத வகையில் இதற்கு உட்பட்டிருந்தன என்பது வெளிப்படையானதுதான். ஆனால், வீரப்பனின் கோரிக்கைகளும் தமிழ்த் தீவிரவாத அமைப்புகளுடன் அவன் ஏற்படுத்திக் கொண்டுள்ள உறவுகளும் இந்தத் தேசியத்துக்கு ஒரு "அடி" யாகத்தான் உள்ளது. "இந்த நோக்கத்துக்காக வட்டார அரசியலிலும் தமிழ்த் தீவிரவாதம் கலந்த ஒரு கலவை உருவாகி வருவதைப் போலத் தெரிகின்றது. இந்த நோக்கத்தை அடையும் வழியில் ராஜ்குமார் கடத்தல் ஒரு அதிர்ச்சித் தொடக்கமே தவிர அதுவே முடிவல்ல. தேசியவாத எழுச்சிக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், அதிரடித் தீவிரவாதத்துடன் இணைந்து அது உருவாகியுள்ளது" என மற்றொரு தமிழக ஆய்வாளர் சுட்டிக்காட்டுகின்றார்.

வீரப்பன் இம்முறை சந்தித்த, நக்கீரன் கோபால் தெரிவிக்கும் தகவல்கள் கூட இந்தச் சந்தேகத்தை வலுப்படுத்துவதாகவே இருக்கின்றது. "வீரப்பன் இப்போது தன்னை ஒரு தீவிரவாதி எனக் கூறுகிறான். ஆறு கோடித் தமிழர்களுக்காவே தான் போராடுவதாகவும் அவர் தெரிவிக்கின்றான்" என கோபால் கூறுவது வீரப்பனின் போக்கில் ஏற்பட்ட மாற்றத்தைத் தெளிவாகக் காட்டுகின்றது. அதேவேளையில் வீரப்பனின் கோரிக்கைகள் தமிழ்த் தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்டவையாகவே உள்ளன. திராவிடக் கட்சிகளால் ஜனநாயக வழியில் செய்ய முடியாததை ஆயுத முனையில் செய்து காட்டுவதற்கு வீரப்பன் முற்பட்டுள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. இதில் அவன் வெற்றி பெற்றால் அவனுக்குப் பின்னால் இளைய தலைமுறையினர் செல்வார்கள் என்பதே தமிழக அரசியல்வாதிகளை வாட்டும் விடயமாகியுள்ளது.

இந்த வகையில் நோக்கும் போது அடுத்த வருடம் தமிழகத்தில் நடைபெறவுள்ள தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையக் கூடும். இதில் குறிப்பிட்ட தமிழ்த் தீவிரவாத அமைப்புக்கள் மூலமாக வீரப்பன் செல்வாக்குச் செலுத்த முனைவான் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. அடுத்த ஒரு தசாப்த காலத்துக்கு தமிழகம் எப்படியிருக்கும் என்பதை இத்தேர்தல் தான் நிர்ணயிக்கப் போகின்றது. தமிழக அரசியல்வாதிகளின் நிம்மதியை வீரப்பன் குழப்பிவிட்டதும் இதனால் தான். கோபால் அடுத்ததாகக் கொண்டுவரப் போகும் வீரப்பனின் பதிலில் தான் பல வினாக்களுக்கான பதில்களும் அடங்கியிருக்கப் போகின்றன!

வண்டில் சிறுகதை 12ம் பக்கத் தொடர்ச்சி.........

ஆனாலும் அந்த மாலைப் பொழுதில் அவனை யாருமே விசாரணைக்கு உட்படுத்தவில்லை. அடிக்கடி ஜீப் வண்டியில் கொண்டு வருபவர்கள் வரவர கூடுதலாக இருந்தது. வந்து சரணடைந்தவர்களும் இருந்தார்கள். அவனிருந்த கூண்டுக்குள் இன்னும் இரண்டு பேரை உள்ளே போட்டார்க்ள. அவர்களை உள்ளே தள்ளிவிட்ட பொலிஸ் உத்தியோகஸ்தன் அவனை ஏறெடுத்துப் பார்க்காமலேயே சிறைக் கூண்டை மூடிவிட்டுப் போனான்.

அந்திப் பொழுதில் அவனை ஓ.ஐ.சி.யின் அறைக்குள் அழைத்துச் சென்றார்கள். அவனுடன் இன்னும் ஒருவர் சிவில் உடையுடன் நின்றார். இரண்டு பேரும் அவனைப் பற்றித் தெரிந்த விபரங்களை ஆங்கிலத்தில் சுருக்கமாக்கி கொண்டார்கள்.

கேள்விகள் கேட்க ஆரம்பித்தனர். வண்டிக்காரன் தனது மாட்டுக்கும், நாய்க்கும் சாப்பாடும், தண்ணீரும் கொடுக்க வேண்டும் என்று கூறிக்கொண்டான். ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தரை அழைத்து மிருகங்களுக்கு சாப்பாடும், தண்ணீரும் கொடுக்க வேண்டுமென உத்தரவிட்டனர்.

"மாட்டுக்கும், நாய்க்கும் தின்னவும், தண்ணீரும் கொடுக்கும் நிலையும் எங்களுக்கல்லவா ஏற்பட்டிருக்கிறது." அப்பால் போகும் பொலிஸ் உத்தியோகஸ்தர் சொல்வது காதில் விழுந்தாலும் அதைக் கணக்கில் எடுக்காமல் இருந்தார்கள்.

"நீர் அன்று பயங்கரவாதிகளுக்கு சாப்பாடு சமைத்துக் கொடுத்தீரா?"

"நான் சில பேருக்கு சாப்பாடு சமைத்துக் கொடுத்தேன். அவர்கள் பயங்கரவாதிகளா இல்லையா என்று எனக்குத் தெரியாது."

"ஏன் சமைத்துக் கொடுக்க யோசனை வந்தது?"

"நான் பின்னேரம் சமைக்க ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தேன். அவர்கள் தமக்கும் சாப்பாடு சமைத்துத் தரவேண்டும் என்று கேட்டார்கள். என்னிடம் இருந்த தட்டுமுட்டு சாமான்கள் எல்லாம் சிறியவை. அவர்கள் பெரிய தட்டு முட்டு சாமான்களைக் கொண்டு வந்திருந்தார்கள். நான் சமைத்தேன். அவர்களும் ஒத்தாசை புரிந்தார்கள்."

"அவர்கள் யார் என்று முன்னே தெரிந்திருக்கவில்லையா?"

"இல்லை"

"உமக்கு முன்பின் தெரியாதவர்களுக்கு சாப்பாடு சமைத்துக் கொடுக்கும் பழக்கம் உண்டா?"

"பசியால் இருப்பவர்கள் என்றால் மனிதர்களுக்கு, மட்டுமல்ல மிருகங்களுக்கும் கூட இருக்கும் அளவு சாப்பாட்டைக் கொடுப்பேன்."

"அது உன்னுடைய வீடு இல்லைத்தானே?"

"எனக்கு வீடு இல்லை. ஏழு நாட்களும் ஏழு இடங்களில் கழிந்து போகும். பின்னேரம் ஒரு சந்தையில் சாமான்களை இறக்கிவிட்டு, மறுநாள் அந்த சந்தை முடிந்த பிறகு சாமான்களையெல்லாம் சேர்த்துக் கொண்டு மற்ற சந்தைக்குக் கொண்டு போவேன்."

"சாப்பாடு சமைக்க அவர்கள் உன்னையே தேடிக் வந்ததற்கான காரணம்?"

"அது எனக்குத் தெரியாது. நான் சனிக்கிழமை ஓடை பக்கம் போவேன். மாட்டை நன்றாகக் குளிப்பாட்டுவேன். நாயையும் குளிப்பாட்டுவேன். அங்கு நல்ல நிழல். ஒரு வீட்டை விட சுகமாக இருக்கும். அன்றுதான் நான் வண்டி சில்லுகளுக்கு எண்ணெய் போடுவேன். என்னுடைய மாட்டின் கொம்புகளுக்கும், நெற்றிக்கும் வேப்பெண்ணை பூசுவேன், ஈக்கள் மொய்க்காமல் இருக்க. அப்போது எனக்கு நன்றாகப் பசிவரும். தனிமனிதனுக்கு சமைப்பது ஒரு சோம்பேறித் தனமான வேலை. அதுவும் கதைத்துக் கதைத்துச் சமைத்தால் சிரமம் தெரியாது"

"யாரோடு பேசுவாய்"

"மாட்டோடும், நாயோடும்."

"என்ன மொழியில்?"

"நேரத்திற்கு ஏற்றது போல வாய்க்கு வந்தபடி எந்த மொழியிலும் பேசுவேன். எங்களைப் போல அவைகளுக்கு மொழி தேவையில்லை. அவைகளுக்குப் பேசும் முறையில் புரியும் முறையில் புரியும். குளிக்கச் செல்லும் போது நாய்க்குத் தெரியும். ஆனாலும் ஒரேயடியாகத் தாவிச் சென்று ஓடையில் குளிக்காது, அதற்குக் குளிப்பாட்ட சொல்லும்போது அது வேறுபுறமாக ஒடிச்செல்லும். அப்போது தூஷணத்தால் பேச வேண்டும். ஒரு தரம் அதட்ட வேண்டும். அப்போது ஓடிப்போய் ஓடைக்குள் பாயும். மாடும் அப்படித்தான்.

"ஓ சும்மா இருக்கும் போது புத்தகம் ஏதாவது வாசிப்பீர் தானே?"

"பிரயோசனம் இல்லை. ஒரு பிரயோசனமும் இல்லை. ஏதாவது பேப்பர் துண்டுகளைப் பொறுக்கிக் கொண்டால் வாசிப்பேன்."

"அரசியல் கட்டுரைகள் இருந்தால்?"

"இல்லை, எழுத்து மறந்து போகாமலிருக்க"

அவனைப் பார்க்கும் போது மடையனைப் போலத் தெரியவில்லை. அடையாள அணிவகுப்பு வைப்பது நல்லதென்று அவர்கள் ஆங்கிலத்தில் கதைத்துக் கொண்டார்கள்.

"நீர் எவ்வளவு வரை படித்திருக்கிறீர்?"

சிரேஷ்ட தராதரம் சித்தியடைந்தவன் என்றும், தான் ஆங்கில மொழி மூலம் படித்தவனென்றும், தமிழ் பேசுவதற்கு முடியுமாயினும் எழுதுவதற்கு எழுத்தெல்லாம் மறந்து போய்விட்டதென்றும் கவனமாக தெரிந்தெடுக்க வார்த்தைகளால் பழகும் மொழியில் ஆங்கிலத்தில் சொன்னான். சிறிது காலம் பேசாதபடியாலும் வெற்றிலைப் போட்ட நாக்குத் தடித்த படியாலும் வாயில் வார்த்தை தட்டுத் தடுமாறி சிதறியதுபோல் அவனுக்குத் தெரிந்தது.

அதே வேளை ஒரு அமைதியும் உண்டானது. திகைத்துப் போன அந்த உத்தியோகஸ்தர் இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்காமல் கதிரையில் மௌனமாக இருந்தனர்.

சிறிது நேரத்தின் பின் பெருமூச்சுவிட்ட சிவில் உடையிலிருந்த அதிகாரி அடையாள அணிவகுப்பு வைத்து முடித்து விடுவோமா என்று சிங்களத்தில் கேட்டார்.

பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் ஐந்தாறு இளைஞர்களை வரிசையாக நிற்பாட்டி வைத்தார். அவர்களுக்குள் தாடிக்காரர்கள், மீசை அரும்பாதவர்களும இருந்தனர். ஆனாலும் இவர்களுக்கு இரண்டு பொதுத் தன்மை இருந்தன. அதில் ஒன்று புருவம், மூக்கு, உதடு வீங்கி இரத்தம் கசிந்து விகாரமாக இருந்தது. மற்றது, ஒருவருக்கும் பாரிய உடம்பு இருக்கவில்லை.

"அன்று சாப்பாடு சாப்பிட்ட யாராவது இங்கு இருக்கிறீர்களா?"

அவன் சற்றுநேரம் முகங்களை கவனித்துப்பார்த்தான். இருந்தாலும் சொல்ல வேண்டுமா என்ன? அடுத்து மற்றவர்களைப் பற்றி அக்கறையோடு பார்ப்பதும் அவர்களைக் கவனிப்பதும் அவனுக்கு ஒரு பழக்கமான விசயமல்ல. ஆரம்ப விசயங்களையும் முடிவான விசயங்களையும் கேட்பது இவனுடைய பழக்கமுமல்ல. அவனுக்கு எல்லோரும் ஒன்று தான்.

"அப்படியென்றால் ஒருவரையும் தெரியாதா? அவனை உள்ளே போடு."

பொலிஸ் உத்தியோகஸ்தர் அவனை இழுத்துக் கொண்டு போய் சிறைக் கூண்டுக்குள் தள்ளிவிட்டான். கூண்டின் ஒரு மூலையில் சாய்ந்து கொண்டிருந்த முகம் வீங்கி கருத்துப் போயிருந்த இருவரும் திடுக்கிட்டு எழும்புவதற்கு முயன்று மீண்டும் நித்திரை யானார்கள். சிறுநீர்கடுப்பும், நெஞ்சும், விலாப்புற வேதனையும் இவ்வளவு தூரம் இருக்கிறதென்றால் மயங்கி விடுவோமோ என்று அவன் நினைத்தான். இரவில் அடிக்கடி கேட்ட புலம்பலும், சத்தங்களும், வெடி சத்தங்களும் நித்திரைக்கு ஒரு தடையாக இருந்தன. ஓரிரு நாட்கள் கழிந்து போக தாகம், பசி, நெடி, புலம்பல், தூஷணங்கள் யாவும் பழகி, ஏற்கத்தக்கதாக இருந்தது.

ஆனாலும், தாங்க முடியாத துர்நாற்றம் தான். இதையெல்லாம் மறந்து நல்லதொன்றை நினைப்பதற்கு இருந்தால் எவ்வளவோ இதமாக இருக்கும்?

நான் எங்கு சிறு நீர் கழித்தாலும் என்னுடைய நாய் வெகுதூரம் போய்விட்டு என்னைப்பார்த்து, தவறில்லை என்று நினைத்ததன் பின் தான் சிறுநீர் கழிக்கும். என்னுடைய மாடு தண்ணீரில் சிறுநீர் கழிப்பதோ சாணம் போடுவதோ இல்லை, குளிப்பதற்கு முன்பு அது அந்த இரண்டு காரியங்களையும் செய்யும். கடந்த நாட்களிலே நான் ஒரு மனமுடனேயே வாழ்ந்தேன். எதைப் பற்றியும், தீவிரமாக யோசிப்பதற்கோ, தவறைப் பற்றி யோசிப்பதற்கோ நான் முனைவதில்லை. ஒரு கிழமைக்கு ஒரு தடவை கடந்து போகும் வயல் வெளிகள், பாலங்கள், வடிகால்கள், சேற்றுக் கிடங்குகளில் கிடக்கும் எருமை மாடுகள், வயல் வெளி மீதாகப் பறந்தோடும் கொக்குகள், கிளிகள் தேக்குமரத் தோட்டங்களில் சாம்பல் நிறமான மேகங்களை தழுவும் மலை, மழை, வெயில் என்னுடைய உலகமாகும். மாடும் நாயுமே என் நண்பர்களாகும். நான் அதிகமாக மாட்டோடுதான் கதைத்துள்ளேன். நான் அதற்கு பாட்டுகள் படிப்பேன்.

இந்த எண்ணங்களுக்குள் அவனுக்கு மாட்டின் நினைவு வந்து விட்டது. அதன் கொம்பிலிருக்கும் பித்தளைப் பூணை பளபளக்கத் தேய்க்க வேண்டும் என்றும், தேய்ந்து போன லாடத்தை அடிக்க வேண்டும் என்றும் யோசித்தான். லாடம் அடிப்பதற்கு மாட்டைப் புரட்டிப் போட்டு வதையும் கொடுக்க வேண்டும். லாடம் அடிக்கா விட்டால் வழுக்கி கால்கள் உடைந்துவிடும். இந்த இரண்டு

தனிமனிதனுக்கு சமைப்பது ஒரு சோம்பேறித் தனமான வேலை. அதுவும் கதைத்துக் கதைத்துச் சமைத்தால் சிரமம் தெரியாது"

"நீ யாரோடு பேசுவாய்"

"மாட்டோடும், நாயோடும்."

"என்ன மொழியில்?"

"நேரத்திற்கு ஏற்றது போல வாய்க்கு வந்தபடி எந்த மொழியிலும் பேசுவேன். எங்களைப் போல அவைகளுக்கு மொழி தேவையில்லை.



கிரியைகளிலிருந்தும் விடைபெறுவதற்கு எவருக்குமே முடியாது. அடிமட்டம் வரை தேய்ந்து போவதைப் பார்த்துக் கொண்டிருக்காமல் லாடம் அடிப்பதை விட வேறொன்றும் செய்வதற்கில்லை.

அன்று பகல் ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தர் வந்து கூண்டுக்குள்ளிருந்து அவனை வெளியில் எடுத்தார்.

"ஏன்டா உன்னுடைய ஊரெது?"

ஒரு தடவை என்னுடைய வசிப்பிடத்தை தெரிந்து சொல்லப் போய், என் விலா எலும்மை உடைத்தார்கள். வசிப்பிடம் வண்டியில் என்றும் பிறந்த இடம் திவுல்லேவ என்றும் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது. இப்பொழுது வசிப்பிடம் எங்கே என்று மீண்டும் கேட்கிறார்கள். தேவையான விடயத்தைத் தெரிந்து கொள்வதற்கு யாரும் எவரும் எதையும் கேட்பார்கள். அதற்கு அப்பாற்பட்ட உண்மைகள் அவர்களுக்கு சந்தோசத்தைத் தரக் கூடியதல்ல.

"சொல்லுடா உன் ஊரை"

"திவுல்லேவ ஐயா. என்னுடைய மாடு?"............

"அட மாடு, மாட்டைப் பார்க்க உனக்கு நேரமிருக்கு எங்களுக்கு இல்லை. உனக்குத் தெரிந்த இரண்டு பேருடைய பெயர்களைச் சொல்லு"

"அண்ணே............. மிஸ்டர் குணசிங்க........?"

"வேற யார், கிராமசேவகர்? யாரென்று தெரியாது. பழைய விதானையாரைத் தெரியும்."

ஜீப் வண்டியின் பின் புறத்தில் அவனைப் போட்டுக் கொண்டார்கள். அவனிடம் கேள்வி கேட்ட உத்தியோகஸ்தர் இரண்டு பேரும் முன்னால் இருந்தார்கள். அவன் பக்கத்தில் ஆயுதத்தோடு ஒரு பொலிஸ்காரன் இருந்தான். வண்டிக்காரனுடைய வழிகாட்டலில் மரஞ்செடிகள், காடுகள், பிளவுகள், கடந்து போய்க் கொண்டிருந்தன.

ஜீப் வண்டி அண்ணனுடைய வீட்டு முற்றத்தில் போய் நின்றது. அண்ணன் வெற்றிலையில் பாதியை சப்பிக் கொண்டு ஜீப்பை நோக்கி முன்னால் வந்தான். அவன் எந்த விதமான சலனமும் இல்லாமல் தம்பியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"யாரிது?"

"தம்பி"

"இவருடைய தட்டு முட்டு சாமான்கள், புத்தகங்கள் இங்கே இருக்கின்றனவா?"

"ஆம்"

அண்ணன் அவனுடைய தட்டு முட்டு சாமான்கள் நிறைத்து வைத்திருந்த பெரிய ட்ரங்கு பெட்டி ஒன்றை தூக்கிக் கொண்டு வந்து வெளியில் வைத்தான். அதை அவனைக் கொண்டே திறக்க வைத்தார்கள். அதை திறக்கும் போது வண்டிக்காரன் மனதுக்கு அவனது இளமைப் பருவம் நினைவுக்கு வந்தது. பாடசாலையில் படிக்கும் போது அவன் தங்கும் விடுதிக்கு இதே பெட்டியை எடுத்துக் கொண்டு போனான். அன்று அதனிலிருந்து வந்த புதிய உடை, புத்தகங்கள், சவர்க்காரம், பௌடர், ஒன்று கலந்து வந்த வாசம் இருக்கிறதா என்பதை சுவாசிப்பதற்கு மூக்குத் துவாரத்தை பெரிதாக்கி உறிஞ்சினான்.

புத்தகங்கள் ஒவ்வொன்றையும் அவர்கள் சோதனை செய்தார்கள். சிவப்பு மொனிட்டர் புத்தகக் கட்டும், ஆங்கில, சிங்கள புத்தகக் கட்டும், தமிழ் பாட்டுப் புத்தகங்களும் மேலே இருந்தன. பொலிஸ் உத்தியோகத்தர் ஒவ்வொன்றாகப் பரிசீலித்ததார். அந்தப் புத்தகங்களில் இரண்டில் பின்புற படத்தைக் கண்ட பொலிஸ் உத்தியோகஸ்தர் அதனை கைப்பற்றிக்கொண்டு தன்னுடைய சட்டைகளாலேயே தூசியைத் துடைத்தபின் கொண்டு மேலதிகாரி கைகளில் கொடுத்தான். அவை சேக்ஸ்பியருடைய மெக்பத்தும், தாகூருடைய படமும் ஆகும்.

"நீர் அந்தக் காலத்தில் ஒரு நாடகக்காரன் போலும்"

"அந்தக் காலத்தில் எங்களுடைய பாடப் புத்தகங்கள்தாம் அவை"

அதற்குக் கீழ் கையால் கட்டப்பட்ட டிமைப் புத்தகம் இருந்தது. அது, அவன் கணக்குகள் செய்வதற்குப் பாவித்ததாகும். அதற்குக் கீழே "அரச பணி"யென்று அச்சிட்ட ஒரு பெரிய தபாலுறை இருந்தது. அதற்குள் அவனுடைய விளையாட்டு சான்றிதழ்களும், சிரேஷ்ட தராதரப்பத்திரமும் இருந்தன. அதைக் கவனமாக எடுத்துக் கொண்ட பொலிஸ் உத்தியோகஸ்தர் இரண்டு தரம் தூசிபோகத்தட்டி விட்டு, ஓ.ஐ.சி.யிடம் கொடுத்தார். மண்ணிறமான அரக்கு முத்திரையைத் தவிர அனைத்தும் வெள்ளிப் பூச்சிகளால் அரிக்கப்பட்டிருந்தன.

"அக்காலத்திற்கு ஏற்றபடி அவனுக்கு நல்லதொரு உத்தியோகத்திற்கு போகும் வாய்ப்பிருந்தது. "ஓ.ஐ.சி மற்ற உத்தியோகஸ்தருக்கு இரகசியமாகக் கூறுவதைப்போல் மெல்லியக் குரலில் ஆங்கிலத்தில் சொன்னார்.

"அதுதான் சார்"

தங்களுக்கிடையே நடந்த பேச்சுவார்த்தைகளுக்கு மறுமொழி கொடுத்தகிராமதத்தவருடைய பதிலுக்கு இரண்டு உத்தியோகஸ்தர்களும் ஆச்சரியப்பட்டார்கள்.

வெயிலில் காய்ந்து தேமல் பிடித்துப் போயிருந்த அவன் தோலும் வெற்றிலை சப்பி சிவந்து போயிருந்த உதடும், எண்ணெய் பூசி பளபளக்கும் சாடையான வழுக்கைத் தலையும் உடைய வீட்டுக்காரன், எந்தவிதமான உணர்ச்சியும் இல்லாமலேயே பார்த்துக் கொண்டிருந்தான். ஆனாலும் அவனுடைய நாக்கு, கன்னத்துக்குள் சுழன்று சுழன்று அங்கு ஒரு மூலைக்குள் மிஞ்சியிருந்த பாக்குத் துண்டுகளைத் தேடி, அவனுக்கு கட்டுப்படாமலேயே செயல்பட்டுக் கொண்டிருந்தது.

"நீர் என்ன செய்கிறீர்?"

"சுமம் செய்கிறேன்"

வண்டிக்காரனை ஜீப் வண்டிக்குள் திரும்பவும் ஏற்றிக் கொண்டார்கள். அண்ணனும் தம்பியும் எந்தவிதமான பேச்சுவார்த்தைகளையும் பரிமாறிக் கொள்ளவில்லை.

புறப்பட்டுப் போகும் ஜீப் வண்டியை வெகு நேரம் பார்த்துக் கொண்டிருந்த அண்ணன் "அவன் குற்றம் இழைப்பவனல்ல" என்று சொல்லிக் கொண்டு வீட்டுக்குள் போனான்.

மறுநாள் காலை ஆயுதபாணிகள் பலர் புறப்பட்டுப் போனார்கள். தனியார் வாகனங்களை எடுத்துக் கொண்டு சென்றார்கள். பகற்பொழுதாகும் பொழுது வேறு சிலர் வந்து சரணடைந்தார்கள். அவர்களுக்கு ஆளுக்கொரு உதை கொண்டு "லக்கப்" பில் போட்டு விட்டார்கள்.

மாலைவரையும் ஒருவருக்குமே ஒரு துளி தண்ணீரும் கிடைக்கவில்லை. சாரம் அணிந்திருந்த சுயேச்சை உத்தியோகஸ்தர்கள் வந்ததுடன், அங்கிருந்த பாழடைந்தஅமைதி கலைந்து போயிற்று. அவர்கள் கட்டைச் சுவர் மீதிருந்து சிகரட் புகைத்துக் கொண்டு வம்பளந்து கொண்டிருந்தார்கள். இதற்கிடையே வந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் "முட்டாளை இன்றைக்கு விடுவிக்கச் சொன்னார்கள், இன்னும் கொஞ்ச நேரத்தில் இதையும் மறந்து விடுவோம்" என்று சொல்லிக் கொண்டு கூண்டின் கதவைத் திறந்தான்.

"இப்போ நீ எங்கேயும் தொலைந்து போ"

வண்டிக்காரன் மெதுவாக எழுந்து குந்திக் கொண்டான். முழங்கால் இரண்டில் கையை வைத்துக்கொண்டு எழும்பி நின்ற அவன், தெருவை ஏறெடுத்து சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். வண்டி இருந்த இடத்திலேயே சாய்ந்து போயிருந்தது.

"ஐயா மாடு"

"உன்னைவிட பெரிய மாடு எங்கே ஓய். இப்போதாவது உயிரைக் காப்பாற்றிக் கொண்டு போ, இன்னும் எங்களை வதைக்காமல் இன்னும் ஒரு மணித்தியாலத்தில் ஊரடங்கு சட்டம் வந்துவிடும். இல்லாவிட்டால் நீ சாகத்தான் போகிறாய்".

சுயேச்சை உத்தியோகத்தர்கள் பல வகையில் கேலி செய்து கொண்டும், கதைகள் பேசிக் கொண்டும் சிகரட் புகைத்துக் கொண்டும் இருந்தார்கள். அவனுக்கு அதிலொன்றிலும் முன்னும், பின்னும் விளங்காமலும், கணக்கிலும் எடுக்கவில்லை. அவன் மாட்டைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான். பொலிஸ் நிலையத்தின் பின்புறத்தில் மாடு புல்லைத் தின்று கொண்டு இடைக்கிடையே தலையைத்தூக்கித் தன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் என்ற சிந்தனை அவனுக்கு உண்டானது. அத்தோடு, கடந்தசில நாட்களாக நொய்ந்து போயிருக்கும் என்ற கவலையும், ஆனாலும் இன்று திரும்பவும் பழைய நிலைக்கு வரலாம் என்ற எண்ணமும் தோன்றியது வேதனைகள் அனைத்தும் அடங்கிப் போய் அவனுக்கு மீண்டும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

"நீ போகப் போறியா? அல்லது மீண்டும் சிறைக்கூட்டுக்குள் போறியா?"

"நான் போக மாடு வேண்டும்"

"ஏன் உன்னைப் போன்ற மாட்டுக்கு வண்டியை இழுக்க முடியாதா?"

"என்னுடைய மாடு எனக்குத் தேவையென்றுதான் சொல்கிறேன்."

நீ உன் மாட்டைத் தேடுகின்றாய். மனிதனுக்கே இந்த நிலை ஏற்படும்போது மாட்டுக்கு என்ன நிலை ஏற்படுமோ ஓய்."

சுயேச்சை உத்தியோகத்தர்கள் கைகொட்டி சிரிக்கத் தொடங்கினர். அவனுக்கு அதைக் கேட்பதோ அல்லது தெரிந்து கொள்வதோ அவசியமில்லை. வீங்கி கறுத்துப் போயிருந்த விழிகள் மேலும் சிறுத்துப் போனதாகத் தோன்றியது. காலை எட்டி வைத்து பிராணியை வளைத்துக் கொள்வதைபோல், பொலிஸ் உத்தியோகத்தரை நோக்கி நெருங்கினான். பொலிஸ்காரனுடைய புறங் கையைப் பிடித்து சுழற்றி விடவே கட்டைச் சுவரின் கீழ் பொலிஸ்காரன் விழுந்து சாய்ந்தான். கட்டையான இயந்திரத் துப்பாக்கி வண்டிக்காரனுடைய கைக்குப் பழக்கமில்லாமல் இருந்தாலும், அதனுடைய வடிவம் அவனுக்குப் பிடித்துவிட்டது. அவன் ஒரு "கெட்ட" வீரனாக இருக்கும்பொழுது மண் குவியலில் பதிந்திருந்த சின்னத்தைவிட வேறு எந்தவிதமான பிராணிகளுக்கும், குறிவைக்கவில்லை என்பது அவனுக்கு நினைவுக்கு வந்து விட்டது.

புகலிடச் சூழிலில்......

# வெள்ளைத் திமிரும் வெள்ளாளத் திமிரும்-2



சென்ற இதழில் நோர்வேயில் நடந்த இரு படுகொலைகளைப் பற்றி அறிந்துகொண்டோம். வில்பிரட்டின் தற்கொலை பற்றி குறிப்பிட்டிருந்தேன். வில்பிரட் முதலில் தனது மனைவியை கொலை செய்த செய்தி நோர்வே நாட்டின் ஊடகங்களினூடாக விரைவாகப் பரவின. ஆனால், வில்பிரட்டின் தற்கொலை பலருக்குத் தெரிந்திருக்கவில்லை. அது தொடர்பூடகங்களில் இடம்பெற்றிருக்கவில்லை. அது போலத்தான் நான் குறிப்பிட்ட தாயாரின் தற்கொலை பற்றிய செய்தியை அறிவதற்காக நான் அதிக சிரமப்பட்டேன். இங்கு தான் வெள்ளையர்களின் போக்கை அடையாளம் காண வேண்டும். இந்த கறுப்பர்கள் பற்றி (அதாவது நாங்கள் உள்ளிட்ட வெள்ளையர்கள் அல்லாதவர்கள்) அவர்கள் முரடர்கள், திருடர்கள் வஞ்சகர்கள் என்கிற சில கருத்தியல்களைக் கொண்டிருக்கும் அதே நேரம் அத்தகைய கருத்தியல்களை பரப்பவோ, புனையவோ அல்லாது போனால் நிறுவும் வழிகளைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படித்தான் வில்பிரட் செய்த கொலை செய்தியானதும், தற்கொலைகள் செய்தியாகாததையும் விளங்கிக் கொள்ள வேண்டும். மேலும் அரசாங்கம் தம்மால் சிறைவைக்கப்பட்டிருந்த போது, தமது காவலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தற்கொலை என்பதை உலகமறிந்தால் ஏற்படக்கூடிய இழுக்கைப் பற்றியும் அஞ்சியிருக்கக் கூடும். தங்கள் நாடுகளில் வந்து அனைத்தையும் அனுபவிக்கிறார்கள், மண்ணின் மைந்தர்களின் தொழில்களை அபகரிக்கிறார்கள் என்கிற ஒரு பிரச்சாரங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். "கறுப்பர்களால்" புரியப்படும் குற்றச்செயல்களை தற்செயலாக அறிந்தாலும் அவை வேகமாக பிரச்சாரம் செய்யப்படுவதும், பூதாகரப்படுத்தப்படுவதுமான செயலானது தற்செயலானது அல்ல. இவை திட்டமிட்டு மேற்கொள்ளப்படுபவை. இன்னொரு புறம் இந்நிலைமை கறுப்பர்களை விட்டு எட்டி நிற்கப் பண்ணியிருக்கிறது. இதில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். இங்குள்ள "கறுப்பர்கள்" கடும் உழைப்பாளர்கள். பாரபட்சங்களுக்கு இலக்காகி தங்களை நன்றாக சுரண்டப் பண்ணி, அவர்கள் அனைவரும் உழைக்கும் பணத்திலிருந்து ஏராளமான வரியை அறவிடுகிறது. அரசு, அறவிடும் வரியின் மூலம் வழங்கும் சேவைகளைத் தான் இவர்களும் அனுபவிக்கிறார்களே ஒழிய, அவர்கள் பிரத்தியேகமாக வெள்ளையர்களைச் சுரண்டி வாழவில்லை.குற்றச் செயல்கள் பற்றிய கணக்கெடுப்பை இவர்கள் விலாவாரியாக நாடு, இனம், மதம் என எடுக்கிறார்கள். என்ன வேடிக்கையென்றால் உள்நாட்டவர்களால் புரியப்படும் குற்றச்செயல்களின் அதிகரிப்பை அவர்களால் மூடிமறைக்க முடிவதில்லை. கறுப்பர்கள் (ஐரோப்பியர்கள் அல்லாதவர்கள்) நாட்டுக்குள் வந்தவுடன் குறிப்பிட்ட சில நாட்களுக்குள் அவர்கள் மருத்துவ பரிசோதனை செய்து தங்களை நிரூபிக்க வேண்டும். அந்த மருத்துவ சான்றிதழ் தான் இந் நாடுகளில் கல்வி, தொழில், விசாபுதுப்பிப்பு போன்றவற்றிற்கு அத்தியாவசிய ஆவணம்.

சென்ற வருடம், கிறிஸ்மஸ் விருந்தொன்றிற்குப் போயிருந்த போது, அங்கு வந்திருந்தவர்களுக்கு நான் அறிமுகமாகினேன். ஒரு பெண் இப்படிக் குறிப்பிட்டார். "... இவர்தானே... டெலிபோனில கதைக்கேக்க கொச்சை தமிழில் கதைச்சவர். நான் நினைச்சனான் மலையகமாக்கும் எண்டு..." என கூறிக்கொண்டே போனார். அப்போது தான் எனக்குத் தெரிந்தது, என்னோடு இவர் தொலைபேசியில் கதைக்கும் போது வேண்டும் என்றே மொழியை கிண்டல் செய்வதற்காகப் பேசியிருக்கிறார். அந்த விருந்தில் என்னுடைய தமிழை கேலி செய்தது பலருக்கும் நகைச்சுவையாகிப் போனது. எனக்கு அது வடுவாகப் பதிந்தது. அதன் அரசியல் விளைவைப் பற்றி தனியாக யோசித்திருக்கிறேன்.

".... இன்றைக்கு மத்தியானம் அவர் தன்ட பிள்ளையோட கதைக்கிற நேரம் "இங்கிட்டு" வாடா டேய்..." "அங்கிட்டு" போகாதேயடா... எண்டு மற்றவங்களுக்கு உங்களை கண்ணால காட்டி கிண்டல் செய்தார் தெரியுமே..." என்றார் எனது துணைவி.

"... நான் அவதானிக்கேல்ல. அப்பிடியா நடந்திச்சு..." என்று கேட்டேன்.

"எனக்கு அது கஷ்டமாக இருந்தது... ஏன் நீங்கள் எங்களைப் போல கதையுங்களேன். இல்லையெண்டா இப்பிடித்தான் எல்லாரும் கேலி செய்வாங்க..."

இது பற்றி நாங்கள் இருவரும் நீண்ட நேரம் தொடர்ந்து உரையாடினோம். இலங்கையில் மொழி வழக்குகள் குறித்து நாமறிவோம். இனத்துக்கு இனம், பிரதேசத்திற்கு பிரதேசம், சாதிக்கு சாதி, வர்க்கத்துக்கு வர்க்கம் என்று பேச்சு மொழி வழக்குகள் நிறைய வித்தியாசப்படுவதை நாமறிந்திருக்கிறோம். எல்லா நாடுகளிலும் இந்த நிலைமை உண்டு. அதிகார- அந்தஸ்து பெற்ற குழுமம் தனது மொழியை தூய்மை மொழியாகவும் ஏனையவை கொச்சை மொழியாகவும் உத்தியோகபூர்வமற்ற முறையில் அறிவித்துக் கொள்கிறது. இதனையே பரப்புகின்ற போக்கையும் நாம் காணலாம். இலங்கையில் யாழ். சைவ வேளாளர் பேசும் தமிழ் உயர்ந்த சரியான மொழியாம். மற்றவையெல்லாம் கொச்சையாம். மன்னார் தமிழ், மட்டக்களப்பு தமிழ், யாழ் தமிழ், மலையகத் தமிழ், கொழும்புத் தமிழ், வன்னித் தமிழ், நீர்கொழும்பு, சிலாபம் தமிழ் என இலங்கையில் தமிழ் மொழி நிறையவே வேறுபடுகின்றன. இதிலும் முஸ்லிம் மக்கள் பேசும் மொழி கூட பிரதேசத்திற்கு பிரதேசம் (ஒரு பிரதேசத்திற்குள்ளேயே வாழும் தமிழர்களின் மொழியை விட) வேறுபடுகின்றன. நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் அரச, நிர்வாக சேவைகளுக்கும், ஆசிரியர் தொழிலுக்காகவும் போன யாழ் தமிழர்கள் அவ்வப் பிரதேசங்களில் மதிப்புக்குரியவர்களாகவும், அவர்களது மொழி மதிப்புக்குரிய மொழியாகவும் ஆகின. நாங்கள் பேசும் தமிழ் தான் ஒரிஜினல் தமிழ் எனும் வாதத்தை நான் பல தடவை கேட்டிருக்கிறேன். ஆனால் எழுத்து வடிவம் பெற்ற இலக்கணத் தமிழ் என்கிற வகைக்குள் யாழ் பேச்சுத் தமிழ் கூட சேராது என்பது வேறு கதை. யாழ் மொழியைக் கொண்டிராதவர்களை புழு, பூச்சியைப் போலப் பார்ப்பதும், அவர்களை ஏளனமாக மனதில் கொள்வதும், நடத்துவதும் நாம் அனுபவிக்காததல்ல. யாழ் மொழி வழக்கை கொண்டிராத தரப்பினரும் கூட, யாழ் மொழி பேசுவதை தமது அந்தஸ்தை உயர்த்தும் ஒரு விடயமாகக் கருதும் போக்கையும் நாம் ஆங்காங்கு காணலாம். சாதி உணர்வு இருக்கிறதே அது ஒன்றுக்கு கீழாக உணர வைப்பது மட்டுமல்ல ஒன்றுக்கு மேலாகவும் உணரவைக்கும். அது போல் யாழ். மொழியை ஒரு புறம் அதிகார மொழிவழக்காக உணர்கிற அதே நேரம், அந்த மொழியை தாமும் கையாண்டு மற்றோரை அதிகாரம் செய்யும் போக்கும் இல்லாமலில்லை. யாழ். மொழியைக் கண்டு பயந்தோடும் போக்கும், தூர ஒதுங்கி நிற்கும் போக்கும் அசட்டைக்குரியவை அல்ல. இருக்கின்ற ஊடகங்கள், மற்றும் அரச நிர்வாகத்துறை, ஆசிரியர் தொழில் என திருப்பி திருப்பி உறுதிப்படுத்தும் வாய்ப்பு யாழ்மொழியைக் கொண்டிருப்பவர்களுக்கு உண்டு. எமது அக்கறைக்குரிய விடயமென்னவென்றால் ஏனையோரின் சொந்த உணர்வுகளையும், கருத்துக்களையும், தேவைகளையும் பரிமாறிக்கொள்ள அவர்களது சொந்த மொழியை கைகொள்வதல்லவா சரியானது. அதனை ஏன் கிண்டல் செய்ய வேண்டும்?

இதனால், தான் இப்போதெல்லாம் விளிம்புநிலையினரின் மொழியை காப்பாற்றுதல், தக்கவைத்தல் என்கிற நிலைக்கு ஏனையோரை கொண்டு செல்கிறது. அது தவிர்க்க முடியாததும் கூட. எமது நாட்டார் வழக்காற்றுகள் பல உருத்தெரியாமல் ஒழிந்து, போனதற்கும் இந்த வகை போக்குகள் ஒரு காரணமில்லையா? எனது பாட்டியும் அப்பாவுடனும், அம்மாவுடனும் தெலுங்கில் பேசிக்கொள்வார்கள். எனது அப்பாவின் தலைமுறையைச் சேர்ந்த உறவினர்களும் தான். எனது சந்ததியைச் சேர்ந்தவர்கள் எங்களுக்கு மூத்த சந்ததியை நோக்கி அவ்வாறு தெலுங்கில் பேசுவதை நிறுத்தும் படி எச்சரிப்பார்கள். அது சாதியைக் காட்டிக்கொடுக்கும் ஒன்று என்பார்கள். அதனை மூத்த தலைமுறையினர் ஏற்றுக்கொள்வார்கள். நான் தெலுங்கை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே எனது அம்மா, அப்பா, பெரியம்மா உட்பட பலருடனும் தெலுங்கில் பேச முற்படுவேன். சிலர் நீ அதனைத் தெரிந்து கொள்ளக்கூடாது என்று கட்டாயப்படுத்தினார்கள். சிலர் நான் அரை குறையாகப் பேசும் தெலுங்கை கேலிசெய்தாவது என்னுடன் கதைத்தார்கள். எங்கள் தலைமுறை போய் அடுத்த தலைமுறையினரோ அது ஒரு பழங்குடிகளின் மியூசிய மொழியாக மட்டும் தான் எதிர்காலத்தில் அறியப்போகிறார்கள்.

புகலிடத்தில் தொடரும் மதம், சாதியம், பிரதேசவாதம் இன்னோரன்ன காரணிகள் பிரதிபலிக்கின்ற மொழி வழ்க்குகள் ஏலவே நிலைபெற்றுள்ள அதிகாரத்துவ வடிவங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்பதே நாங்கள் இங்கு அவதானிக்க வேண்டிய விடயம்.

மொழியின் அதிகார வடிவம் என்பது விரித்து பேசப்பட வேண்டிய விவகாரம், அதனை தருணம் வரும் போது மேலும் விரிவாக வாதிப்போம்.

நோர்வேயிலிருந்து
**சரவணன்**

---

சந்திரிகா முன் வைக்க முயன்ற அரசியல் யாப்பில் தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. இப்பொழுது நடைமுறையில் உள்ள மாகாண சபை முறைமைக்கு மேலாக இதில் எவ்வித முன்னெடுப்புகளும் இல்லை என்பதை தமிழ் மக்களே ஒப்புக் கொண்டுள்ளனர். இத்தீர்வுத் திட்டத்தில் நாடு பிளவுபட மாட்டாது என்பதையே வலியுறுத்துகின்றனர். தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு இத்தீர்வுத் திட்டத்தில் பதிலேதும் இல்லை. சிங்கள பேரினவாதிகளின் இனவாதத்திற்கு கட்டுப்பட்டு ஒரு போதும் தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. இவ்விடயம் தொடர்பாக நாம் விவாதிக்க அவசியம் இல்லை என்றே நான் கருதுகின்றேன். சந்திரிக்காவிற்கு இதை பரீட்சித்துப் பார்க்க வேண்டிய அவசியம் இருந்ததா? அல்லது வெறும் நடிப்பா?

ஜனாதிபதியின் தந்தை, பண்டா-செல்வா ஒப்பந்தத்திற்கு செய்தது போல் செய்து தனியே செல்வாக்கு பெற முனைந்திருக்கலாம். உண்மையிலேயே பண்டா-செல்வா ஒப்பந்தம் அன்றைய நிலையில் தமிழ் மக்களுக்கு அவசியமாக இருந்தது. இன்று சந்திரிகா முன் வைத்திருக்கும் தீர்வு சிங்களவர்களுக்கிடையேயான ஒப்பந்தத்திற்கான தீர்வே தவிர, தமிழ்-சிங்கள மக்களின் பிரச்சினைக்கான தீர்வு அல்ல. பண்டாரநாயக்கா தமிழ் தலைவர்களின் கோரிக்கைகளை ஏற்று தீர்வொன்றை முன்வைத்தார். ஆனால் மக்களோ சிங்களத் தலைவர்கள் ஒன்றிணைந்தால் தமிழ் மக்களுக்கு என்ன கொடுப்பார் என தீர்மானிக்க முயற்சித்தார்கள். சந்திரிகா தமிழ் மக்களை இவ்வாறு ஏமாற்றும் போது இதற்கு துணை போகும் தமிழ் தலைவர்களும் இருக்கின்றார்களே என நினைக்க புதுமையாக இருக்கின்றது. சிங்கள இனவாதிகள் வீதியில் இறங்கி விட்டார்கள். எனவே நாம் சந்திரிகாவை காப்பாற்ற வேண்டும் என தமிழ் தலைவர்கள் கூறுவது விந்தையிலும் விந்தையாக இருக்கின்றது. ஆனால் இந்த இனவாத நச்சுப்பாம்புகளுக்கு ஆறுவருட காலமாக பாலூட்டியது இந்த சந்திரிகா தான் என்பதை இவர்கள் மறந்து விட்டார்கள். பொது சன ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்த ஆரம்பகாலத்திலேயே இத் தீர்வுத் திட்டத்தை முன் வைத்து இப்பிரச்சினையை தீர்த்திருக்கலாம். அல்லது 1995லாவது இப்பிரச்சினைக்கு தீர்வினை கண்டிருக்கலாம். அதே நேரத்தில் இனவாதத்திற்கு எதிராக மக்களை வழி நடாத்தக் கூடிய நிலைமை இருந்தது. இதனை விடுத்து, இடதுசாரி சக்திகள் வெளியேற்றப்பட்டு அரசில்



கலாநிதி
**விக்ரமபாகு கருணாரத்ன**

## பார்வையில்

இனவாதிகளின் கை ஓங்கியவுடன் அரசியல் யாப்பு சீர்திருத்தம் ஒன்றினை நிறைவேற்றுவது என்பது குளிர்காலத்தில் நிர்வாணத்துடன் வீதியில் நடப்பதற்கு ஒப்பானதாகும். இந்த அரசியல் யாப்பு சீர்த்திருத்த குழப்பத்தினால் மக்கள் விடுதலை முன்னணியே இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது. வர்க்க ரீதியான அரசியலுக்கு வந்தும், இடதுசாரி ஐக்கியத்திற்குள் இணைந்தும் இருந்த மக்கள் விடுதலை முன்னணி இன்று இனவாதிகளின் குப்பைக்குள் அலைந்து திரிகின்றவர்களாக மாறியுள்ளனர்.

தற்போது சிஹல உருமய, மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியன ஒரே கோஷத்துடன் ஊர்வலம் போகும் நிலைமை தோன்றியுள்ளது. முரத்தட்டுவே ஆனந்த அவர்களின் விகாரைக்கு குண்டு வீசியது சிஹல உருமய என முரத்தட்டுவே ஆனந்ததேரோ அவர்கள் கூறியுள்ளார். அனைத்து கடும் போக்காளர்களும் தமக்கு அருகில் இருப்பவர்களுக்கு குண்டு வீசியே தமக்கு வேலையை ஆரம்பிக்கின்றனர். சம்பிக ரணவக்கவும் இதைப் போலவே தொடங்கியுள்ளார். மக்கள் விடுதலை முன்னணி தொடர்ந்தும் இனவாத முகாமிற்குள் இருக்க முடியாது இது தொடர்பான பிரச்சினை விரைவில் எழும். பாட்டாளி வர்க்கத்தின் ஐக்கியத்தை கட்டியெழுப்ப வேண்டுமானால் தேசியப் பிரச்சினை தொடர்பாக நல்ல சிந்தனை மலர வேண்டும்.

விசேடமாக, மக்கள் விடுதலை முன்னணியின் இலங்கைத் தலைவர்களான விமல், டில்வின் ஆகியோருக்கும் கட்சித் தலைவர் சோமவன்ச அமரசிங்கவிற்கும் இடையில் கருத்து முரண்பாடு வளர்ந்துள்ளது.

மறுபுறத்தில் ரணில், சந்திரிகா பதிலளிக்க வேண்டிய பிரச்சினை ஒன்றுள்ளது, இவர்கள் இருவரும் வடக்கு கிழக்கு நிர்வாகத்தை தமிழ் பிரதிநிதிகளுக்கு வழங்க ஒப்புக்கொண்டுள்ளனர். மறுபுறமாக தமிழர் தாயகக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டே இவர்கள் இதனை செய்துள்ளனர் என்பது தெளிவாகின்றது. ஆனால் வெளிப்படையாக இதனை மறுக்கின்றனர். இதனை பகிரங்கமாக ஏற்றுக்கொண்டால் இவ்வளவு காலமும் ஏன்யுத்தம் நடைபெற்றது என்பது கேள்வியாகிவிடும்.

விடுதலைப் புலிகளின் அடிப்படை கோரிக்கை தமிழ் ஈழம் அல்ல, தமிழர் தாயகத்தை அங்கீகரிக்க வேண்டும் என்பதே! சிங்கள கிராமத்து இளைஞர்கள் இதற்காக ஏன் யுத்தம் செய்து மரணித்தனர் என்பது தாங்க முடியாத பிரச்சினையாகிவிடும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்பதற்கு பதிலாக தனது பிரச்சினைகளை ஜனாதிபதி தீர்த்துக் கொள்ளவே இவ் அரசியல் யாப்பினை வெளியிட்டுள்ளார் என்பது தெளிவாகின்றது. அதுபோல் தமிழ் மக்களின் பிரச்சினைகளை ருசிக்கு தொட்டுக் கொள்ள விளையும் இவ் அரசியல்வாதிகள் மீது இவர்களும் இப்படிச் செய்தார்களே எனும் வைராக்கியம் எழும் போது விடுதலைப்புலிகள் கூறும் தர்க்கம் சரியென வலுப்பெறும் என்றாலும் தெற்கில் தொழிலாளர்கள் மத்தியில் மறுசீரமைப்பு அரசியல் தொடர்பாக விரக்தி நிலை ஏற்படும். இதற்கமைய இடதுசாரித்துவ மாற்றத்திற்கு தேவையான சந்தர்ப்பம் எழுவது போல் இனவாத கட்சிகளும் பலம் பெறும். மக்கள். விடுதலை முன்னணியினால் சிங்கள உறுமய பலம் அடையும் என கூறினால் ஆச்சரியப்பட வேண்டாம் ஏன் என்றால் சிஹல உருமய கோஷங்களுக்குள் மக்களை திணரச் செய்தது மக்கள் விடுதலை முன்னணியாகும்.

# வவுனியா மக்களும் பாஸ் நடைமுறையும்

மணியம்



ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு செல்லும் போது விசா பெறுவது வழமை. ஆனால் இலங்கையில் வவுனியா வாழ் மக்கள் வெளி இடங்களுக்கு பிரயாணம் செய்ய வேண்டுமாயின் பாஸ் எடுக்க வேண்டும். ஒரு நாட்டின் பிரஜை அந்தநாட்டின் எந்தப் பகுதியில் தான் என்று முடிவெடுக்கும் உரிமை அவனுக்குண்டு. இது அடிப்படை மனித உரிமைகளிலொன்று வவுனியாவிற்கு வெளிமாவட்டத்திலிருந்து வருபவர்கள் அனுமதிப்பத்திரம் பெறவேண்டும். இல்லையேல் அவர் வவுனியாவிற்குள் வர முடியாது புகை வண்டியில் வருபவர்கள் வவுனியா புகையிரத நிலையத்திலும் பஸ்சில் வருபவர்கள் ஈரப் பெரிய குளத்திலும் அனுமதி சீட்டினை பெற வேண்டும். அனுமதிச் சீட்டை பெறுபவர்கள் தேசிய அடையாள அட்டையும், பொலிஸ் பதிவினையும் காட்ட வேண்டும் இல்லையேல் அவர் கதி அதோ கதிதான்.

வவுனியாவிற்குள் பிரவேசிக்க, தங்கியிருக்க, வவுனியாவை விட்டு வெளியேற இவ் அனுமதி பத்திரம் தேவை. இந்த அனுமதி பத்திரங்கள், சீட்டுக்கள் இருபது இடங்களில் வழங்கப்படுகின்றது.

இவ் அனுமதி பத்திரங்கள் கீழ் காணும் முறைப்படி வழங்கப்படுகின்றன.

வவுனியாவில் நடைமுறையில் உள்ள அனுமதிப்பத்திரங்கள்.

1. ஒரு நாள் அனுமதிப்பத்திரம்.
2. கடதாசி அனுமதிப்பத்திரம்.
3. ஒரு மாத அட்டை அனுமதிப்பத்திரம்.
4. மூன்று மாத அட்டை அனுமதிப்ப த்திரம்
5. மூன்று மாத திறந்த அனுமதிப்பத்திரம்.
6. ஒரு வருட அனுமதிப்பத்திரம்.
7. ஒரு வருட திறந்த அனுமதிப்பத்திரம்.
8. அவசர சந்தர்ப்பங்களில் பிரயாணம் செய்வதற்காக வழங்கப்படும் தற்காலிக அனுமதிப்பத்திரம்.
9. முதியோர் அனுமதிப்பத்திரம்.
10. பிரயாணம் செய்வதற்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரம்
11. முகாமை விட்டு வெளியில் இருப்பதற்கு வழங்கப்படும் உத்தரவுப் பத்திரம்.
12. முகாம்களில் பாடசாலை பிள்ளைகளிற்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரம்.
13. 14, நாட்கள் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம்.
14. நலன்புரி நிலையங்களுக்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரம்.
15. நிரந்தர அனுமதிப்பத்திரம் (இது இராணுவத்தினர் ஊடாக வழங்கப்படும்).

இராணுவமும் பொலிசும் இவ் அனுமதிப் பத்திரங்களை வழங்குகின்றன. அனுமதிப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் பின்வரும் நடைமுறையினை பின்பற்ற வேண்டும். முதலில் விண்ணப்பப்படிவத்தினை பெற்று நிரப்பி கிராமசேவையாளரின் சிபாரிசுக்கு பின்னர் பிரதேச செயலாளரின் கையொப்பத்துடன் "பொலிஸ் பொது மக்கள் உறவு பிரிவில்" ஒப்படைக்க வேண்டும்.

இதன் பின்பு விண்ணப்பதாரியின் விபரம் சிறு குற்றத்தடுப்பு பிரிவிற்கு அனுப்பப்படும். இத்தோடு இவ் விடயம் முற்றுப் பெறுவதில்லை. இன்னும் பல இடங்களுக்கு அலைய வேண்டும் பெரும் சிரமத்தின் மத்தியில் எத்தனையோ நாட்கள் அலைந்து இவ் அனுமதிப்பத்திரத்தைபெற வேண்டும். வவுனியாவை பொறுத்தமட்டில் விவசாயிகளும் நாட்கூலிகளுமே அதிகமாக இருக்கின்றார்கள். இவர்கள் அனுமதிப்பத்திரங்களைப் பெறவோ அல்லது புதுப்பிக்கவோ வாரக்கணக்காகின்றது. அதனால் இவர்களது வருமானம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. வசதியுள்ளவர்கள் பல வழிகளில் இவ் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்கின்றனர். நடுத்தர வர்க்கத்தினரதும், ஏழை மக்களுடைய நிலைமையும் பெரும் கஷ்டமாக இருக்கின்றது. இதனை யார் கவனிப்பது, அன்றாடம் அல்லலுறும் தமிழன் வாழ்வில் இதுவும் ஒரு பழக்கப்பட்ட விடயமாகி விட்டது.

இந்த அனுமதிப்பத்திரம் வவுனியாவில் பல நடைமுறைகளைக் கொண்டுள்ளது. திறந்த அனுமதிப் பத்திரம், பிரயாண அனுமதிப் பத்திரம், நிரந்தர அனுமதிப்பத்திரம் என பல்வகைப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் இங்குள்ளன. இவற்றை பெறுவதற்கு மக்கள் பெரும் சிரமப்படுவதோடு சில வேளைகளில் பணத்தையும் செலவு செய்ய வேண்டியுள்ளது. அனுமதிப்பத்திரம் இல்லாத காரணத்தால் பிணங்களைக்கூட வன்னிப் பிரதேசத்திற்கு கொண்டு போக முடியாத நிலை ஏற்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. விடுதலைப் புலிகளைக் காரணம் காட்டி இந்நடைமுறைகள் பின்பற்றப்பட்டாலும் படைத்தரப்பின் நோக்கம் சரியாக நிறைவேறுகின்றதா?

இனி அனுமதிப்பத்திரத்தின் வரலாறு பற்றிப் பார்ப்போம்.

1992ம் ஆண்டுக்கு பிற்பகுதியில் தான் முதன் முதலாக அனுமதிப்பத்திரம்அறிமுகப்படுத்தப் பட்டது. இது யாழ்பாணத்தில் இருந்து வவுனியாவுக்கு வருபவர்களுக்கு ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில் இருந்த போது அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தஅனுமதிப்பத்திரம் படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று வவுனியாவுக்குள் சுமார் 15 அனுமதிப்பத்திரங்கள் நடைமுறையில் உள்ளள.

வவுனியாவில் நடைமுறையில் உள்ள அனுமதிப்பத்திரங்களைப் பற்றி பலரிடம் கேட்டோம் அவர்களில் ஒரு சிலரின் கருத்து.

**மனிதஉரிமைகள் ஆணைக்குழு வவுனியா மாவட்ட பிரதிநிதி எஸ். சிறீதரன்-**

'வவுனியாவிற்கு பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட பின்னர் வவுனியாவுக்கு சென்ற போது தான் இவ்வாறு இருப்பதை நான் தெரிந்து கொண்டேன். சிலருக்கு 3 மாத திறந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு இருந்தது. இதனை புதுப்பிப்பதற்கு சென்ற போது வவுனியாவிற்கு மட்டும் செல்லுபடியாகும். அனுமதிப்பத்திரத்தினை, அதிகாரி வழங்கியுள்ளார். இதன் பின்னர் திரு. சிறிதரன் அவர்கள் அந்த அனுமதிப்பத்திரத்தினை எடுத்துக் கொண்டு செல்லாமல் அதனை அவரிடம் கொடுத்து விட்டு சென்றார். பின்னர் தனது காரியாலயத்திற்கு வந்து உயர் மட்டங்களுக்கு கடிதம் மூல அறிவித்தார். மேல் இடத்து உத்தரவுக்கமைய இவருக்கு நிரந்தர அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

**2.அரச நிறுவனம் ஒன்றில் வேலை செய்யும் ஒருவர்.**

இவர் கொழும்பை வசிப்பிடமாக கொண்டவர். இவர் திறந்த அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பித்த போது இவர் ஏன் கொழும்புக்கு செல்ல வேண்டும் என்று கேள்வி கேட்டார்கள். கொழும்பில் தனது பெற்றோர்கள் இருப்பதாகவும் அவர்களைப் பார்க்க தான் கொழும்பு செல்ல வேண்டும் என்றபோது, அப்படியானால் பிரயாண அனுமதிப்பத்திரத்தினை எடுத்துக் கொண்டு வருமாறு கூறப்பட்டது.

பிரயாண அனுமதிப்பத்திரத்தில் உள்ள. இடர்பாடுகள் காரணமாக இவர் தற்போது ஒரு நாள் அனுமதிப் பத்திரத்துடன் கடந்த ஒரு வருடமாக வாழ்வதாக தெரிவித்தார். தான் இப்போது ஒவ்வொரு கிழமையும் வவுனியாவிற்கு வெளியில் வந்து தான் செல்ல வேண்டும் என்பதனையும் கூறினார்.

**3. வவுனியா வாசியாகிய திரு.எட்வட் என்பவரிடம் இது பற்றிக் கேட்டபோது.**

தனக்கு வவுனியாவுக்குள் மட்டும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இருப்பதாகவும் இதனால்தான் ஒரு அவசர தேவைக்கு வெளிமாவட்டங்களுக்கு செல்ல முடியாமல் இருப்பதாகவும் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் வவுனியாவுக்குள் "காசு" இல்லாமலும் திரியலாம். ஆனால் "பாஸ்" இல்லாமல் திரிய முடியாது என்றார்.

இவ்வாறான அடக்கு முறைகள் தொடர்ந்த வண்ணமும் உள்ளது. இதற்கு பரிகாரம் செய்ய யாராலும் முடியவில்லை. அண்மையில் மட்டக்களப்பு பகுதியிலும் அனுமதிப்பத்திரத்தினை அறிமுகப் படுத்த முயற்சிகள் செய்த போது அனைவரும் ஒருமித்து குரல் கொடுத்து இதனை நிறுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

(அரசிற்கு பலவழிகளில் துணைபோகும் வவுனியா மாவட்ட பாராளுமன்ற பிரதிநிதிகள் இதனை சற்று கவனிப்பார்களா?.......... தேர்தல் வருகிறது இதனால் சில வேளைகளில் பிரசாரத்திற்கு இதனை பயன்படுத்துவார்கள். மக்கள் கவனம்!

# புதிய நூலகம்

## (நூற்பெயர்க் கோவை)

புதிய நூலகம் என்ற பெயரில் கடந்த10 ஆண்டுகளாக (1990 முதல் 1999 வரை) வெளிவந்த இலங்கை எழுத்தாளர்களின் நூல்களைப் பற்றிய நூற்பெயர்க்கோவை ஒன்றினை வெளியிடும் முயற்சியில் நான் ஈடுபட்டுள்ளேன்.

புதிய நூலகம் என்ற இந்த நூற்பெயர்க்கோவையில் வடக்கு, கிழக்கு, மலையகம், தென்னிலங்கை என இலங்கையின் பல பிரதேசங்களில் வெளியிடுகின்ற நூல்களைப் பற்றிய விவரங்கள் மாத்திரமின்றி புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கை எழுத்தாளர்களின் நூல்களைப் பற்றிய விவரங்களை உள்ளடக்கியதாகவும் இந்நூல் வெளிவரவேண்டும் என்பதே என் அவாவாகும்.

புதிய நூலகம் என்ற இந்த நூற் பெயர்க்கோவையில்,

1. நூலாசிரியர்
2. நூலின் பெயர்
3. வெளியிடப்பட்ட இடம்
4. வெளியீட்டாளர்
5. பதிப்பித்த ஆண்டு
6. பக்கங்கள்
7. விலை

போன்ற விவரங்கள் இடம்பெறுவதுடன் நூலின் முன்னுரை, அணிந்துரை, பதிப்புரை ஆகியவற்றில் இடம்பெற்ற மிக முக்கியமான நூலின் உள்ளடக்கம் பற்றிய குறிப்பும் உள்ளது.


எனவே நூலாசிரியர்களோ அல்லது வெளியீட்டாளர்களோ நூலின் பிரதியொன்றினை

எமது முகவரிக்கு ஒக்டோபர் 25ம் (25-10-2000) திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம். நூற்பிரதி கிடைத்ததும் அனுப்பி வைத்தவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும்.

இதுவரை புதிய நூலகம் நூற்பெயர்க்கோவைக்காக இலங்கை எழுத்தாளர்களின் 425 நூல்களை இது வரை திரட்டி விட்டேன். புதிய நூலகத்தில் இடம் பெற்ற நூல்களை இலக்கிய ஆர்வலர்களின் பார்வைக்காக புத்தக திருவிழா என்ற பெயரில் "புதிய நூலகம்" நூல் வெளியீட்டு விழாவின் பொழுது கண்காட்சி ஒன்றினையும் ஏற்பாடு செய்யவுள்ளேன் என்பதையும் இங்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.


அந்தனி ஜீவா.

# நூல் அறிமுகம்





நூல் –
**என் வசந்தம் வராமலே போய்விட்டதே!**
ஆசிரியர் – **அஸ்வகோஸ்**
விலை – **ரூபா 20.00**
வெளியிட்டோர் –
**மணிமேகலை பிரசுரம், சென்னை – 17**

இக்கவிதைக் தொகுப்பு, ஈழத்துக் களநிலைமைகளை ஓரளவிற்கேனும் அறிந்த வாசகர்களுக்கு உதவும் பொருட்டு போதியளவு குறிப்புகளுடன் மணிமேகலைப் பிரசுரத்தாரால் தமிழகத்தில் வெளியிடப்படுகின்றது.




நூல் –
**இலங்கை தமிழ் இலக்கிய வரலாறு**
தொகுப்பு– **சாந்தையூரான்.**
விலை – **ரூபா 70.00**

வெளியீடு –
**Bright Bood Center,**
**s-27, 1st Floor, P.O. Box 162,**
**Colombo Central Supermarket Complex,**
**Colombo-11. Phone :434770.**




நூல் –
**90 நாட்களில் பேச்சு சிங்களம்**
ஆசிரியர் –
**பொன் சக்திவேல்**
விலை – **ரூபா. 75.00**

வெளியீடு –
**Bright Book Center**
**s-27, 1st Floor, P.O. Box 162,**
**Colombo Central Supermarket Complex,**
**Colombo-11. Phone :434770.**



நூல் –
**அச்சாக் குட்டி**
**சிறுவர்களுக்கான நூல்**
ஆசிரியர்
**வீணைவேந்தன்.**
விலை – **ரூபா25.00**

வெளியீடு –
**ஈழத்து இலக்கியச் சோலை,21, ஔவையார்வீதி, திருகோணமலை.**

# கிழக்கில் தொடரும் படையினரின் அத்துமீறல்கள்

கடந்த வாரம் மொறக்கொட்டாஞ்சேனை ஆற்றங்கரையருகே நடந்த கொலை மட்டக்களப்பு வாழ் தமிழ் மக்களிடையே அதிர்ச்சி அலையொன்றை ஏற்படுத்தியுள்ளது. புலிகளின் தாக்குதலுக்கு பதிலடியாக நடாத்தப்பட்டதாகக் சொல்லப்படும் இத்தாக்குதலில் கழுத்து வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டவர் சித்தாண்டி முருகன் கோயில் வீதியைச் சேர்ந்த அ. சாந்திகுமார் என்பவராவார். திருமணம் செய்து நான்கு மாதங்களே கடந்த நிலையில் இவர் அநியாயமாக உயிரிழந்துள்ளார்.

சித்தாண்டியில் சம்பவதினம் (09.08.2000) பகல் 11 மணியளவில் வீதிரோந்தில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் நடாத்தினர். தாக்குதலில் ஈடுபட்ட புலி உறுப்பினர்கள் கணப்பொழுதில் ஓடி மறைந்துவிட்டனர். இத்தாக்குதலில் இரண்டு படைவீரர்கள் காயமடைந்தனர். இவர்கள் பாதுகாப்பாக வாழைச்சேனை வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்த பின்னரேயே படையினர் பதில் தாக்குதலை ஆரம்பித்ததாக கிராமவாசிகள் தெரிவித்தனர்.

இத்தாக்குதலின் போது கள் கொள்கலன்களுடன் சைக்கிளில் வந்த சீவல், தொழிலாளி ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இறந்தார். மற்றவர் கழுத்து வெட்டப்பட்டு இறந்தார்.

சபா என அழைக்கப்படும் தமிழர் ஒருவர் இம்முகாமில் இருந்து செய்த அட்டகாசங்கள் வார்த்தைகளில் அடங்காதவை. இராணுவத்துடன் இணைந்து புலி வேட்டை என்ற போர்வையில் இவர் மேற்கொண்ட செயற்பாடுகளால் பல அப்பாவிகள் பணத்தை மட்டுமல்ல உயிர்களையும் இழந்துள்ளனர். வாழைச்சேனையைச் சேர்ந்த தர்மலிங்கம் எனும் கிராம சேவை உத்தியோகத்தரும் அவருடன் பயணம் செய்த அவரின் நண்பரும் மொறக்கொட்டாஞ்சேனையில் வைத்து காணாமல் போனமைக்கு "சபா" வே சூத்திர தாரி எனக் கருதப்பட்டது. இச்சம்பவம் மனித உரிமைக் குழுக்களின் ஆர்வத்தை வெகுவாகக் கிளறியமையால் இவரது நடவடிக்கைகள் தற்போது இல்லை.

பட்டலந்தை சித்திரவதை முகாம் தொடர்பாக நீதியான விசாரணைகளை நடாத்தி உண்மையை வெளிக் கொணரத் துடிக்கும் சந்திரிகா அரசு சித்தாண்டியில் நடைபெற்ற கொலைகள் தொடர்பாகவும் தனது கவனத்தைத் திருப்பினால் என்ன? இந்த நாட்டில் தமிழர்கள் கௌரவமாக வாழத்தான் உரிமை இல்லையென்றால் கௌரவமாக சாகக்கூட உரிமை இல்லையா?

வழக்கம் போலவே புலிகளின் தாக்குதலில் சிவிலியன் ஒருவர் பலியானதாக தெரிவித்த இராணுவத்தினர் நல்லவேளையாக கழுத்து வெட்டப்பட்டவர் யாரால் கொல்லப்பட்டார் எனத் தெரியாது எனக் கூறியுள்ளனர். விடுதலைப் புலிகள்தான் அவரது கழுத்தை வெட்டினார்கள் என ஏனோ அவர்கள் கூறவில்லை.

ஆனால் இந்தச் சம்பவம் தொடர்பாக ஊரில் பல்வேறு கதைகள் உலவுகின்றன. ஒரு சிலருக்கு கொலை செய்தவர் யார் என்பது கூட சாடைமாடையாகத் தெரிந்திருக்கிறது. எவரும் வாயைத் திறக்கப் பயப்படுகின்றனர். உயிருக்கு உத்தரவாதம் அற்ற நிலையில் வாழும் மக்களிடம் உண்மையை வெளியில் சொல்லுமாறு யார்தான் கேட்பது?

சித்தாண்டி இராணுவ முகாம் படைவீரர்களின் மனிதஉரிமை மீறல்கள். தொடர்பாக, செய்திகள் வெளிவருவது இது முதல் தடவையல்ல. முகாமின் பொறுப்பதிகாரியகக் கடமையாற்றிய ஒருவரே முகாமின் அயல்வீட்டில் யுவதியொருவரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவர் இறக்கக் காரணமாய் அமைந்தமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. துப்பாக்கியை பரிசோதித்துப் பார்த்த வேளையிலேயே இது நடைபெற்றதாக முகாம் பொறுப்பதிகாரி தெரிவித்திருந்தார். (இது தொடர்பான வழக்கு தற்போது நீதிமன்றில் உள்ளது) ○

## புதிய சமுர்த்தி உத்தியோகத்தர்கள்

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தார்கள் 4 ஆயிரம் பேரை புதிதாகத் திரட்டவும் இவர்களின் வேதனத்தை 2 ஆயிரம் ரூபாவினால் அதிகரிக்கவும் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இதற்கமைய சமுர்த்தி உத்தியோகத்தரின் வேதனம் 1170 ரூபாவிலிருந்து 2 ஆயிரம் ரூபாவாக இம்மாதம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஒக்டோபர் மாதத்திற்கு முன்னர் 4 ஆயிரம் பேரை புதிதாக இணைத்துக் கொள்வதென சமுர்த்தி இளைஞர் விவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வாஜ்பாய் வாழ்த்து

இலங்கையின் புதிய பிரதமரக பதவியேற்றுள்ள இரட்ணசிறி விக்ரம நாயக்காவிற்கு இந்தியப் பிரதமர் வாஜ்பாய் வாழ்த்து தெரிவித்துள்ளார். புதிய பிரதமராக பதவியேற்றவுடனேயே தனது இனவாத பௌத்த சிங்கள மேலாதிக்க நிலையை வெளிக்காட்டி வரும் கடும் போக்காளர் என்பது வாஜ்பாய்க்கு இன்னமுமா? தெரியவில்லை

## அதிகாரத்துவமுடைய பெண் பித்து

வாரியபொலை பிரதேச சபைத் தலைவர் ஆனந்த ஜயலத்தின் பெண் பித்து விவகாரம் அண்மையில் வெளியே வந்துள்ளது.

வாரியப்பொலை நகரில் மணிக்கூடு திருத்தும் ஒருவரின் 19 வயது நிரம்பிய அழகிய மனைவியுடன் இவருக்கு கள்ளத் தொடர்பு காணப்படுகிறது. அண்மையில் இவர் அப் பெண்ணுடன் பிரதேச சபை அலுவலகத்தில் இருக்கையில் அப் பெண்ணின் சகோதரி அங்கு வந்து பிரதேச சபைத் தலைவரை காரசாரமான வார்த்தைகளால் சாடியுள்ளார். இப்படி பல பெண்களுடன் தொடர்பு உடையவர் இந்த பிரதேச சபைத்தலைவராவார்.

வாரியப்பொலையின் வடமேல் மாகாண முதல்வர் எஸ்.பி.நாவின்னவின் அனைத்து வன்முறைகளுக்கும் இவர் உடந்தையாக இருந்து வருகின்றார். இவரை தெரிந்தவர்கள் நாவின்னவின் மற்றொரு கையாளான கசிப்பு லால் மூலம் தாக்கப்படுவதாகவும் அறியக் கிடைத்துள்ளது.

## 10 கோடி ரூபா நஷ்ட ஈடுகோருகிறார்.

லேக்ஹவுஸ் நிறுவனத்திடமும் இலங்கை ரூபாவாஹினி ஒளிபரப்பு கூட்டுத்தாபனத்திடமும் மத்திய கொழும்பு ஐ.தே.க. அமைப்பாளரான மொகமட் மஹருப் நட்ட ஈடு கோரியுள்ளார். மஹரூப் நாட்டை விட்டு தப்பியோடி விட்டார் என கடந்த 14ம் திகதி ரூபவாஹினி செய்திச் சேவையில் அறிவிக்கப்பட்டது. 15ம் திகதி லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஆங்கில ஏடான "டெயிலிநியுஸ்" பத்திரிகையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நிதி வழங்கும் மஹரூப் நாட்டை விட்டு ஓடிவிட்டார் என வெளியிடப்பட்ட செய்தியால் தனக்கு களங்கம் கற்பிக்க முற்பட்டதாக கூறியே 10 இலட்சம் ரூபா நஷ்ட ஈடு கோரியுள்ளார்.

## அஸ்கிரிய பீடமும் எதிர்ப்பு

நாட்டிற்கும் சிங்கள இனத்திற்கும் எதிரான புதிய அரசியல் சட்டமூலம் மீண்டும் உள்ளடக்கப்படுமேயானால் பௌத்த பிக்குகள் அனைவரும் எதிர்த்து நிற்போம் என உடுகம ஸ்ரீரத்னபால புத்தரக்பித அஸ்கிரி தேரோ ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் அழைப்பிற்கிணங்க கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போதே இவ்வாறு தமது எதிர்ப்பினை தொவித்துள்ளார்.

## நாட்டு நடப்பும் நாலுபேர் கருத்தும்

### ஊரோடி

அழிப்பதே என் பணியென தனக்குள் அடங்கிக்கிடந்த ஆவேசத்தை புதிதாக பதவிகிடைத்து முதல்நாளிலேயே வெளிக்காட்டியிருக்கிறார் ரட்ணமான நாயக்கா அவரின் பேச்சு மூச்செல்லாம் இனவாதத்தை கக்கு கக்கென்று கக்குகிறது. எல்லாம் வாக்கு வேட்டையாடும் விளையாட்டுத்தானாம்.

முல்லைத்தீவில் புதிதாக வந்துள்ள வான் பறவையொன்று பள்ளிக்கூடமொன்றை எரித்து சாம்பலாக்கியுள்ளதாம். ஹிட்லரே செய்யத்தவறிய வேலைகளை கிளினாக செய்து காட்டுகிறார்கள்.

கொல்லாமையை வலியுறுத்தும் கௌதமரின் பஞ்ஞசீல கொள்கைக்கு புதுவிளக்கமொன்றை புதிதாய் அதிகாரத்தை கைப்பற்றியவர் கொடுத்திருக்கிறார் களத்தில் நிற்பவர்களை கொல்வது தவறில்லை...

கிழக்கின் தனித்துவக்கட்சியில் பிரதியமைச்சராக இருந்த வன்னியின் அபூபக்கரானவர் நீக்கப்பட்டது பற்றி யாருக்குமே கவலையில்லையாம் அவருக்கும் தானாம். சேர்க்க வேண்டியதையெல்லாம் சேர்த்த பெருமையில் இருக்கிறாராம்.

மலையகத்து பழம்பெரும் கட்சியிலிருந்து நிதி மோசடி எனக்காரணம் கூறி வெளியே நிற்கும் 5 அதிருப்தியாளர்களையும் தேர்தலுக்கு முன்னர் எப்படியும் வெளியே போடுவதென உள்ளே தீர்மானிக்கப்பட்டுள்ளதாம். அவர்களும் யார் பக்கம் சாய்ந்து சீற்கேட்பதென்ற அவசரத்தில்தானாம் உள்ளார்களாம்.

சுமைதூக்கிகள் மீது பழிபோடவே அண்மையில் நடந்தபத்திரிகையாளர் மாநாடு நடத்தப்பட்டதாம் இருபக்கமும் தவறுகள் இருக்கலாம் பேசித்தீர்ப்பதைவிடுத்து மோதித்தீர்ப்பதால் யாருக்கு லாபம்?

சிங்கள ஆங்கில ஊடகவியலாளர்கள் புலி இயக்கத்தவர்களை சந்தித்து பேசினால் அது செய்தி சேகரிப்பு, தமிழ் ஊடகவியலாளர் சந்தித்தால் அது புலிகளுக்கு தகவல் வழங்குகின்றார் என்று கைது செய்யப்படும் நிலையை தெளிவாக சொல்லியிருக்கிறார். பாராளுமன்றத்தில் சித்தார்த்தர் இன்னுமொரு உண்மையும் சொல்லியிருக்கலாமல்லவா தமிழ்ப்பத்திரிகையாளர்களை தமிழ் இயக்கங்களே எரிப்போம் சுடுவோம் கடத்துவோமென்பதையும்.... 0

பெயர் : கௌசல்யா

பேரினவாதிகளுக்கு : பெண் புலி

வயது : கனவுகளில் மிதக்கும் வயதல்ல

அப்பா, அம்மா : முகம் பார்த்ததில்லை

கணவன் : விசாரணையின்றி சிறையில்

குழந்தைகள் : உயிரோடு இல்லை

அதிர்ச்சி : பலாத்காரம் செய்யப்பட்டது

பேரதிர்ச்சி : பெண் புலி என்று குற்றம் சாட்டப்பட்டது

சிறையில் கிடைத்தது : இளமையில் முதுமை


பழைய தொழில் : விவசாயம்

இன்றைய தொழில் : புற்று நோயுடன் போராடுவது

ஏங்குவது : கணவனின் விடுதலைக்காக

காத்திருப்பது : கடைசி யாத்திரையை எதிர்பார்த்து.

— கௌதமன்



# அவன் விதி



மிகயீல் ஷோலகவ்

தொடர் 8

"அவர்கள் எல்லாரும் என்னைக் கடந்து சென்று விட்டார்கள் என்று தோன்றியது. தலையை நிமிர்த்தினேன். எனக்கு அப்பால் நூறு மீட்டர் தொலைவில் ஆறு எந்திரத் துப்பாக்கி வீரர்கள் விறைப்பாக நடந்து வந்து கொண்டிருந்தார்கள். நான் பார்த்ததும் ஆறு பேரும் சாலையை விட்டுத் திரும்பி ஒரு பேச்சுப் பேசாமல் நேரே என்னை நோக்கி வந்தார்கள். "ஆயிற்று, முடிவு காலம் வந்துவிட்டது" என்று எண்ணினேன். ஆகவே எழுந்து உட்கார்ந்து கொண்டேன். கிடந்த கிடையில் இறக்க நான் விரும்பவில்லை- பிறகு எழுந்து நின்றேன். அவர்களில் ஒருவன் என் இடத்திருந்து அப்பால் சில தாவடிகள் பின்னே சென்றான். தோளை விட்டுத் துப்பாக்கியைச் சடக்கென்று எடுத்தான். மனிதனுடைய மனம் இருக்கிறதே, இது ரொம்ப விசித்திரமானது. அந்தக் கணத்தில் நான் கொஞ்சங்கூட கலவரம் அடையவில்லை. என் நெஞ்சில் பெயருக்குக் கூட நடுக்கம் தோன்றவில்லை. அசையாமல் அவனை உறுத்துப் பார்த்த படியே, "படாரென்று ஒரு சிறு வெடி அத்தோடு பாடு எல்லாம் தீர்ந்துவிடும். எங்கே குறிவைப்பானோ? தலையிலா அல்லது மார்பிலா?" என்று எண்ணமிட்டேன். உடம்பின் எந்தப் பகுதியில் அவன் குண்டு பாய்ந்தால் எனக்கென்ன? அது ஏதோ பிரமாத விஷயம் போல இப்படிச் சிந்தித்தேன்.

"அவன் ஓர் இளைஞன். நல்ல கட்டமைந்த மேனி; கறுப்புத் தலைமயிர். ஆனால் உதடுகள் மட்டும் நூலிழை போன்று மெல்லியவை. அவனது கண்களில் குரூரமான ஒளி பளிச்சிட்டது. "இந்த ஆள் என்னை சுட்டுத் தள்ளுவதற்குத் துளிக்கூடத் தயங்க மாட்டான்" என்று எண்ணினேன். நான் எண்ணியபடியே அவன் துப்பாக்கியைத்தூக்கிப் பிடித்தான். அவனது கண்களை நேரே உறுத்துப் பார்த்தேன். ஒன்றுமே பேசவில்லை. ஆனால் அவனை விட வயதானவனான இன்னொருவன், கார்ப்போரலோ யாரோ ஓர் அதிகாரி, ஏதோ இரைந்து சொன்னான். பிறகு வாலிபனை ஒரு புறம் தள்ளி விட்டு என்னிடம் வந்தான். தன்னுடைய சொந்த மொழியில் ஏதோ உளறிக்கொண்டே எனது முழங்கையை மடக்கினான். எனது தசைநார்களைத் தடவி யழுத்திப் பார்த்துக் கொண்டான். அதைப் பார்த்ததுமே "ஓ-ஓ-ஓ!" என்று கூவி, சூரியன் மறைந்து கொண்டிருந்த பக்கமாகச் சாலை நெடுகச் சுட்டிக் காட்டினான். அந்தப் புறமாகப் போடா, தடிமாடு, எங்கள் நாட்டுக்காக உழையடா" என்று சொல்வது போன்றிருந்தது அவன் குறிப்பு. மோசமான பேர்வழி அந்த வேசை மகன்!

"ஆனால், அந்தக் கறுப்புத் தலையன் இருந்தானே, அவன் எனது காலணிகளின் மேல் கண் போட்டு விட்டான். அவை உறுதியான நல்ல ஜோடியாகத் தோன்றின. ஆகையால் "அவற்றைக் கழற்று என்று கைகளால் சைகை செய்தான். தரையில் உட்கார்ந்து அவற்றைக் கழற்றி அவனிடம் நீட்டினேன். அந்தப் பயல் என் கைகளிலிருந்து வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டான். அப்புறம் என்ன செய்தேன் தெரியுமா? எனது பாதத்தில் சுற்றியிருந்த பட்டைத் துணிகளையும் பிரித்தெடுத்து அவனை நிமிர்ந்து பார்த்தவாறே, அவனிடம் நீட்டினேன். ஐயாவுக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்து விட்டது போலிருக்கிறது. கூப்பாடு போட்டுத் திட்டி நொறுக்கினான். மீண்டும் துப்பாக்கியை உயர்த்தினான், சுட்டு விடுபவன் போல. மற்றவர்கள் எல்லாம் விழுந்து விழுந்து சிரித்தார்கள். அப்படியே அவர்கள் அப்பால் சென்று விட்டார்கள். கறுப்புத் தலையன் மட்டும் சாலையை அடைவதற்குள் திரும்பித் திரும்பி மூன்று முறை என்னை உருட்டி விழித்தான். கோபத்தினால் அவன் கண்கள் ஓநாய்க் குட்டியின் கண்களைப் போலப் பொறி பறந்தன. யாராவது பார்த்தால் ஏதோ நான் தான் அவனுடைய காலணிகளைப் பறித்துக் கொண்டதாக எண்ணுவார்கள். அப்படியிருந்தது அவன் பார்வை.

"நல்லது, அண்ணே, வேறு வழியே இல்லை. என்ன செய்வது? சாலைக்குச் சென்றேன். வரோனெஷ் பக்கத்தில் வழங்குகிற நீளமான, காரசாரமான வசவுகளைப் பொழிந்து தள்ளினேன். பிறகு மேற்குப் புறம் நோக்கி நடை போட்டேன்- ஆம், கைதியாகத்தான்! ஆனால் அந்நேரத்தில் நன்றாக நடக்க எனக்கு வலுவில்லை. மணிக்கு ஒரு கிலோமீட்டர் தான் என்னால் நடக்க முடிந்தது. அதற்கு மேல் முடியவில்லை. குடித்து மயங்குபவன் போலத் தள்ளாடினேன். நேரே போவதற்கு முயல்வேன். ஆனால் எதோ ஒன்று சாலையின் ஒரு பக்கத்திலிருந்து மற்றப் புறத்திற்கு என்னை அப்படியே தள்ளிவிடும். சற்றுத் தொலைவு சென்றேன். பிறகு போர்க் கைதிகளின் அணிவரிசை ஒன்று என்னுடன் சேர்ந்து கொண்டது. எல்லாக் கைதிகளும் எனது டிவிஷனைச் சேர்ந்தவர்கள் தாம். பத்து ஜெர்மனிய எந்திரத் துப்பாக்கி வீரர் அவர்களுக்குக் காவலாக வந்தார்கள். அவ்வரிசையின் முன்னே சென்ற ஒரு வீரன் என் பக்கம் வந்து, ஒன்றும் பேசாமல் சட்டென்று தன் துப்பாக்கிக் கட்டையால் என் தலையில் மடாரென்று அடித்தான். நான் கீழே விழுந்திருப்பேனேயானால், ஒரு வெடியிலே தீர்த்து என்னை அங்கேயே கிடத்தி விட்டுப் போயிருப்பான். ஆனால், நான் சாய்ந்ததும் நமது தோழர்கள் என்னை விழாதபடி தாங்கிப் பிடித்து, வரிசைக்கு நடுவில் திணித்து வைத்துக்கொண்டார்கள். கொஞ்ச நேரம் வரைக்கும் என்னைப் பாதி தூக்கிக் கொண்டே நடந்தனர். எனக்கு நினைவு தெளிந்ததும் ஒருவன் என் காதோடு "அட அப்பனே, எப்பாடுபட்டாவது! கீழே விழாமல் சமாளித்துக் கொள். உடம்பிலே கொஞ்ச நஞ்ச வலு இருக்கும் வரை நடந்து கொண்டே இரு; இல்லை யென்றால் அவர்கள் உன்னைக் கொன்று தீர்த்து விடுவார்கள்" என்றான். என் உடம்பிலோ கொஞ்சம் கூட வலுவில்லை. இருந்தாலும் எப்படியோ சமாளித்துப் போய்க் கொண்டிருந்தேன்.

"சூரியன் மறைந்ததோ இல்லையோ, ஜெர்மனியர் காவலை வலுப்படுத்தினார்கள். இன்னொரு இருபது எந்திரத் துப்பாக்கிக்காரர்களை ஒரு லாரியில் கொணர்ந்தார்கள். முன்னிலும் விரைவாக நடை போடும்படி எங்களை விரட்டினர்." படுகாயம் பட்டவர்களால் மற்றவர்களைப் போல வேகமாக நடக்க முடியவில்லை. ஜெர்மன்காரர்கள் அவர்களைச் சாலையிலேயே சுட்டு வீழ்த்தினார்கள். இரண்டு பேர் இடையில் தப்பியோட முயன்றார்கள். ஆனால் வெட்ட வெளியில் நிலவு வீசும் இரவில் ஒரு மைலுக்கு அப்பாலிருப்பவனைக் கூட நன்றாகப் பார்க்க முடியும் என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். அப்புறம் கேட்பானேன்? அவர்களும் குண்டுகளுக்கு இரையாகி விட்டார்கள். நள்ளிரவில் ஒரு சிற்றூரை அடைந்தோம். அது பாதி எரிந்து வீழ்ந்திருந்தது. கோபுரம் தகர்ந்த ஒரு மாதாக் கோவிலுக்குள் எங்களை விரட்டியடைத்தார்கள். வைக்கோல் ஒரு துரும்புகூடப் பரப்பாத வெறுங் கல் தரையிலேயே இரவைக் கழித்தோம். ஒருவரிடமும் மேல் கோட்டு இல்லை; நாங்கள் எல்லோரும் உள் கோட்டுகள் மட்டுமே போட்டிருந்தோம். ஆகவே கீழே விரித்துப் படுக்க ஒன்றும் இல்லை. சிலரிடம் அந்த உடைகள் கூட இல்லை; வெறும் காலிலோ உள்சட்டைகள் மட்டுமே போட்டிருந்தார்கள். அவர்கள் பெரும்பாலும் ஜுனியர் ஆபீஸர்கள். சாதாரண வீரர்களுக்கும் தங்களுக்கும் வேறுபாடு தெரியக் கூடாதென்பதற்காக அவர்கள் கோட்டுகளைக் கழற்றி யெறிந்து விட்டார்கள். பீரங்கிப் படை வீரர்களிடமும் கோட்டில்லை. அவர்கள் அரையும் குறையுமாக உடை அணிந்து பீரங்கி சுடும் வேலையில் ஈடுபட்டிருந்தபோது கைதியாக்கப்பட்டார்கள்.

தொடரும்......

## மக்கள் களம்

### ஆசிரியர் பற்றாக்குறை

தமிழ்த்தாசன்,
டிக்கோயா.

இன்று மலையகம் என்றவுடன் அறிவாளிகள் அதனை ஒரு கல்வியில் பின்தள்ளப்பட்டுள்ள சமூகம் என்று வரைவிலக்கணம் கூறுகின்றனர். ஆனால் அதற்கான காரணங்கள் என்னவென்று ஆராயாமல் கருத்து கூறுபவர்களை அறிவாளிகள் என்பது சந்தேகமே. மலையக மக்கள் நாட்கூலிகளாக வேலை செய்தினும் அவர்கள் தங்களது பிள்ளைகள் படிக்க வேண்டுமென்று விரும்பி அவர்களை பாடசாலைக்கு அனுப்புகின்றனர் ஆனால் இலங்கையில் தொடரும் இன ஒடுக்கலால் அம்மாணவர்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அண்மையில் நான் கண்டி மாவட்டத்திலுள்ள டெம்பஸ்டோ தமிழ் வித்தியாலயத்திற்குச் சென்றேன். அங்கு ஆண்டு 1 முதல் 8 வரை உள்ளது. கிட்டத்தட்ட 350 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அதேவேளை ஆசிரியர்களின் எண்ணிக்கையை கேட்டால் மாரடைப்பே வந்துவிடும் போல் உங்களுக்கு தோன்றலாம். அங்கு கடமையில் ஒரு அதிபர், ஒரு ஆசிரியை ஒரு தொண்டர் ஆசிரியர் மட்டுமே கடமையாற்றுகின்றனர். இது பற்றி பலமுறை அரசியல் வாதிகளுக்கு அறிவித்தும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. குறைந்தது தொண்டர் ஆசிரியருக்காவது நிரந்தர நியமனமேனும் வழங்கி அம்மாணவர்களை நல்வழிப்படுத்தவேண்டும் என்னும் நோக்கில் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இராஜரட்ணம் அவர்களுக்கும் மத்திய மாகாண தமிழ் கல்வியமைச்சர் திரு. இராதாகிருஷ்ணன் அவர்களின் கவனத்திற்கும் இதனைக் கொண்டு வந்துள்ளேன்.

நன்றி.

**பிற்குறிப்பு**

மேற்படி தங்களது விடயம், கல்வியமைச்சர் திரு: ராதா கிருஷ்ணன் மற்றும் திரு. ராஜரட்ணம் (பா.உ) ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது இதற்கான பதில் எமக்கு கிடைத்ததும் உடன் அறிவிக்கப்படும் என்பதையும் தெரிந்துகொள்கின்றோம்.
ஆசிரியர்

### வடிகால் சீரமைப்பு

அப்துல் ரஹீம்
4ஏ, 37, அபயராஜா மாவத்தை,
இரத்தினபுரி.

கனம்,
ஆசிரியர் அவர்களுக்கு,

இரத்தினபுரி மாவட்டத்தின் அபயராஜ மாவத்தை கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் சுமார் 70 குடும்பங்களைச் சேர்ந்த நாம் மிக நீண்ட காலமாக மிகுந்த துர்நாற்றம் எடுக்கும் கழிவு நீர் வாய்க்கால் ஒன்றுக்கருகில் வசித்து வருகின்றோம். இவ்வாய்க்கால் போதிய வடிகாலமைப்பைக் கொண்டிருக்காமையாமல் அருகே வசிக்கும் மக்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இவ்வாய்க்காலை சீரமைப்பது குறித்து மாநகர மேயருக்கு பலமுறை அறிவித்தும் உரிய நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்பட வில்லை. தங்கள் பத்திரிகை மூலமாக பாதிக்கப்பட்டுள்ள எம் மக்களுக்கு தகுந்த நடவடிக்கை எடுக்க உடன் ஆவன செய்வீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

நன்றி.

**பிற்குறிப்பு**

அவசியமான மாற்று உடனடி நடவடிக்கைக்காக தங்களது மனு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எமது ஆசிரியப் பீடத்தால் முறையீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.
ஆசிரியர்.

குறுந்திரைப்படமான இப்படத்தில், ராதிகா, விக்ரம், தேவன், மற்றும் லண்டன் நண்பர்கள் சிலரும் நடித்துள்ளனர். கலாநிதி மாறன் தயாரிப்பில் கதை எழுதியவர் நடிகை ராதிகா. திரைக்கதை வசனம், டைரக்ஷன் ராதிகா - மனோபாலா. சினிமாத்துறை மீதான ஆரோக்கியமான விமர்சனத்தின் தேவை கருதி இத் திரைப்பட விமர்சனம் "எக்ஸில்" சஞ்சிகையிலிருந்து மீள் பிரசுரமாகின்றது.

## ஆதவன் சினிமா

"ஒரு இந்திய சூழலில் வளர்ந்து ஐரோப்பிய நாட்டில் வாழவேண்டிய நிலையில் உள்ள எந்தப் பெண்ணும் இப்படித்தான் நினைப்பாள், நடப்பாள் என்பதை முற்றும் முடிவாக சொல்லவரும் இப்படம், இந்தப் பெண்ணை அல்லது பெண்களை சிந்தனை வளம் அற்றவராகக் குறிக்கிறது. வளர்ந்து வரும் பெண்ணின் இயல்பான பாலியல் கேள்விகள், ஒரு தாய்க்கு தேவையே அற்ற, கவனத்துக்கே எடுக்கப்படக் கூடாததாக ஆக்கப்பட்டுள்ளது. இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலும் பெண் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நப்பாசை நீள்கிறது."



# சிறகுகள்

## திரைப்பட விமர்சனம்

வள்ளி விஸ்வநாதன் தம்பதிகள் லண்டனில் வாழும் சராசரி இந்தியர்கள். இவர்களுக்கு இரண்டு பெண்குழந்தைகள், ஐஸ்வர்யா, கோசல்யா. இதே ஊரில் மனைவியைப் பிரிந்து போனபின் தனியாய் தன் இருபிள்ளைகளை வளர்க்கும் சந்திரசேகரும் வாழ்கின்றான். இவ்விருகுடும்பத்தின் பிள்ளைகளுக் கிடையேயான நட்பு தொடர்கிறது. விஸ்வநாதன் லாவண்யாவின் 4 வருட காதலன். ஐஸ்வர்யா விபத்தாகி வைத்தியசாலையில் கிடக்கும் போது இது வெளியாகிறது. இது தெரிந்த பின்னும் வள்ளி, பிள்ளைகளுக்காக கணவனுடன் சேர்ந்து வாழ நினைக்கிறாள். அதற்கான முயற்சிகளும் மேற்கொள்கின்றாள், அவள். கணவனோ காதலியிடம் தஞ்சம் கிடக்கின்றான். வள்ளி பிள்ளைகளையும் தன்னையும் காப்பாற்றும் முயற்சியில் கோயிலில் மாக்கோலம் போடும் வேலை செய்தும், சமையல் வேலை செய்தும் வருமானம் தேடுகிறாள். இவர்களுக்கான உதவிகளை சந்திரசேகர் செய்கின்றான். வள்ளி மேல் காதல் கொள்கின்றான். இவன் மனைவி மீண்டும் இவனோடு இணைந்து வாழவிரும்பினாலும் அதனை ஏற்க மறுக்கின்றான். வள்ளியின் மேல் இவனுக்கு அனுதாபம் உண்டு. இவனின் பிள்ளைகளும் வள்ளியின் பிள்ளைகளும்கூட இதனை வரவேற்கின்றனர். விஸ்வநாதனின் வேலை போய்விடுகின்றது. லாவண்யாவின் தயவில் வாழவேண்டிய விஸ்வநாதன் அவளின் அலட்சியத்துக்கும் ஆளாகுவதால், மீண்டும் வள்ளியோடு இணைய விரும்புகிறான் பிள்ளைகளுக்காக இந்த ஒப்புதலை மேற்கொள்ளும் வள்ளிமேல் விஸ்வநாதன் கணவன் என்ற ரீதியில் பழையபடி தன் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதோடு சந்திர சேகருக்கும், வள்ளிக்கும் தொடர்பு உண்டு என்று சந்தேகப்படுகின்றான். சந்திரசேகரை வள்ளி கலியாணம் செய்து விடுவாளோ என்ற பயத்தால், தன் இளைய மகளை கோவிலுக்கு கடத்திச் சென்று மனைவியைத் தன்பிடிக்குள் கொண்டுவர நினைக்கின்றான். இதனைப் புரிந்து கொண்ட வள்ளி தந்திரமாய் அவனிடமிருந்து பிள்ளையைக் காப்பாற்றிய பின், இனிமேல் தான் தனியாய் பிள்ளைகளை வளர்க்கப் போவதாயும், தன்சிறகுகள் விரிந்து விட்டதாயும் "யார் தயவிலும் தான் இனி வாழப்போவதில்லை" என தீர்மானமாக கூறுகின்றாள். அவன் மனைவி மீண்டும் குடும்பத்துடன் வந்து இணைகின்றாள்.

இப்படம் லண்டனுக்குள்ளே கதைக்கேற்றமாதிரி தயாரிக்கப்பட்டுள்ளது. தேர்ந்த நடிகையான ராதிகா ஒரு சிறந்த இக்காலகட்டத்தின் நடிகையாக இப்படத்தில் திகழ்கிறார்.

இப்படம் முழுமையாக லண்டனில் வாழும் ஒரு இந்தியக் குடும்பத்தை சுற்றி நடக்கின்றது. ஆசிய கலாசாரத்தில் இருந்து வந்து ஐரோப்பிய நாட்டில் வாழும் போது விளையும் பிரச்சினைகள் சில கவனத்துக்கு எடுக்கப்படுகின்றன. வேகமாக வளர்ந்துவரும் சந்தைப் பொருளாதாரத்தில் தம்மைப் பொருத்திக் கொண்டிருக்கும் ஐரோப்பிய சமூகத்திடையே வாழ வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் ஆசியக்குடும்பங்களில் எவ்வாறன சிக்கல்கள் நேர்கின்றன என்கிற விடயம் கிடப்பில் போடப்பட்டு, பெண் இப்படித்தான் இருக்க வேண்டும், அவள் திருமணம் முடித்துவிட்டால், கணவன் அவளை விட்டுப்போய்விட்டால், அவளுக்கு பிள்ளைகள் இருந்தால் (அதுவும் பெண் பிள்ளைகளாயிருந்து விட்டாலோ கேட்க வேண்டாம்). அவள் தனியாய் இருக்க வேண்டியவளே. என்று இப்படத்தில் சொல்லப்படுகிறது. இந்தியர் (புகலிடக்காரரும்தான்) கட்டிக்காக்க விரும்பும் "தீர்மானிக்கப்பட்டுள்ள, வாதத்துக்கு இடமே அற்ற, பிள்ளை வளர்ப்பு" ஆகியவை இப்படத்தில் சொல்லப்படுகிற போது அது இயல்பான இந்திய சகாப்தங்களாக சொல்லிக் கொண்டிருக்கின்றது. இந்திய சினிமா. "எங்கள் கலாசாரம் இதுதான், அது வடதுருவத்தில் போய் வாழ்ந்தாலும் தான் என்ன எங்குமே காப்பற்றப்பட வேண்டும். பெண்பிள்ளைகளோடு பாடசாலைக்குக் கூடப்போதல், அவர்களின் உடை உடுத்தலைக் கண்காணிப்பது, கண்டிப்பு இவைகள் ஒரு இந்தியத் தாயின் வரையறுக்கப்பட்ட கடமைகள். இவைகள் சம்பந்தமாக அவர்கள் கேட்கும் கேள்விகட்கு "எங்கள் கலாசாரம் இதுதான், அதைப்பற்றி உனக்கு கேள்வி தேவையில்லை" இப்படி தான் கேட்டவற்றை அப்படியே கிளிப்பிள்ளை போல தன் பிள்ளைகளிடம் ஒப்புவிப்பது என்பது புகலிடத்திலும் ஒலிக்கும் பாடலேதான். (கேள்விகள் இது விடயத்தில் கேட்கக் கூடாதென்பது வழிவழியாய் வரும் ஒரு மந்திரம் இந்த அடக்கு முறைகள் பிடிவாதங்கள் ஆணாதிக்கத்தின் "பிள்ளைகளுக்காக மட்டும் வாழ்வேன்" என்கிறாள். அவளின் கருத்து மீண்டும் தன் கணவனைச் சேர்த்துக் கொண்டால் அவர்கள் வேற்றுக் கலாசாரத்தில் வீழ்ந்து விடுவார்கள். பெண்பிள்ளைகள் கெட்டுப்போய் விடுவார்கள். அதற்காகவே தானும் அவனைவிட்டு பிரிந்திருப்பது சரியானது என்கிறாள். இவள் கணவனுடன் சேர்ந்து வாழும் இந்தியப் பெண்ணும் ஐரோப்பிய வாழ்வை உள்வாங்கியவள். திருமணம் வாழ்க்கைக்குத் தேவையில்லை என்பவள். சுதந்திரமான வாழ்வை விரும்புபவள். பணத்துக்காக ஆசைப்படுபவள். ஐரோப்பிய நடை, உடை கொண்டவளாக (மேற்கு நாட்டின் வாழ்வுமுறையே இப்படித்தான் என இங்கு "சாதிக்க" முனைவது) காட்டப்படுவது வழமையான சினிமாப்பாணி. பிள்ளைகளும் இந்தக் கலாசாரத்தில் மூழ்விடுவார்கள் என்னும் வள்ளியின் பயம் இவள் மூலம் படம் பார்க்க வருபவர்களுக்கு தரப்படுகிறது. பல புகலிடத்தோரும் வரவேற்கும் "மகத்தான செய்தி".

ஒரு குழு தமக்குப் பிடிக்காத அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத விடயமொன்று இன்னொரு குழுவிடம் இருந்தால் அதை எவ்வளவு அசிங்கப்படுத்த முடியுமோ அவ்வளவு கேவலப்படுத்திப் பார்ப்பது உலகின் எல்லா இனங்களிலுமுள்ள இயல்பேதான். இப்படிச் செய்வதன் மூலம்தான் "தாங்கள் பற்றிக் கொண்டிருப்பதை உயர்த்திக் காட்டலாம்" இதனை சினிமா மூலமும் பரப்பும் ஒரு அரசியல்காலம் காலமாக நடத்தப்பட்டு வருகிறது இந்த வியாபாரம் அத்துடன் மிகச் சுலபமாக "மூளைச்சலவை" செய்யப்பட்டு தமிழ்க்கலாசாரம் தமிழ்ப் பெண்ணுக்கு தேவை என உணர்த்தப்படுவதற்கு இத்தொடர்பு சாதனம் சிறந்த உத்தியாக இருந்து வருகிறது.

இப்படத்தில் இன்னொன்றையும் கவனிக்கலாம். கணவன் கூடாதவன், குடும்பத்தைவிட்டு பிரிந்தவன் ஆனால் பெண் குடும்ப நிறுவனத்தை நிலைநாட்ட பொறுப்புடையவள்.

ஒரு கட்டத்தில்

(செக்ஸ் புத்தகங்களை மகளின் படுக்கையில் கண்டெடுத்த தாய் கொதிக்கிறாள்.)

**மகளின் கேள்வி; "அம்மா நான் இம்மாதியான புத்தங்கள் படிப்பதில் என்ன தவறு?"**

**தாய்; அது உனக்கு வேண்டாம். நீ அவைகளைப் படிக்கக் கூடாது.**

ஒரு இந்திய சூழலில் வளர்ந்து ஐரோப்பிய நாட்டில் வாழவேண்டிய நிலையில் உள்ள எந்தப் பெண்ணும் இப்படித்தான் நினைப்பாள், நடப்பாள் என்பதை முற்றும் முடிவாக சொல்லவரும் இப்படம், இந்தப் பெண்ணை அல்லது பெண்களை சிந்தனை வளம் அற்றவராகக் குறிக்கிறது. வளர்ந்து வரும் பெண்ணின் இயல்பான பாலியல் கேள்விகள், ஒரு தாய்க்கு தேவையேயற்ற, கவனத்துக்கே எடுக்கப்படக் கூடாததாக ஆக்கப்பட்டுள்ளது. இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலும் பெண் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நப்பாசை நீள்கிறது.

இப்படத்தில் வள்ளியைத் தவிர வேறு எந்தப் பெண்ணுமே "நல்ல பெண்" இல்லை. ஏன் அவள் தாயை கவனித்து நல்ல பெண் ஆகிறாள். இந்தியப் பெண் கடவுள் பக்தி கொண்டவளாக்கி (இந்திய சினிமாக் காரர்கள் இவ்விடயத்தை கைவிடவே மாட்டார்களோ?) வள்ளி தன் இறுதி முடிவைச் சொல்லுமிடம் கோவிலாகவும் காட்டுவதன் நோக்கம் பெண்ணென்பவள் இந்தியப் பண்பாட்டை காப்பாற்ற வேண்டிய பொறுப்புடையவள், தன் பிள்ளைகளை இந்தியக் கலாசாரத்திலேதான் வளர்க்க வேண்டிய பொறுப்புடையவள், கணவன் மிக மோசமானவனாய் இருந்தாலும் அவனை சமாளித்துப் போக கடமைப்பட்டவள், என்றெல்லாம் இங்கே நிலை நாட்டப்படுகிறது. இந்தியப் பெண்ணின் விம்பம் இன்னோரிடத்தில்;

பிள்ளைகளுக்காக மீண்டும் கணவனோடு சேர்ந்து வாழ விரும்பி அவன் காதலியின் வீடு தேடிப்போகும் வள்ளி அங்கு பரிகாசத்துக்கும் கேலிக்கும் உள்ளாக்கப்படுகின்றாள். தான் தனியாய் நிற்பதை உணருகிறாள். இதன் பின்னணியில் அவளுக்கு விழிப்புணர்ச்சி உண்டாகின்றது.

(விஸ்வநாதன் வள்ளியுடன் வாழும் போது வள்ளியை மிகக் கேவலமாக நடத்துகிறான். நீ எனக்கு ஒரு வேலைக்காரி என்கிறான். அப்போது அவள் புண்பட்டாலும் வளைந்து கொடுக்கிறாள். ஆனால், லாவண்யா வள்ளியை அசிங்கமாகத் திட்டிய பின்னேதான் வள்ளிக்கு தெளிவு பிறக்கிறது. ஒரு பெண்மூலமே இன்னொரு பெண்ணைத் தூற்ற வைப்பது "ஆணின் குணம் இப்படித்தான் இருக்கும் கண்டு கொள்ள வேண்டாம்". என்ற சங்கதிகள் ஆணாதிக்கத்தின் சில பக்கங்கள்)

வள்ளி தனது இருப்பு, தான் இத்தனை காலம் வாழ்ந்த வாழ்வு பற்றிய கேள்விகளை பரிசீலித்துப் பார்க்கின்றாள். இந்தக் கேள்விகளுக்குள் கலாசாரமோ, குடும்ப நிறுவனமோ முன்நிற்கவில்லை. இவ்வளவு காலமும் தான் எவ்வளவு முட்டாள்தனாமாக வாழ்ந்திருக்கின்றேன், தான் எப்படி ஏமாற்றப்பட்டிருக்கின்றேன், குட்டக்குட்ட குனிந்தது போதும் என்று யோசிக்கிறாள். இங்கு அவளுக்குத் தன்னுடைய எதிர் காலம் பற்றிய பயம் ஏற்படுகின்றது. தந்தைக்கு போன பண்ணுகிறாள் இந்தியாவுக்கு பிள்ளைகளுடன் போய்விடுவதுதான் சரி என நினைக்கின்றாள். அங்கிருந்து மறுப்பு வருகின்றது. இனிமேல் தன் கையே தனக்குப் பலம் என்ற நினைப்பு தோன்றுகிறது. நிமிர்ந்து நிற்க வேண்டும். என்ற முடிவுக்கு வருகின்றாள். சிறகுகள் முளைக்கின்றன. சுதந்திரப் பறவையாய் மாறுகின்றாள். கோவிலில் மாக்கோலம் போடுவது, உணவு தயாரித்து ஓடருக்குத் தருவது, சுப்பர் மார்க்கட்டில் வேலை செய்வது, குசினியில் உழைப்பது, வளர்ந்து வரும் அவளின் தன்னம்பிக்கையின் மைல்கற்கள் இவளின் இந்தப் பலமே. தன் பற்றிய சுயகேள்வியே அவளை பின் நாட்களிலும் நிமிர வைக்கிறது.

இப்போதெல்லாம் வள்ளி சல்வார் கமிஸில் வருகின்றாள். (அவள் விழிப்புணர்ச்சி கொண்டாலும் இந்திய உடையில்தான் இருப்பாள்). அதாவது அவளிடம் புதிய சிந்தனைகளை உருவாக்கி விட்டதற்கு உடையும், அதுவும் இந்திய உடை பொருத்தமானது எனக் கூறப்படுகின்றது. மேற்கூறப்பட்ட "விழிப்புணர்ச்சிக்கு பின்னாலும் மீண்டும் பிள்ளைகளுக்காக கணவனை சேர்த்துக்கொள்ள உடன்படுகின்றாள்". ஒரு கட்டத்தில்.... அவள் கணவனே மீண்டும் அவளுடன் இணைய வருகின்றான். கணவன், வள்ளி சந்திரசேகரோடு இணைந்துவிடுவாளோ என்ற பயத்தில் பிள்ளையை பணயம் வைத்து வள்ளியை பயமுறுத்துகின்றான். என்ன காரணத்துக்காக கணவன் மீண்டும் தன்னுடன் இணைந்து கொள்ள வருகின்றான் என்பது அவளுக்கு தெரியவரும் போது அவளின் தன்மானம் பேசுகிறது. அவனைத் தூக்கியெறிகிறாள். வள்ளியின் இறுதி முடிவு தீர்க்கமாய் இருக்கிறது. ஒரு ஆளுமை கொண்ட பெண் வெளிப்படுகின்றாள். ஆனால் "எனது கலாசாரத்தில் தான் என் பிள்ளைகளை வளர்ப்பேன், அதற்கு நீ குறுக்கே நிற்பாய், அதற்காகவே நான் உன்னை சேர்த்துக் கொள்ள மாட்டேன்", என்று வள்ளி சொல்வது அவளின் இருப்பை, அவளுடைய வாழ்தலுக்கான போராட்டத்தை கொச்சைப் படுத்தியுள்ளது, இப்படத்தின் இறுதிக்கட்டம்.

உலகின் எல்லா மூலைகளிலும் வர்க்கங்களிலும் பெண் தன் இருப்புக்காகவே போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்ற இக்காலகட்டத்தில் வெளியாகும் படங்களில் ஒன்றான இந்த "சிறகு"கள் படத்திலும் கூட "ஆணாதிக்கம் வைத்திருக்கும் பெண்கோட்பாடு இதுதான்" என்ற விடயம், பெண் விடுதலைக்கு மேலாக உரத்துப் பேசப்பட்டுள்ளது.



**மலையாள மாந்திரீகம்**

பிரிந்தவர்களை ஒன்று சேர்க்க, விட்டு சென்றவர்களை அழைத்து எடுக்க, கணவன், மனைவி தன்னை விட்டு பிரியாமல் இருக்க, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரயாண தடை நீங்க, தடைப்பட்ட திருமணம் கைகூட, காதல் வெற்றி பெற, வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும். நேரடி தொடர்புகளுக்கு

T.P. 01-466271

கருணாகரபூசணம், உலக மலையாள மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி P.K. Sammy (J.D.GN) J.P

162, Kotahena St, Mayfield Rd, Col-13 Tel: 01-342463 Fax: 0094-1-344831
E-Mail: drpksamy @ sltnet. lk Web site: www.imexpolanka.com/drpksami

வழமைபோல் நுவரெலியாவிலும் எமது சேவை நடைபெறுகிறது.






**ஜாதகம்**


அருள் ஞானத்துடன் கூறப்படும் தெட்டத்தெளிவான ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்கப்போவதுடன், திருமணம் எப்போது எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு, வாழ்வில் அதிர்ஷ்டம் எப்போது என்பதை என்னால் கூறமுடியும். தேவைகளுக்கு நேரில் வருவது சாலச்சிறந்தது. விபரங்கள் அறிய திகதி, மாதம், வருடம் போதுமானது. கைரேகை என்றால் திகதி, மாதம், வருடம் தேவையில்லை.

தொடர்புகளுக்கு மலையால மாந்திரீக சக்கரவர்த்தி துர்க்கை சித்தர் டாக்டர் பி.கே.சாமி,( J.D.G.A.N ) J.Pஇல. 162, கொட்டாஞ்சேனை வீதி மேபீல்ட் ரோட், கொழும்பு- 13 தொ.பே 466620


# அணுகுண்டும் யப்பானிய தேசமும்




16.07.1945 அன்று இடம்பெற்ற அணுகுண்டுப் பரிசோதனையின் பின்னர் அதன் அபாயம் குறித்து அமெரிக்க ஜனாதிபதிக்கு விளக்கும் அணுகுண்டு விஞ்ஞானிகளான ஐன்ஸ்டீனும் லியோ சிலாட்டும்.



கிரோசிமாவில் அணுகுண்டு வீசப்பட்ட வேளையில் முற்றிலுமாக அழிந்துபோன சிம்மா மருத்துவமனையில் எஞ்சியிருந்தமாடமே இன்று அணுகுண்டு கோபுரம் என்ற அழைக்கப்படுகின்றது.

"நானே பிரபஞ்ச நிர்மூலம், நானே மரணம்" என்ற பகவத் கீதையின் வரிகளை நிகழ்காலத்திற்கு கொண்டுவந்த அணுகுண்டு, முதன் முதலாக 1945ஆம் ஆண்டு ஜுலை மாதம் 16ம் திகதி அதிகாலை 5.30 மணிக்கு நியூமெக்சிக்கோ பாலைவனத்தில் வைத்து பரீட்சிக்கப்பட்டது. இப் புறுட்டோனியக் குண்டு பரிசோதனை நடவடிக்கையை அமெரிக்கத் தளபதி மேஜர் ஜெனரல் லெஸ்லி ஆர். குறே அவர்கள் வழிநடத்தினார். இவ் அணுகுண்டினை றோபேட் ஒப்பன் கெய்மன் தலைமையிலான அமெரிக்க விஞ்ஞானிகள் குழுவினர் தயாரித்தனர். இவர்களால் பிரபல



நாகசாகி மீது வீசப்பட்ட குண்டு மனிதன் எனும் பெயர் சூட்டப்பட்ட புளூட்டோனியம் அணுகுண்டு.

யூத விஞ்ஞானியான ஐன்ஸ்டீனின் சார்புக் கொள்கையை (RELATIVITY) அடிப்படையாகக் கொண்டு இவ் அணுக்குண்டு தயாரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

2000 மில்லியன் டொலர் செலவில் தயாரிக்கப்பட்ட புறுட்டோனியம் அணுக்குண்டு பரிசோதனைக்கென எடுத்துவரப்பட்டது. அமெரிக்காவின் நியூமெக்சிக்கோ பாலைவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு 100 மீற்றர் உயரமுள்ள எஃகு கோபுரத்தின் மீது ஏவப்பட்டு 9 கி.மீ தூரத்தில் வைத்து வெடிக்கப்பட்டது. 20 கிலோதொன் TNT வெடியோசையோடு 12000 மீற்றர் உயரத்திற்கு காளான் வடிவத்தில் உயரெழுந்தது. கண்ணாடிப்பாளமாய் பாலைவனம் மின்னியது. முதல் பரிசோதனையில் அணுக்குண்டின் தாக்க வீதத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்த விஞ்ஞானிகள் ஒரு போதும் அணுக்குண்டு யுத்தத்திற்கு பயன்படுத்தக் கூடாது என அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியிடம் வேண்டினர். இவர்களின் பரிந்துரைகள் எதனையும் செவிமடுக்கத் தயாரில்லாத நிலையிலேயே அமெரிக்க ஆளும் தரப்பு விளங்கியது.

இரண்டாம் உலகப் போரை முடிவுக்கு கொண்டு வருவதோடு, கிழக்காசியாவின் சூரியன் என வர்ணிக்கப்பட்ட கைத்தொழில் நாடான யப்பானை ஒரு போதும் தலையெடுக்கவிடாமல் செய்வதற்கும், அமெரிக்க வல்லாண்மையை உலகிற்கு காண்பிப்பதற்குமாக யப்பானின் நகரங்கள் மீது அணுகுண்டுகள் வீசுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அந்த வகையில் யப்பானில் சனநெரிசல் மிக்கதும் வளம் நிறைந்ததுமான நகரங்களான கிரோசிமா, நாகசர்கி, குக்றோ, நிகாட்டா ஆகிய நகரங்கள் தெரிவு செய்யப்பட்டன. இவற்றுள் வளம்மிக்கதும் கப்பல் கட்டும் தளத்துடன் விளங்கியதுமான கிரோசிமா மீது முதலில் தாக்குதல் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு மற்றொரு காரணமும் இருந்தது. இரண்டாம் உலகப் போரின் உக்கிரம் காரணமாக யப்பான் தனது இராணுவக் கட்டளைப் பீடங்களை இரு பிரிவாக்கியிருந்தது. பிரதான கட்டளைப் பீடம் டோக்கியோவிலும், இரண்டாம் கட்டளைப் பீடம் மாார்சல் கண்றொக்கோ கட்டா தலைமையில் கிரோசிமாவிலும் நிறுவப்பட்டிருந்தது. நகரத்தை அமெரிக்கரின் பறக்கும் கோட்டை என்றழைக்கப்படும் ரு-29 குண்டு வீச்சு விமானங்களிலிருந்து பாதுகாக்க என பலமான விமான எதிர்ப்பு நிலைகளை யப்பானியர் மேற்கொண்டிருந்தனர்.

பொருளாதார வளம்மிக்கதும், இராணுவ வலுமிக்கதும் யப்பானிய பிரதான தரைப்பரப்புகளில் ஒன்றான டினியன் தீவில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருந்ததுமான கிரோசிமா நகர் மீது 1945 ஒகஸ்ட் ஆறாம் திகதி காலை யப்பானிய நியம நேரப்படி 8. 15ற்கு அணுகுண்டு வீசப்பட்டது. சின்னப் பையன் (SMALL VOY) என்ற குறியீட்டுப் பெயரிடப்பட்ட யூரேனியக்குண்டே வீசப்பட்டு. இக்குண்டினை அமெரிக்க விமானியான கேணல் போல் ரிப்பேற்ஸ் அவரது தாயாரின் பெயரான எலோன் கேய் எனப் பெயர் சூட்டப்பட்ட ரு- 29 ரக குண்டு வீச்சு விமானத்தில் கொண்டு வந்து கிரோசிமாக நகர் மீது தாக்குதல் நடத்தினார். எலோகேய் விமானத்திலிருந்து 31050 அடி உயரத்தில் வீசப்பட்ட அணுக்குண்டு 43 விநாடிகளின் பின்னர் 580 மீற்றர் உயரத்தில் ஒட்டா நதியின் பாலத்தின் மேல் விழுந்து வெடித்தது.

அந்தப் பிரதேசத்தின் வெப்பநிலை உடனடியாக 4000 OC ற்கு உயர்ந்தது. விழுந்த இடத்தில் இருந்த அனைவரும் கருகி மாண்டனர். ஒரு மைல்சுற்றுவட்டாரத்திற்குள் அகப்பட்ட அனைத்தும் மண்மேடாயின. மூன்று கிலோமீட்டர் சுற்று வட்டாரத்துக்குள் அகப்பட்டிருந்த அனைத்துக்கட்டிடங்களும் இடிபாடுகளுக்குள்ளாயின. அணுகுண்டு வெடிப்புக்குள் அகப்பட்டு கிரோசிமாக அரச அத்தாணி மண்டபம், நகர மண்டபம் உட்பட அரச நிர்வாகக் கட்டிடங்கள் அனைத்தும் நிர்மூலமாயின.

கிரோசிமா நகர மேயர் திரு. அசவாயா உட்பட நகரத்தின் முக்கிய பிரமுகர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர்.



16.07.1945 அன்று நியூமெக்சிக்கோவில் மேற்கொள்ளப்பட்ட. அணுகுண்டுப் பரிசோதனை.

இச்சம்பவம் நடைபெற்ற இடத்தில் அகப்பட்டு உடனடியாக 140, 000 யப்பானியர் உயிரிழந்தனர் குண்டு வெடிப்பினை அடுத்து கறுப்பு அமில மழை பெய்தது. 30,000 அடிகளுக்கு காளான் வடிவில் வெண் புகைக்கூட்டம் மேலெழுந்தது.

கிரோசிமா நகரைச் சுற்றிலும் அரணமைத்து நிலைகொண்டிருந்த யப்பானிய இராணுவத்தினர் அனைவரும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டனர். 945 ஆகஸ்ட் 6ம் திகதி மாலையே சகானுக் மாகாண உதவிப் பொலிஸ்மா அதிபர், கிரோசிமா நகர பொலிஸ் அதிகாரி, நகரப் பிரதிப் பொலிஸ் அதிகாரியும் வேறு மாநில மொன்றுக்கு சென்று திரும்பியவேளையிலேயே தமது நகருக்கு நேர்ந்த அவலத்தை கண்ணுற்றனர். அவர்களே உலகிற்கும், யப்பானிய தலைமைப் பீடத்திற்கும் 13 மணித்தியாலங்களின் பின்னர் கிரோசிமா நகரின் பேரழிவை அறிவித்தனர். அவர்கள் ஒன்றுகூடி கிஜியாமா பூங்காவின் நுழைவாயில் இருந்த டாமன் தேவாலயத்தை தற்காலிக நிர்வாக காரியாலயமாக்கிக் கொண்டனர். அத்துடன் விமான எதிர்ப்புத் தளம் ஒன்றினையும் நிறுவிக் கொண்டனர். மீட்பு வேலைகளுக்கென அகாட்சுகி தொண்டர் படையினர் உணினா படைத்தளத்திலிருந்தும் கடற்படையினரும் அனுப்பப்பட்டனர். இவர்கள் சிறிய மருத்துவமனைகளினை அமைத்துக் கொண்டு மீட்பு வேலைகளை மேற்கொண்டனர்.

இருந்த போதிலும் மீட்பு வேலைகள் அவர்களால் மட்டுப்படுத்தப்பட்ட வகையிலேயே மேற்கொள்ளப்பட்டன.

யுரேனியக் குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் மீளக்குடியேறிய கிரோசிமா மக்கள் பஞ்சம், வேலைவாய்ப்பின்மை முதலானவற்றால் அல்லாடினர். தகரங்கள் மற்றும் பலகைகளைப் பயன்படுத்தி தற்காலிக வசிப்பிடங்களை அமைத்து தமது வாழ்வை மீள ஆரம்பித்த வேளையில் "பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாய் " 1945 செப்டெம்பர் 17ம் திகதி ஏற்பட்ட கடும் சூறாவளியினால் பாதிப்படைந்தனர். எல்லாமாக இவ் அணுக்குண்டுத் தாக்குதலில் நேரடியாகவும், கதிர்வீச்சினாலும் 310,000 பேர் உயிரிழந்தனர்.

யுரேனியம் குண்டு வீச்சோடு நிறுத்திக் கொள்ளாத அமெரிக்கா, யப்பான் மீது புளூட்டோனியம் குண்டுத் தாக்குதலுக்கும் திட்டமிட்டது. கிரோசிமா மீது வீசப்பட்ட சின்னப்பையன் யுரேனியக் குண்டிலும் விட பரிமாணத்திலும் பெரியதாக குண்டுமனிதம் (FATMAN) எனக் குறியீட்டுப் பெயர் சூட்டப்பட்ட புளூட்டோனியம் குண்டு வீசப்படுவதற்கு நாகசாக நகர் தெரிவு செய்யப்பட்டது. 1945 ஒகஸ்ட் 9ஆம் திகதி மு.ப 11.02 மணிக்கு 500 மீற்றர் உயரத்தில் குண்டு வெடித்தது. இக்குண்டின் கதிர்வீச்சுத் தாக்கம் 6.7 மில்லியன் சதுர கிலோ மீற்றருக்கு இருந்தது. இக்குண்டினால் 20,000 வீடுகள் எரிந்தழிந்து போயின. 74000, யப்பானியர் மாண்டு போயினர். அதே அளவான யப்பானியர்கள் அணுக்கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டு செயலிழந்து போயினர். மொத்தத்தில் 150,000 யப்பானியர்கள் பாதிக்கப்பட்டனர்.

தனது ஆதிக்க நலன்களுக்காக முதன் முதலாக ஆசியாக் கண்டத்தில் அமெரிக்கா அணுக்குண்டு அனர்த்தத்தை விளைவித்தது. இன்று ஈரான், இந்தியா, பாகிஸ்தான், வடகொரியா, இஸ்ரேல் முதலானவற்றோடு ஐந்து வல்லரசு நாடுகள் உட்பட பத்திற்கும் மேற்பட்ட நாடுகள் அணுக்குண்டுத் தலைகளை (ATOMATIC WAR HEAS) வைத்துக் கொண்டு உலகைப் பயமுறுத்தியபடி உள்ளன.

இரண்டாம் உலகப் போரில் மிக மோசமான அழிவுகளைச் சந்தித்த யப்பான் இன்று கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் மூலம் 85வீதம் தனது வருமானத்தை ஈட்டி, உலகின் முதலாவது கைத்தொழில்நாடு என்ற அந்தஸ்த்தை வகித்து வருகின்றது.

அது மாத்திரமன்றி, ஆசியாவின் கல்வி, மருத்துவம் முதலான சமூக நல்வாழ்வு சுட்டிகளிலும் முதலாம் இடத்தை வகிக்கின்றது. "சாம்பல் மேட்டிலிருந்து எழும் பீனிக்ஸ் பறவைகள்" போன்று, இன்று உலகின் முன்னே யப்பான் தனக்கே உரித்தான பாணியில் எழுந்து நிற்கின்றது.

இற்றைக்கு 55 வருடங்களின் முன்னர் எல்லாவற்றையும் போரில் இழந்த யப்பானிய மக்களின் வளர்ச்சி, போரினால் கடும் பாதிப்புக் குள்ளான தேசிய இனங்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக விளங்குகின்றது. இதனையே அணுக்குண்டு அனர்த்தத்தின் 50 ஆம் ஆண்டு பூர்த்தியின் போது கிரோசிமாவின் நகரபிதா அழகாகக் கூறினார். "இந்தச் சம்பவம் எமது மக்களின் மனதில் ஆழமாகப் பதிந்து விட்ட ஒன்று. எமது உடலையும் உளத்தையும் இது சரியாகப் பாதித்துள்ளது. இருந்த போதிலும் நாம் மனந்தளர்ந்து விடவில்லை. எம் எதிர்கால நல்வாழ்விற்கான போராட்டம் இனியும் தொடரும்" என அவர் கூறினார்.

இப் பத்திரிகை ராவய பப்ளிஷன் (கரன்ட்) லிமிட்டெட்டாரால் மஹரகம பிலியந்தல வீதி 83ம் இலக்க ராவய அச்சகத்தினால் 2000ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.